# www.Padasalai.Net

பாடசாலை

## Padasalai Official – Android App – Download Here

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!

| 12th Standard | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| 11th Standard | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| 10th Standard | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6th Standard | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1st to 5th Standard | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Exams | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| Portal | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| Volunteers | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Downloads | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID –** Padasalai.net@gmail.com

salai.Net www.TrbT

# டால்பின்®

## உன்னால் முடியும்

புதிய பதிப்பு - 2020

12

# தமிழ்

100/100 உறுதி



PTA, அரசுத்தேர்வு வினாக்களுக்குரிய விடைகள் இணைக்கப்பட்டுள்ளன

DP® டால்பின் பப்ளிகேசன்ஸ்®

ur Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gm

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

# டால்பின்

## உன்னால் முடியும்

# தமிழ்

புதிய பதிப்பு 2020

# 12

**PTA, அரசுத்தேர்வு வினாக்களுக்குரிய விடைகள் இணைக்கப்பட்ட சிறப்பு நூல்**

நூலாசிரியர்
குருசடி எம்.ஏ. ஜெலஸ்டின் M.A.,B.Ed.,M.Phil.,
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேல்நிலைப்பள்ளி, நாகர்கோவில்.

98653 06197 | 89256 77710 | 99435 67646
டால்பின் பப்ளிகேசன்ஸ்®
தரமே எங்களின் தாரக மந்திரம்
239, கீழப்பட்டி தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம், த.நா.
Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.in

© All Copyrights reserved

விலை : ரூ.252

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# பதிப்புரை

அன்புமிகு மாணவச் செல்வங்களே

வாழ்வு எனும் பாதையில் – இது
வசந்தகாலப் பருவம் – நீங்கள்
பள்ளிச்சாலையில் நல்ல பயணம் மேற்கொண்டு
வாழ்வில் வசந்தத்தை உணர்த்திட
கற்றல் உங்களுக்கு அவசிய மாகும்.....
கற்றிட இந்நூல் உங்களுக்கு உதவும்....

உங்கள் கரங்களில் தவழும் 12 **ஆம் வகுப்பு டால்பின் உன்னால் முடியும்** துணைவன் தமிழக அரசின் புதிய பாடத்திட்டத்தின்படி புதிய வினாத்தாளைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் ஒவ்வொரு இயலிலும் உள்ள செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம் ஆகிய பகுதிகளில் எளிதில் புரியும் விதத்தில் வினா விடைகளும், புரிந்து எழுதும் கேள்விகளும், பொதுத் தேர்விற்கான வினாத்தாளில் இடம்பெறும் வினாவடிவமைப்பிற்கு ஏற்ப ஒரு மதிப்பெண் வினாக்களும், மொழிப்பயிற்சி வினாக்களும், பெற்றோர் ஆசிரியர் கழக அரசு மாதிரி வினாத்தாள்களும் உரிய விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்நூலைக் கற்பதால் மாணாக்கர்கள் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற எளிதாக இருக்கும்.....!

அறிவார்ந்த மாணவச் செல்வங்களே !

நீங்கள் கற்று வாழ்வில் உயர்ந்திட
எங்கள் டால்பின் உன்னால் முடியும் துணைவன் மூலம்
உங்கள் அனைவரையும் வாழ்த்துகின்றோம்....!

**வேரின் வெற்றி ; பூவின் மகிழ்ச்சியாகும் ;**
**உங்களின் வெற்றி எங்களுக்கு மகிழ்ச்சியாகும்...........**

வாழ்த்துகளுடன்
டால்பின் பதிப்பகத்தார்.

## புத்தகங்களைப் பெறுவதற்கு

**மரியாதைக்குரிய தலைமையாசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு !**

வணக்கம். **டால்பின் பப்ளிகேஷன்ஸ்** நிறுவனத்திற்கு தாங்கள் வழங்கி வருகின்ற பேராதரவிற்கு எங்களின் சிறம்தாழ்ந்த நன்றிகள். நீங்களே எங்களின் வளர்ச்சியின் அடித்தளம். தற்பொழுது தாங்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களை பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றி பெற்றுக்கொள்ளலாம்.

**புத்தகங்களைப் பெற**

அலைபேசி எண் (Mobile No) : **9865306197 / 8925677710 / 9943567646**

கட்செவி எண் (Whatsapp No) : **9345314146**

குறுஞ்செய்தி (Sms) : **9345330937**

வலைதளம் (Website) : **www.kalvidolphin.in**

மின்னஞ்சல் (E-mail ID) : **dolphin.pub2005@gmail.com**

## பணம் செலுத்துவதற்கான விவரங்கள்

**கேட்பு வரைவோலை (D.D.) அல்லது காசோலை (Cheque) :**

டால்பின் பப்ளிகேஷன்ஸ் - ஸ்ரீவில்லிபுத்தூர் **(DOLPHIN PUBLICATIONS, SRIVILLIPUTTUR)** என்ற பெயருக்கு எடுக்க - கொடுக்கப்பட வேண்டும்.

நீங்கள் எங்களின் மின்னஞ்சல் முகவரிக்கு **dolphin.pub2005@gmail.com** மின்னஞ்சல் **(E-Mail)** மூலமாகவும் தங்களுக்குத் தேவையான புத்தக விவரங்களை அனுப்பலாம்

**மாணவர்கள் :**

நீங்கள் எங்களின் மின்னஞ்சல் முகவரிக்கு **dolphin.pub2005@gmail.com** மின்னஞ்சல் **(E-Mail)** மூலமாகவும் தங்களுக்குத் தேவையான புத்தக விவரங்களை அனுப்பலாம்.

( அல்லது )

கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பணவிடை **(M.O.-Money Order)** அனுப்புவதன் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்

## வங்கி கணக்கு விவரங்கள்

| TAMILNADU MERCANTILE BANK | | CITY UNION BANK | |
|---|---|---|---|
| A/C No | : 328150310875103 | A/C No | : 328109000204092 |
| IFSC CODE | : TMBL0000328 | IFSC CODE | : CIUB0000328 |
| BRANCH | : Srivilliputtur | BRANCH | : Srivilliputtur |

**✷ பணம் செலுத்திய பின் தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கவும் ✷**

## தொடர்புக்கு :

98653 06197 | 89256 77710 | 99435 67646

**டால்பின் பப்ளிகேசன்ஸ்®**

தரமே எங்களின் தாரக மந்திரம்

239, கீழப்பட்டி தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம், த.நா.

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.in

# பொருளடக்கம்



| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| | நூலும் ஆசிரியரும் | | | i |
| | மனப்பாடப் பகுதிகள் | | | ii |
| 1. | உயிரினும் ஓம்பப்படும் | உயிரினும் ஓம்பப்படும் | | 1 |
| | | செய்யுள் | இளந்தமிழே! | 13 |
| | | உரைநடை | தமிழ்மொழியின் நடை அழகியல் | 17 |
| | | செய்யுள் | தன்னேர் இலாத தமிழ் ☆ | 21 |
| | | துணைப்பாடம் | தம்பி நெல்லையப்பருக்கு | 25 |
| | | இலக்கணம் | தமிழாய் எழுதுவோம் | 27 |
| 2. | பெய்யெனப் பெய்யும் மழை | பெய்யெனப் பெய்யும் மழை | | 28 |
| | | உரைநடை | பெருமழைக்காலம் | 42 |
| | | செய்யுள் | பிறகொரு நாள் கோடை | 49 |
| | | செய்யுள் | நெடுநல்வாடை ☆ | 51 |
| | | துணைப்பாடம் | முதல்கல் | 56 |
| | | இலக்கணம் | நால்வகைப் பொருத்தங்கள் | 59 |
| 3. | சுற்றத்தார் கண்ணே உள | சுற்றத்தார் கண்ணே உள | | 62 |
| | | உரைநடை | தமிழர் குடும்ப முறை | 85 |
| | | செய்யுள் | விருந்தினர் இல்லம் | 92 |
| | | செய்யுள் | கம்பராமாயணம் ☆ | 96 |
| | | துணைப்பாடம் | உரிமைத்தாகம் | 105 |
| | | இலக்கணம் | பொருள் மயக்கம் | 109 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ☆ | 112 |
| 4. | செல்வத்துள் எல்லாம் தலை | செல்வத்துள் எல்லாம் தலை | | 123 |
| | | உரைநடை | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் | 138 |
| | | செய்யுள் | இதில் வெற்றி பெற ☆ | 147 |
| | | செய்யுள் | இடையீடு | 152 |
| | | செய்யுள் | புறநானூறு ☆ | 155 |
| | | துணைப்பாடம் | பாதுகாப்பாய் ஒரு பயணம் | 160 |
| | | இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் | 163 |
| 5. | நாடென்ப நாட்டின் தலை | நாடென்ப நாட்டின் தலை | | 169 |
| | | உரைநடை | மதராசப்பட்டினம் | 181 |
| | | செய்யுள் | தெய்வமணிமாலை ☆ | 194 |
| | | செய்யுள் | தேவாரம் | 198 |
| | | செய்யுள் | அகநானூறு | 202 |
| | | துணைப்பாடம் | தலைக்குளம் | 208 |
| | | இலக்கணம் | படிமம் | 211 |

| இயல் | பொருளடக்கம் | | பாடத்தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|---|---|
| 6. | சிறுகை அளாவிய கூழ் | சிறுகை அளாவிய கூழ் | | 217 |
| | | உரைநடை | திரைமொழி | 240 |
| | | செய்யுள் | கவிதைகள் | 249 |
| | | செய்யுள் | சிலப்பதிகாரம் ☆ | 251 |
| | | செய்யுள் | மெய்ப்பாட்டியல் | 259 |
| | | துணைப்பாடம் | நடிகர் திலகம் | 266 |
| | | இலக்கணம் | காப்பிய இலக்கணம் | 270 |
| | | வாழ்வியல் | திருக்குறள் ☆ | 275 |
| 7. | அருமை உடைய செயல் | அருமை உடைய செயல் | | 276 |
| | | உரைநடை | இலக்கியத்தில் மேலாண்மை | 292 |
| | | செய்யுள் | அதிசயமலர் | 300 |
| | | செய்யுள் | தேயிலைத் தோட்டப் பாட்டு | 302 |
| | | செய்யுள் | புறநானூறு ☆ | 305 |
| | | துணைப்பாடம் | சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் | 307 |
| | | இலக்கணம் | தொன்மம் | 308 |
| 8. | எல்லா உயிரும் தொழும் | எல்லா உயிரும் தொழும் | | 313 |
| | | உரைநடை | நமது அடையாளங்களை மீட்டவர் | 327 |
| | | செய்யுள் | முகம் | 332 |
| | | செய்யுள் | இரட்சணிய யாத்ரிகம் ☆ | 335 |
| | | செய்யுள் | சிறுபாணாற்றுப்படை ☆ | 340 |
| | | துணைப்பாடம் | கோடை மழை | 350 |
| | | இலக்கணம் | குறியீடு | 352 |
| | அணி, திணை, துறை, கூற்று | பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள அணி இலக்கணம் | | 355 |
| | | பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள திணைகள் | | 357 |
| | | பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள துறைகள் | | 359 |
| | | பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள கூற்று | | 360 |
| | பழமொழிகள் | பழமொழிகளை வாழ்வியல் நிகழ்வில் அமைத்து எழுதுதல் | | 360 |
| | வினாவங்கி | அரசு பொதுத்தேர்வு 2020 | | 371 |
| | | அரசு மாதிரி வினாத்தாள் | | 373 |
| | | பெற்றோர் ஆசிரியர் கழகம் 1 முதல் 6 வினாத்தாள்கள் | | 375 |


☆ (பெ.ஆ.க - பெற்றோர் ஆசிரியர் கழகம்)

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# நூலும், ஆசிரியரும்

| செய்யுள் / கவிதைப்பேழை | | |
|---|---|---|
| 1. | இளந்தமிழே | சிற்பி பாலசுப்பிரமணியம் |
| 2. | தண்டியலங்காரம் | தண்டி |
| 3. | பிறகொரு நாள் கோடை | அய்யப்ப மாதவன் |
| 4. | நெடுநல்வாடை | நக்கீரர் |
| 5. | விருந்தினர் இல்லம் | ஜலாலுத்தீன் ரூமி |
| 6. | கம்பராமாயணம் | கம்பர் |
| 7. | திருக்குறள் | திருவள்ளுவர் |
| 8. | இதில் வெற்றி பெற | சுரதா |
| 9. | இடையீடு | சி.மணி |
| 10. | புறநானூறு | ஔவையார் |
| 11. | தெய்வமணிமாலை | இராமலிங்க அடிகள் |
| 12. | தேவாரம் | திருஞானசம்பந்தர் |
| 13. | அகநானூறு | அம்மூவனார் |
| 14. | கவிதைகள் | நகுலன் |
| 15. | சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| 16. | தொல்காப்பியம் - மெய்ப்பாட்டியல் | தொல்காப்பியர் |
| 17. | அதிசய மலர் | தமிழ்நதி |
| 18. | தேயிலைத் தோட்டப் பாட்டு | முகம்மது இராவுத்தர் |
| 19. | புறநானூறு | பிசிராந்தையார் |
| 20. | முகம் | சுகந்தி சுப்பிரமணியன் |
| 21. | இரட்சணிய யாத்திரிகம் | எச்.ஏ.கிருட்டிணனார் |
| 22. | சிறுபாணாற்றுப்படை | நத்தத்தனார் |

| உரைநடை | | |
|---|---|---|
| 1. | தமிழ்மொழியின் நடை அழகியல் | தி.சு.நடராஜன் |
| 2. | தமிழர் குடும்ப முறை | பக்தவத்சல பாரதி |
| 3. | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் | உ.வே.சாமிநாதர் |
| 4. | இலக்கியத்தில் மேலாண்மை | வெ.இறையன்பு இ.ஆ.ப. |

| விரிவானம் / துணைப்பாடம் | | |
|---|---|---|
| 1. | தம்பி நெல்லையப்பருக்கு (பாரதியின் கடிதம்) | பாரதியார் |
| 2. | முதல்கல் | உத்தமசோழன் |
| 3. | உரிமைத்தாகம் | பூமணி |
| 4. | தலைக்குளம் | தோப்பில் முகமது மீரான் |
| 5. | நடிகர் திலகம் | பாலச்சந்திரன் சுள்ளிக்காடு |
| 6. | சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் | ஐராவதம் மகாதேவன் |
| 7. | கோடை மழை | சாந்தா தத் |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# மனப்பாடப் பகுதிகள்

## இயல் - 1

### தண்டியலங்காரம்

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் -ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

## இயல் - 2

### நெடுநல்வாடை

'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்படையூஉ நடுங்க

- **நக்கீரர்** (பெ.ஆ.க-3)

## இயல் - 3

### கம்பராமாயணம்

2. 'துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்

(**பெ.ஆ.க-1,மார்ச்.20**)

9. குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

- **கம்பர்**

## இயல் - 4

### இதில் வெற்றி பெற

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

- **சுரதா**

### புறநானூறு

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே. (206)

- **ஔவையார்**

## இயல் - 5

### தெய்வமணிமாலை

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும். (**பெ.ஆ.க-2**)

- **இராமலிங்க அடிகள்**

## இயல் - 6

### சிலப்பதிகாரம்

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை (95-142)

- **இளங்கோவடிகள்** (**பெ.ஆ.க-5**)



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## இயல் - 7

### புறநானூறு

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்;
**- பிசிராந்தையார்**

## இயல் - 8

### சிறுபாணாற்றுப்படை

...... என ஆங்கு
எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்....
**- நத்தத்தனார்**

## இயல் - 8

### இரட்சணிய யாத்திரிகம்

2. பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி **(பெ.ஆ.க-4,6)**
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி. **- எச்.ஏ.கிருட்டிணனார்**

## இயல் - 3

## திருக்குறள்

### இல்வாழ்க்கை

1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

3. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

### செய்ந்நன்றி அறிதல்

4. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

8. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. **(பெ.ஆ.க-2)**

9. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. **(பெ.ஆ.க-4,6)**

### வெஃகாமை

12. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

### வெகுளாமை

15. மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.

17. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

18. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**ஊழ்**

19. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும். **(பெ.ஆ.க-5)** **- திருவள்ளுவர்**

## இயல் - 6

## திருக்குறள்

**அறிவு உடைமை**

1. அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. **(பெ.ஆ.க-1,3)**

5. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

**சிற்றினம் சேராமை**

7. நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

**வினைத்திட்பம்**

8. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

9. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். **(மார்ச்.20)**

11. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

**தூது**

12. கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

**உட்பகை**

15. வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

**சூது**

20. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின். **- திருவள்ளுவர்**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com







எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!


- பாரதிதாசன்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# இயல் 1 உயிரினும் ஓம்பப் படும்

*மொழி*



இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் – பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பாறை, மாங்குளம், மதுரை.

## கற்றல் நோக்கங்கள்

- கவிஞரின் மொழிப்பற்றைத் தாமும் உணர்ந்து பிறருக்கும் உணர்த்துதல்.
- மொழி வெளிப்படுத்தும் நடையியல் கூறுகளைப் படித்துணர்ந்து தமிழ்மொழியின் நுட்பம் அறிதல்.
- மரபுக் கவிதையினைப் பொருளுணர்ந்தும் சீர்பிரித்தும் படிக்கும் ஆற்றல் பெறுதல்.
- கடித இலக்கியத்தின் வாயிலாகச் சமூக உணர்வை வெளிப்படுத்தும் திறன் வளர்த்தல்.
- மொழியின் அடிப்படை இலக்கணத்தை அறிந்து பிழையின்றி எழுதும் திறன் பெறுதல்.

## பாடப் பகுதி

**இளந்தமிழே! – சிற்பி பாலசுப்பிரமணியம்**

**தமிழ்மொழியின் நடை அழகியல் – தி.சு. நடராசன்**

**தன்னேர் இலாத தமிழ்**

**தம்பி நெல்லையப்பருக்கு – பாரதியார்**

**தமிழாய் எழுதுவோம்**

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## இலக்கணத் தேர்ச்சிகொள் (பக்கம்.17)

1. **பிழையான தொடரைக் கண்டறிக. (ப.ஆ.க-2,6)**

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர் ஆ) மலைமீது ஏறி கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்

இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

**[இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது]**

2. **பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.**

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும் ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது

இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன

**[அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்]**

3. **முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.**

**முடிந்தால் தரலாம்:**

ஒரு பொருளைக் கொடுக்க முடிந்தால் கொடுக்கலாம் என்ற பொருளைத் தருகின்றது.

**முடித்தால் தரலாம்:**

தரப்பட்டுள்ள வேலையை முடித்துவிட்டேன் என்றால் தரலாம் என்ற பொருளைத் தருகின்றது.

- மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவைப்படும் பொருட்களை **முடிந்தால் தரலாம்.**
- ஆசிரியர் கூறியபடி செயல்திட்டப் பதிவேடுகளை **முடித்தால் தரலாம்.**

4. **தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?**

- எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும். ந, ண, ன / ல, ள / ழ, ற, ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து ஒலிக்க வேண்டும்.
- தமிழில் இவ்வெழுத்துகள் வரும் முறையையும் அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிந்து கொள்வது இன்றியமையாத ஒன்றாகும்.
- எழுதும்போது தொடக்கத்தில் சிலகாலம் வாய்விட்டோ அல்லது மனத்துக்குள் உச்சரித்தபடியோ எழுதப்பழகுவது நல்லது.
- வேகமாக எழுத முயல்வது பிழைக்கு வழிகோலும், எனவே நிதானமாக எழுதுவது நல்லது.
- கெ, கே, கொ, கோ போன்ற கொம்புடைய குறில் நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுத வேண்டும்.

## நம்மை அளப்போம் (பக்கம்.18)

### பலவுள் தெரிக.

1. **இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்**

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல் **[இ) தொல்காப்பியம்]**

2. **''மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு'' கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்**

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ) பொதிகையில் தோன்றியது

ங) வள்ளல்களைத் தந்தது.

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி இ) ங மட்டும் சரி ஈ) கங இரண்டும் சரி

**[ஈ) கங இரண்டும் சரி]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



3. ''மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னோர் இலாத தமிழ்!'' இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம். **(ப.ஆ.க-1)**

அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர் மோனை, சீர் எதுகை
இ) அடி எதுகை, சீர் மோனை ஈ) சீர் எதுகை, அடிமோனை

**[இ) அடி எதுகை, சீர் மோனை]**

4. கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய் பயனிலை என்று வருவதே மரபு.
கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது. **(ப.ஆ.க-5)**

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு **[இ) இரண்டு கருத்தும் சரி]**

5. பொருத்துக.

**அ) தமிழ் அழகியல்** - 1. பரலி சு. நெல்லையப்பர் **(ப.ஆ.க-2)**
**ஆ) நிலவுப்பூ** - 2. தி.சு.நடராசன்
**இ) கிடை** - 3. சிற்பி.பாலசுப்பிரமணியம்
**ஈ) உய்யும் வழி** - 4. கி.ராஜநாராயணன்

அ) 4 3 2 1 ஆ) 1 4 2 3 இ) 2 4 1 3 ஈ) 2 3 4 1 **[ஈ) 2 3 4 1]**

## குறுவினா

1. **நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.**

- கவிதையின் இயங்காற்றல்தான் நடை எனப்படும். தொல்காப்பியமும் இதனையே கூறுகின்றது. 'நடைபெற்றியலும்', 'நடை நவின்றொழுகும்' என்னும் சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டுள்ளது. ஒவ்வொரு பாவும் இவ்வாறே அமைய வேண்டும் என்று தொல்காப்பியம் கூறுகிறது.

2. **''படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**
**கடாஅ யானைக் கலிமான் பேக''**
**- இச்சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.**

- **ஓசை நயமிக்கச் சொற்கள்**

படாஅம் ஈத்த, கெடாஅ நல்லிசை, கடாஅ யானை, நல்லிசை

- **இலக்கணக்குறிப்புகள்**

**படாஅம் ஈத்த**
**கெடாஅ நல்லிசை** } - இசைநிறையளபெடை (அ) செய்யுளிசையளபெடை
**கடாஅ யானை**
**நல்லிசை** - பண்புத்தொகை

3. **கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்? (மார்ச்.20)**

- செந்நிறத்து வானம்போலத் தங்கள் கைகள் சிவந்திட உழைக்கும் தொழிலாளர்களின் வியர்வை வெள்ளம் அவர்களின் திரண்ட தோள்மீது முத்துமுத்தாய் வீற்றிருக்கும். இந்த அழகினை வியந்து பாடச் செந்தமிழின் துணை வேண்டுமெனக் கவிஞர் சிற்பி கூறுகின்றார்.

4. **விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.**

- விடியலில் உதிக்கும் கதிரவனின் தோற்றம் இயற்கையின் வனப்பை எடுத்துரைக்கும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## சிறுவினா

1. **சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக. (ப.ஆ.க-2)**

- சங்கப்பாடல்களில் ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன. இதனையே பாடல்களின் ஒலிப்பின்னல் என்கிறோம். இந்த ஒலிக் கோலங்கள் உணர்ச்சிகளைக் காட்டும் விதமாக அமைக்கப்பட்டுள்ளன.

**கடந்தடு தானை மூவிருங்கூடி**
**உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே**
**முந்நூறு ஊர்த்தே தண் பறம்பு நன்னாடு;**
**முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்;**

- என்னும் புறநானூற்றுப் பாடலில் வன்மையான உணர்ச்சியைக் காட்டும் க, த, ட, ற என்ற வல்லின மெய்கள் பிற மெல்லின இடையின மெய்களைக் காட்டிலும் அதிகமாக வந்துள்ளன.

**படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**
**கடாஅ யானைக் கலிமான் பேக** (புறம்-145)

- உயிர் ஒலிகள் குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்ப வரல் தன்மை பெற்றிருப்பதும், இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாக விளங்கியதை உணர்த்தும்.

---

2. **''செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்**
**செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்!''**
**தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.**

- மாலை நேரச் சூரியன், மலை முகட்டின் மீது தலையைச் சாய்க்கின்றான்.
- சூரியனின் செம்மஞ்சள் நிறம், வானம் முழுவதும் பூக்காடு போலப் பரவிப் படர்ந்துள்ளது.
- இயற்கை ஓவியன் புனைந்த அழகிய செந்நிறத்துப் பூக்காடாக வானம் தோன்றுவதற்கு மாலை நேரத்துச் சூரியன் காரணமாக அமைந்துள்ளான் என்பதனை இத்தொடர் அழகாக வெளிப்படுத்துகிறது.
- அந்தி வானத்தின் சிவந்த நிறமும், அன்றாடம் உழைத்து வாழும் உழைப்பாளிகளின் கை வண்ணமும் ஒன்றே என்பதை கவிஞர் சிற்பியின் இவ்வரிகள் நயமாகக் காட்சிப்படுத்துகின்றன.

---

3. **'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக. (ப.ஆ.க-1,3, மார்ச்.20)**

**இடம் :**

- இப்பாடல் வரி தண்டியலங்காரம் என்னும் அணி இலக்கண நூலின் பொருளணியியலில் இடம் பெற்றுள்ள உரை மேற்கோள் பாடலாகும். இதன் ஆசிரியர் தண்டி ஆவார்.

**பொருள் :**

- ஒலிக்கின்ற கடலால் சூழப்பட்ட இவ்வுலகத்தின் இருளை அகற்றுவன இரண்டு. ஒன்று சூரியன், மற்றொன்று தனக்கு நிகர் இல்லாத தமிழ்மொழி என்பதே இத்தொடரின் பொருளாகும்.

**விளக்கம்:**

- எப்போதும் ஒலியெழுப்பிக் கொண்டிருக்கும் கடல் சூழ்ந்த இந்த உலகின் இருளை அகற்றும் கதிரவன் மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, சான்றோரால் தொழப்படுகின்ற ஒன்றாகும். தமிழோ, மலையில் தோன்றினாலும் மக்களின் அறியாமை இருளை அகற்றும் சிறப்புடையது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



4. **பின்வரும் இருபாக்களின் கருத்துக்களிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.**

| | |
|---|---|
| **பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையினானே<br>- நன்னூல்** | **மீண்டு மந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா!வா!<br>- சிற்பி பாலசுப்பிரமணியம்** |

| | நன்னூல் | | சிற்பி பாலசுப்பிரமணியம் |
|---|---|---|---|
| 1. | ஒரு மொழியில், பல்வேறு காலங்களில் தோன்றிய இலக்கியங்களை நோக்கின் பழைய சொல்வழக்குகள் கழிதலும், புதிய சொல்வழக்குகள் புகுதலும் ஆகிய இப்பண்பு இடம் பெற்றிருக்கும். | 1. | நாட்டின் வளர்ச்சியில் புதுமையை ஏற்றதனால் தமிழ்நாட்டின் பண்டைய பழக்கவழக்கங்கள், வாழ்வியல் நெறிமுறைகள், மொழிப் பயன்பாடு என எல்லாம் மாறிவிட்டன. |
| 2. | கால மாற்றத்திற்கு ஏற்ப மொழியில் பழையன எல்லாம் அழிவதும் புதியன எல்லாம் புகுவதும் போற்றற்குரியன என்கின்றது இப்பாடலடி எனவே புதியவற்றை ஏற்போம். | 2. | புதியவற்றுக்கு வழிவிட்டதனால் பழமைநலம் சிதைவுற்று அழிந்துவிட்டது; பழமை தளிர்க்க தமிழ்க்குயிலே நீ மீண்டும் கூவி வர வேண்டும் என்கிறது இப்பாடலடி. |

## நெடுவினா

1. **கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக. (பெ.ஆ.க-1,5)**

**கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளில்**

- ஒலிக்கோலங்கள்
- சொற்புலம்
- தொடரியல் போக்குகள்

ஆகியவை மிக முக்கியமானவையாகும்.

**ஒலிக்கோலங்கள்:**

- இசையோடும் இசைக்கருவியோடும்தான் மொழி சார்ந்த கவிதை பிறக்கும்.
- ஓசையும் பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்வதை ஒலிக்கோலம் (ஒலிப் பின்னல்) என்பர்.
- வன்மை உணர்ச்சியை வெளிப்படுத்த பாடல்களில் வல்லின மெய்யொலிகள் மிகுதியாக இடம்பெறும்.
- இனிய இசைக்காக நெடில் ஒலிகள் அதிகமாக இடம்பெறும்.
- சில ஒலிகளும் சில சொற்களும் திரும்ப திரும்ப வரும் தன்மையும் பாடல்களில் இடம் பெறும்.

**சொற்புலம்:**

- உணர்வும், பொருளும், கலையும், பண்பாடும், வரலாறும், அரசியலும் சொற்களில் பொதிந்து கிடக்கின்றன.
- ஒரு பொருள் குறித்து வரும் பல சொற்களும், பல பொருள் குறித்து வரும் ஒரு சொல்லும் சொல் வளத்திற்குச் சான்று.
- பல்வேறு துறைகள், சூழல்கள், புனைவுகளுக்கும் உரிய வகையில் உணர்வும் தெளிவும் கொண்டதாக செழிப்பானதொரு தளத்தைச் சொல் கொண்டிருக்கிறது.
- தனிச்சொல்லாகவும், தொகை மொழியாகவும் சொற்கள் இயங்குகின்றன.

**தொடரியல் போக்குகள்:**

- பாடலின் தளத்தை முழுமையடைய செய்வது தொடரியல் போக்காகும்.
- சொல்பவனுடைய மொழித்திறனை, கேட்பவன் அல்லது வாசிப்பவன் முழுமையாகப் பெற வேண்டும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



- ❖ சொல்லப்படும் உணர்வுகளுக்கும் செய்திகளுக்கும் ஏற்பத் தொடர்கள்
  1. நேர் நடந்தும்
  2. ஏறியிறங்கியும்
  3. திரும்பியும் சுழன்றும் - இயங்கும்

இவையே கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகள் ஆகும்.

**2. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.**

**மொழிப்பற்று:**

- ❖ யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல இனிதான மொழி எதுவுமில்லை என்று கூறிய பாரதி, தான் சு.நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்திலும் அதனை உறுதிப்படுத்துகின்றார்.
- ❖ நெல்லையப்பரிடம் அவர் கூறும்போது, 'நீ பிறமொழிகளை அறிந்திருந்தாலும் தமிழை வளர்ப்பதைக் கடமையாகக் கொள்ளவேண்டும்' என்று கூறுகின்றார்.
- ❖ புதிய புதிய செய்திகளும் புதிய புதிய உண்மைகளும், புதிய புதிய இன்பமும் தமிழ்மொழியில் ஏற்றம் பெற வேண்டும்.
- ❖ தமிழ்நாட்டில் வீதிகள் தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் பெருக வேண்டும். அந்தப் பள்ளிகளில் எல்லாம் புதிய புதிய கலைகள் பயிற்சி அளிக்கப் பெற்று வளர வேண்டும்.
- ❖ தாய் மொழியிலே கற்பதால் தமிழ் உணர்வு அதிகமாகும், தாய்நாட்டின் மீது பற்று ஏற்படும்.
- ❖ பிறநாட்டு மொழிகள் எல்லாம் அடைந்துள்ள வளர்ச்சியைப் பார்த்த பின்பாவது நாம் நம் தாய்மொழியாம் தமிழ்மொழியின் மீது பற்றுக் கொள்ள முயலவேண்டும்.
- ❖ புதிய புதிய சிந்தனைகள் தமிழ்மொழியில் தோன்றல் வேண்டும் என்கிறார்.

**சமூகப்பற்று:**

- ❖ சமூகத்தின் அவலமாக இருக்கின்ற ஆண் பெண் வேறுபாடு முற்றிலுமாக அழிய வேண்டும்.
- ❖ ஆண் உயர்ந்தவன் பெண் அடிமை என்ற நிலை சமூக அவலமாகும்.
- ❖ ''ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள், அவற்றில் ஒன்றிலொன்று தாழ்வில்லை'', என்கிறார்.
- ❖ பெண்ணைத் தாழ்த்தினால் சமூகமே சாபக்கேட்டிற்குள்ளாகும் என்பதை உணர்த்த பெண்ணைத் தாழ்த்தினவன், தன் கண்ணைக் குத்தியவனுக்குச் சமம் என்று ஆவேசத்துடன் கூறுகின்றார்.
- ❖ பெண்ணை வீட்டுக்குள்ளே அடைத்தவன் தன் கண்ணை இழந்த குருடன் போலப் பரிதவிப்பான் என்றும் கூறி ஆணும் பெண்ணும் சமம் என்ற சமூக நீதியை வலியுறுத்துகின்றார்.
- ❖ சமூகம் வளர்ச்சி அடையத் தொழில் பெருக வேண்டும், வியாபாரம் சிறக்க வேண்டும், தொழிற்சாலைகள் வளர வேண்டும் என்கிறார்.
- ❖ சமூக மாற்றம் காண சங்கீதம், சிற்பம், இயந்திரம், பூமி, வானம், இயற்கை சார்ந்த நூல்கள் ஆயிரம் ஆயிரமாகத் தாய்மொழியில் உருவாகிட வேண்டும்.
- ❖ நம் தமிழ்ச்சமூகம் மாற்றம் பெற அனைவரும் எண்ணிட வேண்டும்.
- ❖ அதற்குரிய சக்தியை அனைவரும் பெற்றிடவும் வேண்டுமென்று பாரதியார் சு.நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம் மூலம் தன் உள்ளக் கருத்தை வெளிப்படுத்துகின்றார்.

**3. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

**எனது அருமைச் செந்தமிழே!**

மாலை நேரத்துச் சிவந்த நிறமுள்ள சூரியன், மலை முகட்டில் தனது தலையைச் சாய்க்கின்றான். அப்போது அவனுடைய செம்மஞ்சள் நிற ஒளிபட்டு வானம் பூக்காடு போலக் காட்சியளிக்கிறது. அதுபோல அன்றாடம் அயராது உழைக்கும் உழைப்பாளர்களின் கரங்கள் சிவந்துள்ளன.

அத்தகைய தொழிலாளர்களின் பருத்த தோள்கள் மீது வியர்வைத் துளிகள் முத்துமுத்தாய் அரும்பியுள்ளன. இவற்றையெல்லாம் வியந்து பாடுவதற்கு, உன்னைவிடப் பொருத்தமான துணை வேறில்லை.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



முத்தமிழே!

எமது உள்ளத்தில் மூண்டு எழும் கவிதை வெறிக்கு நீயே உணவாக இருக்கிறாய்! முன்னொரு காலத்தில் பாண்டிய மன்னர்கள் அமைத்த தமிழ்ச்சங்கத்தில் நீயே அரசாட்சி புரிந்தாய். பாரி முதலான கடையெழு வள்ளல்களை எமக்குத் தந்தாய். எமது உடல் சிலிர்ப்படையுமாறு மீண்டும் அத்தகைய பழமைச் சிறப்பைப் புதுப்பிப்பதற்காக தமிழ்க் குயிலாக நீ கூவ வேண்டும். தென்றல் தவழும் பொதிகை மலையில் தோன்றி வளர்ந்த தமிழே! தடைகள் இருந்தால் தாண்டி, கூண்டை உடைத்து வெளிப்படும் சிங்கம்போல நீ சீறிவர வேண்டும்.

இவ்வாறாக, தமிழின் சீரிளமைத்திறத்தினை வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

---

**4. ''சொல்லோவியங்கள்'' என்னும் கவிதை நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை எழுதுக.**

**சொல்லோவியங்கள் கவிதை நூல் வெளியீட்டு விழா**

இடம் : அரசு மேனிலைப்பள்ளி, சிவகங்கை. நாள் : 19.06.2019, புதன்கிழமை

நேரம் : பிற்பகல் 2 மணி

**நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| **இறைவணக்கம்** | : | மாணவர்கள் |
| **தமிழ்த்தாய் வாழ்த்து** | : | மாணவர்கள் |
| **வரவேற்புரை** | : | **திரு.மு.முரளி**<br>(தமிழாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி, சிவகங்கை) |
| **வாழ்த்துரை** | : | **திரு.ச.சரவணக்குமார்**<br>(தலைமையாசிரியர், அரசு மேனிலைப்பள்ளி, சிவகங்கை) |
| **நடனம்** | : | மாணவர்கள் |
| **சொல்லோவியங்கள் நூல் அறிமுக உரை** | : | **திரு.ப.நன்மாறன் அவர்கள்**<br>(எழுத்தாளர்) |
| **நூல் வெளியீடு** | : | **சொல்லோவியங்கள் கவிதை நூல்** |
| **வெளியிட்டு வாழ்த்துரை** | : | **திருமிகு.அ.கோபிநாத் அவர்கள்,**<br>(மாவட்டக் கல்வி அலுவலர், விழுப்புரம்) |
| **முதல் பிரதியைப் பெற்றுக் கொள்பவர்** | : | **திருமிகு.தா.வேலவன் அவர்கள்,**<br>(தொழிலதிபர் மற்றும் சமூக ஆர்வலர்) |
| **நூலாசிரியர் உரை** | : | **திரு.கவிஞர் ச.நல்லதம்பி அவர்கள்**<br>(முதுகலைத் தமிழாசிரியர், அரசுமேனிலைப்பள்ளி, சிவகங்கை) |
| **தலைமை உரை** | : | **திருமிகு.ச.இளவழகன், அவர்கள்**<br>(எழுத்தாளர், திரைப்பட இயக்குநர், தேசிய விருது பெற்றவர்) |
| **விழிப்புணர்வுப் பாடல்கள்** | : | மாணவிகள் |
| **நன்றியுரை** | : | **திரு.இரா.கலைச்செல்வி**<br>(உதவித் தலைமையாசிரியை, அரசுமேனிலைப்பள்ளி, சிவகங்கை) |
| **தேசியகீதம்** | : | அனைவரும் |

---

## நன்றியுரை

**''நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல**
**தன்றே மறப்பது நன்று''**

அனைவருக்கும் இனிய மாலை வணக்கம்!

இன்று நம் பள்ளியில் நடைபெறும் இவ்விழா மிக முக்கியமான விழாவாகும். ஒரு பேனா தலை குனியும் போது, ஒரு சமூகம் தலைநிமிரும் என்பார்கள். இன்று நம் பள்ளி முதுகலைத் தமிழாசிரியர் எழுதி வெளியிட்டுள்ள சொல்லோவியங்கள் கவிதை நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமையேற்று இனிய தலைமையுரை தந்து எழுத்துகளின் வலிமையை இச்சமூகம் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தையும் வலியுறுத்திய தேசிய விருது பெற்ற எழுத்தாளர் திருமிகு.ச.இளவழகன் அவர்களுக்கு உங்கள் அனைவரின் சார்பாகவும் மனமகிழ்வுடன் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

இந்நூலை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கிய நம் கல்வி மாவட்ட அலுவலர் திருமிகு. அ.கோபிநாத் அவர்கள் மாணவர்கள் நூற்களை வாசிக்கும் பழக்கத்தை மேம்படுத்த வேண்டும் என்ற கருத்தைத் தன் வாழ்க்கை அனுபவத்தோடு எடுத்துக் கூறி, இந்நூலை எழுதிய நம் பள்ளி ஆசிரியரை வாழ்த்தினார் அன்னார்க்கும் நம் அனைவரின் சார்பாகவும் மனமகிழ்வான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டவர் நம் பள்ளியின் மீது அதிக அக்கறை கொண்டவரும் நமது பள்ளியின் புரவலருமான தொழிலதிபர் திருமிகு.தா.வேலவன் அவர்கள். நல்ல செயல்கள் நடந்தால் அதனை ஊக்குவிக்கும் நல்ல குணம் படைத்தவர் அவர்களுக்கும் நம் அனைவரின் சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சொல்லோவியங்கள் கவிதை நூலில் சொல்லப்பட்ட கருத்துகளை எளிமையாகவும் இனிமையாகவும் எடுத்துக் கூறி நல்ல முறையில் நூலை அறிமுகம் செய்தவர் எழுத்தாளர் ப.நன்மாறன் அவர்கள். சமூகத்திற்கு உதவும் வகையில் எழுதிவரும் அன்னாரின் அறிமுக உரை இப்புத்தகத்தை நாம் வாங்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தந்துள்ளது. இவ்விழாவில் கலந்து கொண்ட அவருக்கும் நம் அனைவரின் சார்பாகவும் மன நிறைவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு நூலை உருவாக்குவது எவ்வளவு கடினம் என்பது அனைவரும் அறிந்ததே. சமூக மாற்றத்திற்கு வழி காட்டும் அருமையான கருத்துகளைத் தன் எண்ணத்தில் இருந்து எழுத்துகளாக்கிய நம் பள்ளி முதுகலைத் தமிழாசிரியரும், சொல்லோவியங்கள் கவிதை நூலின் ஆசிரியருமான திரு.ச.நல்லதம்பி அவர்களுக்கு நம் அனைவரின் சார்பாகவும் கரவொலியுடன் கூடிய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் மேல் அளவற்ற பாசம் கொண்ட நம் பள்ளியின் தலைமையாசிரியர் அவர்கள் நம் அனைவரையும் பல்வேறு வழிகளில் ஊக்கப்படுத்தி, திறமைகளை வளர்த்திட உதவி செய்து வருகின்றார்கள். இந்நிகழ்வில் நம் பள்ளி ஆசிரியரை வாழ்த்தியுள்ளார்கள். நம் பள்ளித் தலைமையாசிரியர்க்கு நம் அனைவரின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அனைவரையும் வரவேற்ற ஆசிரியர் திரு.ச.சரவணக்குமார் அவர்களுக்கும் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வோம்.

இவ்விழாவில் இறைவணக்கம், நடனம், விழிப்புணர்வுப் பாடல் ஆகிய நிகழ்வுகளில் கலந்து கொண்ட மாணவர்கள் அனைவருக்கும் நன்றி.

இந்நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய மாணவர்கள் அசோக் மற்றும் ரூபன் ஆகியோருக்கும் நன்றி.

இவ்விழாவினைக் கண்டு மகிழ்ந்த இருபால் ஆசிரியர்கள், அலுவலர்கள், மற்றும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் நன்றி கூறி என் நன்றியுரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

## மொழியை ஆள்வோம் (பக்கம் – 19)

### தமிழாக்கம் தருக.

1. **Learning is a treasure that will follow its owner everywhere. (வ.ஆ.க-2,3)**
   கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

2. **A new language is a new life. (வ.ஆ.க-2,3)**
   புதிய மொழி புதிய வாழ்க்கை

3. **If you want people to understand you, speak their language. (வ.ஆ.க-2)**
   பிறர் உன்னைப் புரிந்துகொள்ள வேண்டுமாயின் அவர்மொழியில் பேசு.

4. **Knowledge of languages is the doorway to wisdom. (வ.ஆ.க-2,3)**
   மொழிகளின் அறிவு ஞானத்தின் திறவுகோல்/ வழித்தடம்.

5. **The limits of my language are the limits of my world. (வ.ஆ.க-3)**
   என் மொழியின் எல்லை என் உலகத்தின் எல்லை.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## இலக்கிய நயம் பாராட்டுக.

**முச்சங்கங் கூட்டி**
**முதுபுலவர் தமைக் கூட்டி**
**அச்சங்கத் துள்ளே**
**அளப்பரிய பொருள்கூட்டி**
**சொற்சங்க மாகச்**
**சுவைமிகுந்த கவிகூட்டி**
**அற்புதங்க ளெல்லாம்**
**அமைத்த பெருமாட்டி! - கண்ணதாசன் (ப.ஆ.க-5,6)**

**முன்னுரை / ஆசிரியர் குறிப்பு:**

இப்பாடலைப் பாடியவர் கவியரசு கண்ணதாசன் ஆவார். இவர் புகழ்பெற்ற தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர் ஆவார். தமிழக அரசின் அரசவைக் கவிஞராகப் பதவி வகித்தவர். சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.

**திரண்ட கருத்து:**

'தமிழன்னை முதல், இடை, கடை என முச்சங்கம் அமையக் காரணமானவள். மூத்த புலவர் பெருமக்களை ஒன்று கூட்டியவள். தமிழ்ச்சங்கத்துள் அளவிட இயலாத பொருட்களை விவரிக்கும் இலக்கியங்களை உருவாக்கியவள். சுவை மிகுந்த சொற்களாலான கவிதைகளைப் படைத்தவள். இத்தகைய அற்புதங்களை நிகழ்த்திக் காட்டிய பெருமை மிக்கவள்', என்பதே இப்பாடல் வரிகளின் திரண்ட கருத்தாகும்.

**மையக்கருத்து:**

'சங்கமாக அமைந்து படைப்பாளர்களையும், படைப்புகளையும் பெருமைப்படுத்தியவள் தமிழன்னை',என்பதே இப்பாடலின் மையக் கருத்தாகும்.

**சொல் நயம்:**

**'விசயனுக்கு வில் அழகு**
**கவிதைக்குச் சொல் அழகு'** என்பார்கள். அதற்கேற்ப இப்பாடலில் முச்சங்கம், சொற்சங்கம், முதுபுலவர் என்பன போன்ற சொற்கள் நயமுடன் அமைக்கப்பட்டு இப்பாடல் சொல்நயம் பெற்று மிளிரக் காணலாம்.

**பொருள் நயம்:**

'முச்சங்கம் கூட்டி, முதுபுலவர் தமைக்கூட்டி', 'அளப்பரிய பொருள்கூட்டி அற்புதங்கள் எல்லாம் அமைத்த பெருமாட்டி' - இவை எல்லாமே பொருள் நயமிக்க தொடர்களாக அமைக்கப்பெற்று, இப்பாடல் பொருள் நயமுடையதாக விளங்குகிறது.

**தொடை நயம்:**

**'தொடையற்ற பாட்டு**
**நடையற்றுப் போகும்'** என்பார்கள். அதற்கேற்ப இப்பாடலில் கீழ்வரும் தொடைநயங்கள் அமைந்து இன்பம் நல்கிடக் காணலாம்.

**(i) மோனை நயம்:**

**'படைக்குச் சேனை அழகு**
**பாட்டுக்கு மோனை அழகு'** என்பார்கள். அதற்கேற்ப இப்பாடலில்,

<u>மு</u>ச்சங்கம் - <u>மு</u>துபுலவர்
<u>அ</u>ச்சங்கம் - <u>அ</u>ளப்பரிய
<u>சொ</u>ற்சங்கம் - <u>சு</u>வைமிகுந்த
<u>அ</u>ற்புதங்கள் - <u>அ</u>மைத்த

என்று மோனை நயம் பயின்று வந்துள்ளது.

**(ii) எதுகை நயம்:**

**'இயற்கையில் உதகை அழகு**
**செய்யுளில் எதுகை அழகு'** என்பார்கள்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



அதற்கேற்ப இப்பாடலில்,

முச்சங்கம் - அச்சங்கம்

சொற்சங்கம் - அற்புதம்

போன்ற எதுகை நயம் மிக்க சொற்கள் பயின்று வந்துள்ளன.

**சந்த நயம்:**

**'வாழ்க்கைக்கு அழகு சொந்தம்**

**பாடலுக்கு அழகு சந்தம்'** என்பார்கள். அதற்கேற்ப இப்பாடல் எதுகை - மோனைச் சொற்கள் அமைந்து, எளிய - இனிய சொற்களைக் கொண்டு, சுவைபடப் பாடத்தக்க வகையில் அமைந்துள்ளது. எனவே இப்பாடல் சந்தநயம் பெற்றுத் திகழ்கிறது.

**முடிவுரை:**

சொல் நயம், பொருள் நயம், தொடை நயம் மிக்க இப்பாடல் கற்போருக்குக் களி பேரின்பம் தருவதாக அமைந்துள்ளது. இது போன்ற பாடல்களைப் படித்துச் சுவைத்து நாமும் இன்புறுவோம்.

## கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல், அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே. **- மொழி வரலாறு (மு.வரதராசனார்)**

**வினாக்கள்**

1. **மக்கள் படைத்துக் காத்துவரும் அரியகலை எது? அஃது ஆற்றும் செயல் யாது?**
2. **தாயின் முதல் விருப்பம் என்ன?**
3. **மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?**
4. **மொழியை வளர்ப்பவரும், வளர்பவரும் யார்?**
5. **மொழி வளர்ச்சி எதனைப் பொறுத்தது?**

## உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

தாமரை இலை நீர் போல, கிணற்றுத்தவளை போல, எலியும் பூனையும் போல, அச்சாணி இல்லாத தேர் போல, உள்ளங்கை நெல்லிக்கனி போல

1. **தாமரை இலை நீர்போல** - பட்டும் படாமலும், ஈடுபாடு இல்லாமலும் இருத்தல்
   பெற்றோருக்கு நிதிச்சுமை அழுத்துவது தெரிந்தும், சில பிள்ளைகள் தாமரை இலை நீர்போலக் கண்டு கொள்ளாமல் இருப்பர்.

2. **கிணற்றுத் தவளை போல** - வெளி உலகம் தெரியாத நிலை **(பெ.ஆ.க-4)**
   இன்னும் சில கிராமங்களில் மக்கள் கிணற்றுத் தவளை போல வாழ்கின்றனர்.

3. **எலியும் பூனையும் போல** - எதிரியாக
   ரகுவும், ரவியும் எலியும் பூனையும் போலச் சண்டையிட்டுக் கொண்டனர்.

4. **அச்சாணி இல்லாத தேர்போல** - சரியான வழிகாட்டி இல்லாத **(மார்ச்.20)**
   நாட்டை வழிநடத்த சரியான தலைவன் இல்லாததால் நாட்டு மக்கள் அச்சாணி இல்லாத தேர்போல சரிவர இயங்க முடியாமல் தவிக்கின்றனர்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



5. **உள்ளங்கை நெல்லிக்கனி போல** - வெளிப்படையாக, தெளிவாக

தமிழாசிரியர் கற்பித்த புணர்ச்சி இலக்கணம் எங்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவாய் விளங்கியது.

6. **நகமும் சதையும் போல** - இணை பிரியாமை **(மார்ச்.20)**

நானும் என் அண்ணனும் நகமும் சதையும் போல இருந்தோம்.

## ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.

**தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்.**

**எண்ணத்தை வெளியிடுவதற்கும், சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் தாய்மொழியே துணைநிற்கும் - இதனை வலியுறுத்தி பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

**தாய்மொழிக் கல்வியின் தேவை - தாய்மொழிச் சிந்தனை - அறிஞர்களின் பார்வை - கற்கும் திறன் - பயன் - இன்றைய நிலை**

**முன்னுரை:**

**''தாய்மொழி கண் போன்றது**
**பிறமொழி கண்ணாடி போன்றது''**

நமது எண்ணங்களைப் பிறருக்கு வெளிப்படுத்த உதவுவது மொழியே. மொழி ஒரு கருவி. மனிதன் மொழி கொண்டுதான் வாழ்கின்றான். மொழியால்தான் கருத்துப் பரிமாற்றமும் செய்கின்றான். தனது எண்ணத்தை வெளியிடுவதற்கும் சிந்தனையாற்றலைப் பெருக்கவும் துணையாக இருக்கும் தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தாய்மொழி வழிக் கல்வியின் தேவை:**

மனிதனின் அடையாளம் அவனது தாய்மொழிதான். கல்வி என்பது தாய்மொழி வழியாக மட்டுமே கற்பிக்க படவேண்டும். மனிதனின் சிந்தனையும் கற்பனையும் தாய்மொழியில்தான் உருவாகின்றன. எனவே, மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்குத் தாய்மொழி வழிக் கல்வியே சிறந்தது. சிந்திக்கின்ற மொழியிலே பயிற்றுவிக்கப்படுகின்ற கல்வி சிந்தனையைக் கூட்டுகின்றது. நுணுக்கங்களையும் அறிவியல் படைப்புகளையும் உருவாக்க மனிதர்களைத் தயார்படுத்துகின்றது.

**தாய்மொழிச்சிந்தனை:**

தாய்மொழிதான் சிந்திக்கும் திறனின் திறவுகோலாக இருக்கின்றது. எத்தனை மொழிகள் கற்றாலும் எந்த மொழியைக் கற்றாலும் ஒருவனின் சிந்தனை உருவெடுப்பது தாய்மொழியில்தான். தாய்மொழியால் சிந்தனை பெருகும். மனிதர்களின் மனவளர்ச்சி வாழ்விற்கு அடிப்படை. அத்தகைய மனவளர்ச்சி தாய்மொழியால் முடியும். தாய்மொழியில் சிந்திப்பதால் உயர்ந்த கருத்துகளைச் சிறந்த சொற்களைக் கொண்டு உணர்த்த முடியும்.

**அறிஞர்கள் பார்வை:**

உலகில் வாழ்ந்த அறிஞர்கள் பலர் தாய்மொழிக் கல்வியின் அவசியத்தைக் கூறியிருக்கின்றார்கள். காந்தியடிகள் கூறும்போது ''ஜெகதீஷ் சந்திரபோஸ், பி.சி.இராய் முதலியோரின் சாதனைகளைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்; ஆனால், தாய்மொழி மூலம் நமக்குக் கல்வி அளிக்கப்பட்டிருந்தால் நம்மிடையே பல போஸ்களும், இராய்களும் தோன்றியிருப்பார்கள்'', என்கிறார். சாகிர் ஹீசைன் (1938-ஆம் ஆண்டு) குழு தாய்மொழியில் கற்றுக் கொடுத்தலை வலியுறுத்துகிறது. டி.எஸ். கோத்தாரி குழுவும் (1964) தேசியக் கல்விக் கொள்கையில் தாய்மொழிக் கல்வியை வலியுறுத்தியது.

**கற்கும் திறன்:**

தாய்மொழியைப் பற்றி வீழ்ந்த நாடும் இல்லை; தாய்மொழியைப் புறக்கணித்து வாழ்ந்த நாடும் இல்லை. தாய்மொழி மூலமாகவே ஒருவர் தான் கூற விரும்பும் கருத்தைத் தெளிவாகவும் முழுமையாகவும் ஆழமாகவும் தெரிவிக்கமுடியும். கற்கும் திறன் அதிகரிப்பது தாய்மொழி வழியாகவே. தாய்மொழி வழியாகக் கற்கும் போது சிந்தனைத் திறன் அதிகமாகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**தாய்மொழி வழிக் கல்வியின் பயன்:**

''கருவில் உள்ள குழந்தை ஏழு மாதத்திலேயே மூளை முதிர்ச்சி பெற்று ஒலிகளைக் கேட்கிறது'' என்கின்றனர் மருத்துவ அறிஞர்கள். குழந்தை வளரும் சூழல் மொழித்தாக்கத்திற்கு அடிப்படையாக அமைகிறது. அக்குழந்தைகள் தாய்மொழி வழியாகக் கற்கும் சூழல் ஏற்பட்டால் மிகச் சிறந்த அறிஞர்களாக, மேதைகளாக வளர்வார்கள். குழந்தைகள் தாய்மொழி வழியாகக் கல்விக் கற்றால் தரமான கல்வியைப் பெறுவார்கள்.

**இன்றைய நிலை:**

இன்று தாய்மொழி வழியில் கல்விக் கற்பதைக் கௌரவக் குறைச்சலாகவும், கேவலமாகவும் நினைக்கின்றனர். தாய்மொழியில் கல்விக் கற்றவர்களைத் தரம் குறைந்தவர்களாகப் பார்ப்பது சமூகத்தில் நிலவி வரும் அவலங்களில் ஒன்றாகும். தாய்மொழியில் கல்வி கற்போருக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.

**முடிவுரை:**

மொழி என்பது ஒரு தகவல் தொடர்பு சாதனம் மட்டுமல்ல; ஒரு பண்பாட்டின், ஒரு இனத்தின் அடையாளம் என்பதை யாவரும் உணர்ந்தாலே தாய்மொழியை அழிவிலிருந்து காக்கலாம்.

## மொழியோடு விளையாடு (பக்கம் – 21)

### எண்ணங்களை எழுத்தாக்குக.

ஆதி மனிதன் நாடோடியாக வாழ்ந்தான். இரவு நேரங்களிலும், இயற்கைச் சீற்றங்களிலும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள குகைகளில் தங்கினான். கூர்மையான கற்களை வேட்டையாடுவதற்கான கருவிகளாக அவன் பயன்படுத்தினான். வேட்டையாடி, உணவுண்ட பின் ஓய்வு நேரத்தில் தன் வாழ்வியல் அனுபவங்களைத் தான் தங்கிய பாறைக் குகைகளில் சித்திரங்களாகச் செதுக்கினான். அவை பெரும்பாலும் அவன் கண்ட, வேட்டையாடிய விலங்குகளைக் குறிப்பதாக அமைந்திருக்கக் காணலாம்.



### அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக.

குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்
தாயின் குரலில் உயிரின் ஒலி
**உயிரின் ஒலிதரும் ஆனந்தம் கேட்டிட,**
**கேட்டிட உவகை வந்து பாயுமே!**

### குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.

**எ.கா. கவிஞர்; ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம் - கவிமணி**

1. தமிழறிஞர்; முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம். - **மறைமலை அடிகள்**
2. தாய்மொழி; ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும். - **தமிழ் ஒளி**
3. சிறுகதை ஆசிரியர்; முதல் பாதி நவீனம் - **புதுமைப்பித்தன்**
4. முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம் - **கோதை**

(தமிழ்ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)

### படிப்போம் பயன்படுத்துவோம் (நூலகம்)

| | | | |
|---|---|---|---|
| **Subscription** | - உறுப்பினர் கட்டணம் | **Archive** | - காப்பகம் |
| **Fiction** | - புனைவு | **Manuscript** | - கையெழுத்துப் பிரதி |
| **Biography** | - வாழ்க்கை வரலாறு | **Bibliography** | - நூல் நிரல் |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# கூடுதல் வினாக்கள்

## கவிதைப்பேழை! இளந்தமிழே! - சிற்பி பாலசுப்பிரமணியம்

### பலவுள் தெரிக.

1. 'பொதிகை' என்பது எந்த மலையைக் குறிக்கும்.
   அ) குற்றாலமலை ஆ) விந்தியமலை இ) இமயமலை ஈ) சாமிமலை **[அ) குற்றாலமலை]**

2. சிற்பி பாலசுப்பிரமணியம் எந்நூலை மொழிபெயர்த்தமைக்காக சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றார்.
   அ) அக்கினி ஆ) ஒளிப்பறவை இ) அக்கினி சாட்சி ஈ) சூரிய நிழல் **[இ) அக்கினி சாட்சி]**

3. 'சாய்ப்பான்' என்பதன் சரியான பகுபத பிரிப்பு முறை
   அ) சாய்ப்பு + ஆன் ஆ) சாய் + ப் + ஆன் இ) சாய் + ப் + ப் + அன் ஈ) சாய் + ப் + ப் +ஆன் **[ஈ) சாய் + ப் + ப் +ஆன்]**

4. 'வியந்து' என்பதன் சரியான பகுபத உறுப்பிலக்கணப் பிரிப்பு முறை **(ப.ஆ.க-3)**
   அ) வியந்து + உ ஆ) விய + த் + த் + உ இ) விய + த்(ந்) + த் + உ ஈ) வியந்த + அ **[இ) விய + த்(ந்) + த் + உ]**

5. 'வியர்வை வெள்ளம்' - இலக்கணக்குறிப்பு
   அ) உவமையாகுபெயர் ஆ) கருவியாகு பெயர் இ) உருவகம் ஈ) உவமைத்தொகை **[இ) உருவகம்]**

6. 'செந்தமிழ்' - எந்தப் புணர்ச்சி விதிகளின் அடிப்படையில் சரியாகப் புணரும்.
   அ) ஈறுபோதல், இனமிகல் ஆ) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல்
   இ) ஈறுபோதல், தன்னொற்றிரட்டல் ஈ) ஈறுபோதல் **[ஆ) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல்]**

7. கவிஞர் சிற்பி எழுதிய எந்தப் படைப்பிலக்கிய நூலுக்குச் சாகித்திய அகாதமி விருது கிடைத்தது. **(ப.ஆ.க-4)**
   அ) ஒரு கிராமத்தின் கதை ஆ) ஒரு கிராமமே அழுதது
   இ) ஒரு கிராமத்தின் நதி ஈ) ஒரு புளியமரத்தின் கதை **[இ) ஒரு கிராமத்தின் நதி]**

8. சிற்பி எத்தனை முறை சாகித்திய அகாதமி பரிசு பெற்றவர்.
   அ)ஒரு முறை ஆ) இருமுறை இ) நான்கு முறை ஈ) மூன்று முறை **[ஆ) இருமுறை]**

9. சிற்பியின் கவிதைகள் ஆங்கிலம், கன்னடம், மராத்தி மற்றும் ------ மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.
   அ) மலையாளம் ஆ) ஹிந்தி இ) தெலுங்கு ஈ) வங்காளம் **[அ) மலையாளம்]**

10. இவற்றுள் எது கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய நூல்
    அ) சூரியகாந்தி ஆ) சூரிய பார்வை இ) ஒளிப்பூ ஈ) சூரிய நிழல் **[ஈ) சூரிய நிழல்]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



11. கருத்து 1 : பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தவள் தமிழ்த்தாய்.
கருத்து 2 : விம்முகின்ற தோள்கள் செந்நிறத்துப் பூக்காடானது.
அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி இ) இரண்டு கருத்தும் தவறு ஈ) கருத்து 1 சரி, 2 தவறு
**[ஈ) கருத்து 1 சரி, 2 தவறு]**

12. ''மூண்டுவரும் கவிதைவெறிக் குணவாய் எங்கள்
முத்தமிழே! நீயுள்ளாய்; முன்னம் ஓர்நாள்'' - இப்பாடல் வரியில் பயின்று வந்துள்ள தொடை நயம்
அ) அடிமோனை ஆ) சீர் மோனை இ) சீர் எதுகை ஈ) அடி எதுகை **[அ) அடிமோனை]**

13. பொருத்துக.
**அ) அலையும் சுவடும்** - 1. படைப்பிலக்கிய விருது நூல்
**ஆ) ஒரு கிராமத்து நதி** - 2. மொழிபெயர்ப்பு விருது நூல்
**இ) அக்கினி சாட்சி** - 3. கவிதை நூல்
**ஈ) ஒளிப்பறவை** - 4. உரைநடை நூல்
அ) 4 1 2 3 ஆ) 4 2 1 3 இ) 4 3 1 2 ஈ) 4 3 2 1 **[அ) 4 1 2 3]**

14. 'இளந்தமிழே' என்னும் நம் பாடப்பகுதி இடம்பெற்றுள்ள நூல்
அ) ஒளிப்பறவை ஆ) நிலவுப்பூ இ) சூரியநிழல் ஈ) சூரியகாந்தி **[ஆ) நிலவுப்பூ]**

15. கவிஞர் சிற்பி எந்தப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார்.
அ) காமராசர் பல்கலைக்கழகம் ஆ) அழகப்பா பல்கலைக்கழகம்
இ) தமிழ்ப்கல்கலைக்கழகம் ஈ) பாரதியார் பல்கலைக்கழகம்
**[ஈ) பாரதியார் பல்கலைக்கழகம்]**

16. 'கொலுவிருந்தாய்' - இச்சொல்லுக்குப் பொருத்தமான புணர்ச்சி விதி
அ) இஈஐ வழி யவ்வும் ஆ) முற்றும் அற்று ஒரோ வழி
இ) ஏனை உயிர்வழி வவ்வும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்
**[இ) ஏனை உயிர்வழி வவ்வும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே]**

17. அருங்கானம் - இதில் பயின்றுவரும் புணர்ச்சி விதிகள் **(ப.ஆ.க-3, மார்ச்.20)**
அ) ஈறுபோதல், இனமிகல் ஆ) ஈறுபோதல், முன்னின்றமெய் திரிதல்
இ) இனமிகல், ஈறுபோதல் ஈ) ஈறுபோதல், ஆதிநீடல் **[அ) ஈறுபோதல், இனமிகல்]**

18. தமிழ்க்குயில் எவ்வாறு வர வேண்டும்? **(ப.ஆ.க-6)**
அ) பாடி ஆ) சீறி இ) கூவ ஈ) ஆடி **[இ) கூவ]**

19. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' பாடல் இடம் பெற்ற நூல்: **(மார்ச்.20)**
அ) மஸ்னவி ஆ) நிலவுப் பூ இ) காவ்யதர்சன் ஈ) துறைமுகம் **[ஆ) நிலவுப் பூ]**

## குறுவினா

1. **தொழிலாளர்களின் கைகள் எதனைப் போலச் சிவந்துள்ளதாகக் கவிஞர் சிற்பி கூறுகிறார்?**
   - அந்திநேரத்து வானத்தில் படர்ந்துள்ள செக்கச்சிவந்த வண்ணம்போல உழைக்கும் தொழிலாளர்களின் கைகள் சிவந்துள்ளதாகக் கவிஞர் சிற்பி கூறுகிறார்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**2. பழமைநலம் கொண்ட மொழி தமிழ்மொழி எவ்வாறு?**

- தமிழ்மொழி பாண்டிய மன்னர்கள் அமைத்த சங்கத்திலே தன்னிகரற்ற செம்மொழியாய் இருந்து ஆட்சி செய்த மொழியாகும்.
- பாரி போன்ற வள்ளல்கள் பலரை இத்தமிழ் மண்ணிற்குத் தந்த பழமை நலம் கொண்ட மொழியாகும்.

**3. கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆசை என்ன?**

- தமிழ்மொழி பலபல புதிய உள்ளடக்கங்களால் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளவும் வேண்டும்; அதே நேரத்தில் பழஞ்சிறப்பைத் தக்க வைத்துக்கொள்ளவும் வேண்டும் என்பதே கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆசை ஆகும்.

**4. கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய கவிதை நூல்களில் சிலவற்றை எழுதுக.**

- ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரியநிழல், ஒருகிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி.

**5. கவிஞர் சிற்பி குறிப்பிடும் முத்தமிழின் சிறப்புகள் யாவை?**

- எங்களின் உள்ளத்தில் பொங்கிவரும் கவிதை வெறிக்கு உணவாக எப்பொழுதும் நீக்கமற நிறைந்தவள் தமிழ்மொழியே! தமிழ் வளர முச்சங்கம் வழி உதவியவளும், வள்ளல் பலரைத் தமிழ்நாட்டிற்குத் தந்தவளும் தமிழ்த்தாய் ஆவாள்.

**6. கவிஞர் சிற்பி எழுதியுள்ள உரைநடைநூல்கள் யாவை?**

- இலக்கியச்சிந்தனைகள், மலையாளக்கவிதை, அலையும் சுவடும்.

**7. தமிழ் எத்தகைய வலிமை வாய்ந்தது? (ப.ஆ.க-3)**

- தமிழர்களைச் சூழ்ந்திருக்கும் அடிமைத்தனமும், அறியாமையும் முழுவதுமாக அவர்களை விட்டு அகன்றிட; அவர்கள் சிறைப்பட்டிருக்கும் அடிமைத்தன கூண்டினை உடைத்திட சிங்கம் போலச் சீறிப்பாயும் வலிமை வாய்ந்தது தமிழ்மொழி.

**8. ''முன்னம் ஓர்நாள் பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்'' - யார், யாரைப்பற்றி கூறியது? (ப.ஆ.க-5)**

- தமிழன்னையைப் பற்றி சிற்பி பாலசுப்பிரமணியன் கூறியது.

**9. தமிழ் மொழியின் சிறப்புகளாக நீவிர் அறிவன யாவை? (ப.ஆ.க-6)**

- உழைப்பாளர்களின் உழைப்பைப் பாட தமிழே வேண்டும்.
- சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பாண்டியரின் சங்கத்தில் இருந்து செம்மொழியாக ஆட்சி செய்த மொழி.
- பாரி போன்ற வள்ளல்கள் பலரை இத்தமிழ் மண்ணிற்குத் தந்த சிறப்புடையவள்.

## சிறுவினா

**1. தமிழ் அன்னை ஏன் சீறி வரவேண்டும் எனச் சிற்பி பாலசுப்பிரமணியம் விரும்புகிறார்?**

- உள்ளத்தில் பொங்கிவரும் உணர்வுகளை உணர்ச்சி மிகு கவிதையாக எழுத முத்தமிழே நீ உதவிசெய்கின்றாய். நீ பாண்டிய மன்னர்கள் அமைத்த சங்கத்திலே, தன்னிகரற்ற செம்மொழியாய் இருந்து ஆட்சிச் செய்தவள்! பாரி போன்ற வள்ளல்கள் பலரை இத்தமிழ் மண்ணிற்குத் தந்து அழியாப் புகழ்பெற்றவள்.
- பண்டைய நாளிலிருந்த தமிழ் நலமும் தமிழ்நாட்டுப் பொதுமை நலமும் மீண்டும் இத்தமிழ் மண்ணில் பிறப்பதற்கு நீ குயில் போலக் கூவி வரவேண்டும். இன்று தமிழர்களைச் சூழ்ந்திருக்கும் அடிமைத்தனமும், அறியாமையும் முழுவதுமாக அவர்களை விட்டு அகன்றிட அவர்கள் சிறைப்பட்டிருக்கும் அடிமைத்தன கூட்டினை உடைத்திட, சிங்கம் போலச் சீறி நீ புறப்பட்டு வரவேண்டுமெனச் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



2. **கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியத்தின் இலக்கியப் பணி குறித்து எழுதுக? (ப.ஆ.க-1)**
   - ➢ கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் எனப் பன்முகம் கொண்டவர் சிற்பி பாலசுப்பிரமணியம்; பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்;
   - ➢ மொழிபெயர்ப்புக்காகவும் 'ஒரு கிராமத்து நதி' என்னும் கவிதை நூலிற்காகவும் இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்றவர். இவருடைய கவிதைகள் ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி ஆகியவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
   - ➢ இவர் ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி முதலிய பல கவிதை நூல்களை ஆக்கியவர்; இலக்கியச்சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும் உள்ளிட்ட உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார்;
   - ➢ மலையாளத்திலிருந்து கவிதைகளையும் புதினங்களையும் மொழிபெயர்த்துள்ளார்; சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராகவும் இருக்கிறார்.

## நெடுவினா

1. **தமிழ்மொழி மீண்டும் சீறிவர வேண்டுமென்று கவிஞர் சிற்பி தமிழை அழைக்கும் காரணங்களைத் தொகுத்து எழுதுக.**

**இயற்கையைப் பாட வருக தமிழே!**

- ❖ மாலை நேரத்தில் சிவந்த கதிர்களைச் சுருக்கிக் கதிரவன் மலைக்குப் பின் சென்று மறைவான்.
- ❖ அம்மாலை நேர வானம் கதிரவனின் ஒளிபட்டுச் செந்நிறப் பூக்காடகக் காட்சியளிக்கும்.
- ❖ அக்காட்சியைப் பாட தமிழே வா!

**தொழிலாளர்களைப் பாட வருக தமிழே!**

- ❖ தினமும் உழைக்கும் தொழிலாளர்கள் கைகளும் மாலை நேர வானம் போலச் சிவந்திருக்கும்.
- ❖ தொழிலாளர்களின் திரண்ட தோள்களில் முத்துமுத்தாய் வியர்வை பூத்திருக்கும்.
- ❖ இக்காட்சிகளைப் பாட தமிழே நீ வா!

**தமிழின் பழமை நலம்:**

- ❖ பொங்கி வரும் கவிதைக்கு உணவாக விளங்குவது முத்தமிழாகும்.
- ❖ பாண்டியனின் ஆட்சிப் பகுதியான மதுரையில் சங்கம் அமைத்து அரசாட்சி செய்த சிறப்புடையது.
- ❖ பாரி போன்ற வள்ளல்களைத் தமிழ்நாட்டிற்குத் தந்த பெருமையுடையது.

**சிங்கம் போல சீறி வா:**

- ❖ பழமை நலம் மீண்டும் பிறக்க மேனி சிலிர்க்க தமிழ்க் குயிலே மீண்டும் கூவி வா!
- ❖ குளிர்ச்சியான பொதிகை (குற்றால) மலையில் தோன்றிய தென்னாட்டுத் தமிழே! உன்னைப் புதுப்பிக்க புறப்பட்டு வா!
- ❖ தமிழரின் அடிமைத்தனமும், அறியாமையும் அகன்றிடவும், அவர்கள் சிறைப்பட்டிருக்கும் கூண்டினை உடைத்திட சிங்கம் போலச் சீற்றத்தோடு வா!

## இலக்கணக்குறிப்பு

| | |
|---|---|
| 1. **செம்பரிதி, செந்தமிழ், செந்நிறம்** | - பண்புத்தொகைகள் |
| 2. **முத்துமுத்தாய்** | - அடுக்குத்தொடர் |
| 3. **சிவந்து, ஈன்று, அறிந்து (ப.ஆ.க-5)** | - வினையெச்சம் |
| 4. **வியர்வைவெள்ளம், தமிழ்க்குயிலே** | - உருவகம் |
| 5. **நீயுள்ளாய், தந்தாய், இருந்தாய்** | - முன்னிலை ஒருமை வினைமுற்றுகள் |
| 6. **எழுந்த சிங்கம்** | - பெயரெச்சம் |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## உறுப்பிலக்கணம்

1. **சாய்ப்பான் = சாய் + ப் + ப் + ஆன்,**
   **சாய்** - பகுதி,
   **ப்** - சந்தி,
   **ப்** - எதிர்கால இடைநிலை,
   **ஆன்** - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி

2. **விம்முகின்ற = விம்மு + கின்று + அ,**
   **விம்மு** - பகுதி,
   **கின்று** - நிகழ்கால இடைநிலை,
   **அ** - பெயரெச்ச விகுதி.

3. **வியந்து = விய + த் (ந்) + த் + உ,**
   **விய** - பகுதி,
   **த்** - சந்தி, ந் ஆனது விகாரம்,
   **த்** - இறந்தகால இடைநிலை,
   **உ** - வினையெச்ச விகுதி

4. **இருந்தாய் = இரு + த் (ந்) + த் + ஆய்,**
   **இரு** - பகுதி,
   **த்** - சந்தி, ந் - ஆனது விகாரம்,
   **த்** - இறந்தகால இடைநிலை,
   **ஆய்** - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

## புணர்ச்சி விதி

**1.செம்பரிதி = செம்மை + பரிதி**
- ''ஈறுபோதல்'' - என்ற விதிப்படி 'மை' விகுதி கெட்டு செம் + பரிதி - செம்பரிதி என்றானது.

**2. வானமெல்லாம் = வானம் + எல்லாம் (பெ.ஆ.க-4)**
- ''உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'' - என்ற விதிப்படி வானமெல்லாம் என்றானது.

**3. உன்னையல்லால் = உன்னை + அல்லால்**
- ''இஈஐ வழி யவ்வும்'' - என்ற விதிப்படி உன்னை + ய் + அல்லால் என்றானது.
- ''உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே''- என்ற விதிப்படி- உன்னையல்லால் என்றானது.

**4. செந்தமிழே - செம்மை + தமிழே (மார்ச்.20)**
- ''ஈறுபோதல்'' - என்ற விதிப்படி 'மை' விகுதி கெட்டு - செம் + தமிழே என்றானது.
- ''முன்னின்ற மெய் திரிதல்'' - என்ற விதிப்படி - செந்தமிழே என்றானது.

**உரைநடை உலகம்**

# தமிழ் மொழியின் நடை அழகியல்

- தி.சு.நடராசன்

## பலவுள் தெரிக.

1. **செய்யுளை ஓர் உள்ளமைப்பாகக் கூறும் நூல்**
   அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம் இ) யாப்பருங்கலக்காரிகை ஈ) தண்டியலங்காரம்
   **[ஆ) தொல்காப்பியம்]**

2. **காளைகளில் பல இனங்களைக் காட்டும் நூல்**
   அ) தொல்காப்பியம் ஆ) முல்லைக்கலி இ) புறநானூறு ஈ) பதிற்றுப்பத்து
   **[ஆ) முல்லைக்கலி]**

3. **பாடலின் தளத்தைப் பாத்திகட்டி வரப்புயர்த்தும் பணியைச் செய்வது**
   அ) தொடரியல் வடிவம் ஆ) ஒலிக்கோலம் இ) சொற்றொடர் நிலை ஈ) சொற்புலம்
   **[அ) தொடரியல் வடிவம்]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

4. நம்பி நெடுஞ்செழியனைக் குறித்துப் பாடியவர்
அ) கபிலர் ஆ) ஔவையார் இ) பேரெயின் முறுவலார் ஈ) நக்கண்ணையார்
**[இ) பேரெயின் முறுவலார்]**

5. 'தமிழ் மொழியின் நடை அழகியல்' என்ற பாடப்பகுதி தி.சு.நடராசனின் எந்த நூலின் சில பகுதிகள்
அ) கவிதையெனும் மொழி ஆ) திறனாய்வுக் கலை
இ) தமிழின் பண்பாட்டு வெளிகள் ஈ) தமிழ் அழகியல் **[ஈ) தமிழ் அழகியல்]**

6. 'படுவழிப்படுக, இப்புகழ் வெய்யோன் தலையே' - இப்பாடல் வரி இடம்பெற்ற நூல்
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) புறநானூறு ஈ) அகநானூறு **[இ) புறநானூறு]**

7. 'நீர்படு பசுங்கலம்' - இதில் 'பசுங்கலம்' என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு
அ) தொகை நிலை ஆ) பண்புத்தொகை இ) உவமைத்தொகை ஈ) வினைத்தொகை
**[ஆ) பண்புத்தொகை]**

8. கி.ராஜநாராயணன் எழுதிய குறுநாவல்
அ) செம்மறி ஆ) கடா இ) கிடை ஈ) மறி **[இ) கிடை]**

9. திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் குறிப்பிடத்தக்கவர்
அ) சு.நெல்லையப்பர் ஆ) ரா.அ.பத்மநாபன் இ) தி.சு.நடராசன் ஈ) இளசைமணி
**[இ) தி.சு.நடராசன்]**

10. புணரின் புணராது பொருளே; பொருள்வயின்
பிரியின் புணராது புணர்வே - என்னும் அடிகள் இடம் பெற்ற நூல்
அ) புறநானூறு ஆ) நற்றிணை இ) அகநானூறு ஈ) கலித்தொகை
**[ஆ) நற்றிணை]**

## கருத்து சரியா? தவறா?

1. **கருத்து 1 : சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன.**
**கருத்து 2 : தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரம்**
அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
இ) கருத்து 1 சரி, 2 தவறு ஈ) இரண்டு கருத்தும் சரி **[ஈ) இரண்டு கருத்தும் சரி]**

2. **கருத்து 1 : முல்லைக்கலியில் ஆடுகளின் பல இனங்களைக் காட்டும் சொற்கள் நிரம்பிக் கிடக்கின்றன.**
**கருத்து 2 : சொல்வளம் ஒரு நாட்டின் அடையாளமாகவும் இருக்கிறது.**
அ) கருத்து 1 தவறு ஆ) கருத்து 1 சரி, 2 தவறு
இ) கருத்து இரண்டும் தவறு ஈ) கருத்து 1 தவறு, 2 சரி **[இ) கருத்து இரண்டும் தவறு]**

3. **கருத்து : தொன்மையான மொழி சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் தான் தொடங்குகிறது.**
**விளக்கம் : மொழித்தோன்ற அடிப்படையாக இருப்பது ஒலியே.**
**ஒலியை வெவ்வேறு வடிவங்களில் உச்சரிக்கும்போது மொழித் தோன்றுகிறது.**
அ) கருத்து சரி விளக்கம் தவறு ஆ) கருத்தும் விளக்கமும் சரி
இ) கருத்து தவறு விளக்கமும் தவறு ஈ) கருத்து தவறு விளக்கம் சரி **[ஆ) கருத்தும் விளக்கமும் சரி]**

## சரியானதைத் தேர்க.

1. அ) பாவகை - ஐந்து
   ஆ) வஞ்சி - வெண்பா நடைத்தே
   இ) பனிநீர் - தொகை மொழி
   ஈ) காமர் வனப்பு - தொடரியல் போக்கு **[இ) பனிநீர் - தொகை மொழி]**

2. அ) கடாஅ யானைக் கலிமான் பேக - முல்லைக்கலி
   ஆ) புணரின் புணராது பொருளே - தொல்காப்பியம்
   இ) இவன் தந்தை தந்தை - நற்றிணை
   ஈ) யாமும் பாரியும் உளமே - புறநானூறு **[ஈ) யாமும் பாரியும் உளமே - புறநானூறு]**

## பொருந்தாததைத் தேர்க.

1. அ) கன்னி விடியல் - தொகைமொழி
   ஆ) பொய்படுசொல் - மறித்தாக்கம்
   இ) சங்கப்பாடல்கள் - மறுதலைத்தொடர்
   ஈ) கி.ராஜநாராயணன் - கிடை **[ஆ) பொய்படுசொல் - மறித்தாக்கம்]**

## குறுவினா

1. **தனக்குரிய அழகியல் சாதனமாக இலக்கியம் மாற்ற வேண்டியவை யாவை?**
   - வரலாறு முழுவதும் மனித நாக்குகளின் ஈரம் பட்டுக் கிடக்கும் மொழியானது பேசுபவன், கேட்பவன் ஆகியோருடைய தனிப்பட்ட சூழல்கள், பேசும்போதும் கேட்கும் போதுமான தனிச்சூழல்கள் ஆகியவற்றைத் தனக்குரிய அழகியல் சாதனமாக மாற்ற வேண்டும்.

2. **தொல்காப்பியத்தின் தனிச்சிறப்பான பண்பு யாது?**
   - எழுத்து, சொல், செய்யுள் ஆகிய மூன்றும் தொல்காப்பியத்தின் தனிச்சிறப்பான பண்பாகும்.

3. **மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?**
   - உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி முதலியவை மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவையாகும்.

4. **'கலை முழுமை' பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுவது யாது? (மார்ச்.20)**
   - இலக்கியத்திற்கான நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்து நிலைகள். கலை உருவாக்கத்தின்போது சரிவர இணைந்திருக்க வேண்டும் என்று கலை முழுமை குறித்துத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

5. **தமிழ் இலக்கியத்தின் பயன்களாகக் கட்டுரையாசிரியர் கூறுவன யாவை?**
   - அறம், பொருள், இன்பம் அல்லது வேறு ஏதோ ஓர் உயர்ந்த குறிக்கோளை உணர்த்துவனவாகத் தமிழ் இலக்கியத்தின் பயன்கள் இருக்க வேண்டும்.

6. **பாடலின் தளத்தை ஏர் நடத்திப் பண்படுத்திப் போகின்றவை எவை?**
   - ஒலிக்கோலம், சொற்புலம், சொற்றொடர் நிலை.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



7. **சொல்வளம் என்பது யாது?**

- சொல்வளம் என்பது, ஒரு பொருள் குறித்துவரும் பல சொல்லாய் வருதலும்,
- பல பொருள் குறித்துவரும் ஒரு சொல்லாய் வருதலும்,
- பல துறைகளுக்கும் பல சூழல்களுக்கும் பல புனைவுகளுக்கும் உரியதாய் வருதலும்,
- உணர்வும் தெளிவும் கொண்டதாய் வருதலும் ஆகும்.

8. **பாடலின் தளத்தை முழுமையடையச் செய்பன எவை?**

- ஒலிக்கோலம், சொற்புலம், சொற்றொடர் நிலை, தொடரியல் வடிவம்.

9. **தமிழ் மொழியில் இடம்பெற்றுள்ள சில தொகை மொழிகளை எழுதுக.**

- வைகுறு விடியல், கன்னிவிடியல், பனிநீர், ஒலி வெள்ளருவி, நள்ளென் யாமம், நெடுநீர், நகைக் கூட்டம், புல்லென் மாலை.

10. **தி.சு.நடராசன் அவர்கள் எங்கெல்லாம் பணியாற்றியுள்ளார்?**

- மதுரை காமராசர் பல்கலைக்கழகம், போலந்து நாட்டின் வார்சா பல்கலைக் கழகம், திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்ப்பேராசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

11. **‘கலைமுழுமை’ - என்பதை விளக்குக. (ப.ஆ.க-3)**

- அறம், பொருள், இன்பம் ஆகிய அறவியல் சார்ந்த கருத்துகள் கலை உருவாக்கத்தின்போது சரிவர இணைந்திருக்கும் முழுமையே கலை முழுமை என்று அழைக்கப்படுகிறது.

## சிறுவினா

1. **சங்கப்பாடல்கள் பலவற்றுள் அமைந்துள்ள மறுதலைத் தொடரியல் போக்குக்குச் சான்று தந்து விளக்குக.**

- தமிழ் மொழியில் உரைநடை வழக்கு, பேச்சு வழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய் + செயப்படுபொருள் அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை என்று வருவதே மரபு. ஆனால் சங்கப்பாடல்கள் பலவற்றில் இந்நிலை மாறி வருகிறது. இதனைக் கவிதை மறுதலைத்தொடர் என்பர்.
- சிறப்பாக முடியும் பாடல்களின் இறுதியில்தான் இந்தத் தொடரியல் பிறழ்வுநிலை பெரிதும் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாகப் பேரெயின் முறுவலார், நம்பி நெடுஞ்செழியனுடைய சாவுச் சடங்கில் முரண்பாடான கருத்து உருவாகியது பற்றிப் பாடியது பின்வரும் பாடல்,

**இடுக வொன்றோ, சுடுகவொன்றோ;**
**படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே!**

(புறம் :239)

✶ என்ற இப்பாடலில் இடம்பெற்றுள்ள இறுதி அடி ஓர் எளிமையான தொடரியல் பிறழ்வோடு அமைந்திருக்கிறது.

✶ ‘தொடியுடைய தோள் மணந்தனன்’ எனத் தொடங்கும் இப்பாடலில் தொடர்ந்து வரும் 20 அடிகளில் தொடர்கள் வரிசையாகவும் நேர்படவும் செல்வதைக் காணலாம். ஒவ்வோர் அடியையும் தனித்தனியே வினைமுற்றுகளோடு, தன்னிறைவோடு, 18 பண்புகளை வரிசைப்படுத்தித் தொகுத்துக் கூறும் புலவர் இறுதியில் நெடுஞ்செழியனுடைய உடலைப் புதைத்தால் புதை; சுட்டால் சுடு என்று அலுத்துக் கொள்கிறார். இது சங்கப் பாடலின் மறுதலைத் தொடரியல் போக்குக்குத் தகுந்த சான்றாகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



2. **செவ்வியல் இலக்கியம் கட்டமைக்க விரும்பிய அறம் ஏது?**

- சங்க இலக்கியம் அகத்திணை சார்ந்த செய்திகளையும் புறத்திணை சார்ந்த செய்திகளையும் பாடற்பொருளாக வடிவமைத்துள்ளது. தொல்காப்பியம் புணர்தல், பிரிதல் முதலான அகம் சார்ந்த ஐந்திணைகளை அறம், பொருள், இன்பம் ஆகிய அறவியல் 'இலட்சியப் பொருள்களோடு' இரண்டற இணைத்து விடுகிறது. பாவகைகள் நான்கு எனக் குறிப்பிடும் தொல்காப்பியம் தொடர்ந்து,

  **"அந்நில மருங்கின் அறமுதலாகிய**
  **மும்முதற் பொருட்கும் உரிய என்ப"** (தொல்.செய்.105) - என்று பாவகைகளோடு

- அறவியல் கருத்துகளையும் இணைத்துச் சொல்கிறது. செவ்வியல் தமிழ் இலக்கியம் கட்டமைக்க விரும்பிய அறம் இதுவே ஆகும்.

3. **கவிதை மறுதலைத் தொடரைச் சான்றுடன் விளக்குக. (ப.ஆ.க-6)**

- தொடரமைப்பு என்பது எழுவாய் + செயப்படுபொருள் + பயனிலை என வரும். ஆனால் சங்கப்பாடல்கள் பலவற்றில் இவ்வமைப்பு முறை பிறழ்ந்து வருகிறது. இதனை 'கவிதை மறுதலைத் தொடர்' என்பர்.
- சான்றாகப் பேரெயின் முறுவலார் நம்பி நெடுஞ்செழியனுடைய பண்புகளைக் குறித்து பாடியுள்ள புறநானூறு 239-ஆம் பாடலில் அரசரின் 18 பண்புகளை வரிசைப்படுத்திக் கூறிவிட்டு இறுதி வரிகளில்,

  **இடுக வொன்றோ, சுடுக வொன்றோ;**
  **படுவழிப்படுக, இப்புகழ் வெய்யோன் தலையே** (புறம் : 239)

  - என ஓர் எளிமையான தொடரியல் பிறழ்வோடு அமைந்திருப்பதைக் காணலாம்.

## கவிதைப்பேழை! **தன்னேர் இலாத தமிழ்** - தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்

### பலவுள் தெரிக.

1. **அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல்**
   அ) முத்துவீரியம் ஆ) வீரசோழியம் இ) மாறனலங்காரம் ஈ) இலக்கண விளக்கம்
   **[இ) மாறனலங்காரம்]**

2. **கீழ்க்காண்பவற்றுள் 'வினையாலணையும் பெயர்' எது?**
   அ) உயர்ந்தோர் ஆ) வந்தான் இ) நடப்பான் ஈ) உயர்ந்து **[அ) உயர்ந்தோர்]**

3. **'ஈறுபோதல்', 'முன்னின்ற மெய் திரிதல்' இச்சொல்லுக்குரிய புணர்ச்சி விதி**
   அ) கருங்குயில் ஆ) வெங்கதிர் இ) நெடுந்தேர் ஈ) முதுமரம் **[ஆ) வெங்கதிர்]**

4. **'விளங்கிய' - இச்சொல்லின் சரியான பகுபத உறுப்பிலக்கண பிரிப்பு**
   அ) விள + ங் + க் + இய ஆ) விளங்கு + க் + ய் + அ
   இ) விளங்கு + இய ஈ) விளங்கு + இ **[ஈ) விளங்கு + இ]**

5. **அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்**
   அ) தொல்காப்பியம் ஆ) வீரசோழியம் இ) தண்டியலங்காரம் ஈ) முத்துவீரியம்
   **[இ) தண்டியலங்காரம்]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



6. **தண்டியலங்காரம் கொண்டுள்ள பிரிவு**
அ) மூன்று ஆ) ஏழு இ) ஐந்து ஈ) நான்கு **[அ) மூன்று]**

7. **தண்டியலங்காரம் எந்நூலைத் தழுவி எழுதப்பட்டது.**
அ) காவியதர்சம் ஆ) மாறனலங்காரம் இ) வீரசோழியம் ஈ) குவலயானந்தம்
**[அ) காவியதர்சம்]**

8. **தண்டியலங்கார ஆசிரியரின் காலம்**
அ) கி.பி.13 ஆ) கி.பி. 10 இ) கி.பி.12 ஈ) கி.பி.9 **[இ) கி.பி.12]**

9. **தமிழ்மொழி தோன்றிய மலையாகச் சொல்லப்படுவது**
அ) பறம்பு மலை ஆ) நளிமலை இ) பொதிய மலை ஈ) விந்திய மலை
**[இ) பொதிய மலை]**

10. **தண்டியலங்காரத்தை எழுதியவர்**
அ) தண்டி ஆ) மாறன் இ) அகத்தியர் ஈ) பவணந்தி **[அ) தண்டி]**

## கருத்து சரியா? தவறா

1. **கருத்து 1 : மக்களின் அறியாமையை அகற்றுவது தமிழ்மொழியாகும்.**
**கருத்து 2 : புற இருளைப் போக்க கதிரவன் உதவும்.**
அ) இரண்டு கருத்தும் சரி ஆ) கருத்து 1 சரி, 2 தவறு
இ) கருத்து 1 தவறு, 2 சரி ஈ) இரண்டு கருத்தும் தவறு **[அ) இரண்டு கருத்தும் சரி]**

2. **கருத்து 1 : 'தொன்னூல் விளக்கம்' அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் நூல்**
**கருத்து 2 : 'குவலயானந்தம்' என்னும் நூல் முழுமையான இலக்கண நூல்**
அ) இரண்டு கருத்தும் சரி ஆ) இரண்டு கருத்தும் தவறு
இ) கருத்து 1 தவறு, 2 சரி ஈ) இவற்றில் எதுவுமில்லை **[ஆ) இரண்டு கருத்தும் தவறு]**

## சரியானதைத் தேர்க.

1. **அ) வீரசோழியம்** - நாவல்
**ஆ) முத்து வீரியம்** - சிறுகதை
**இ) குவலயானந்தம்** - அணியிலக்கணம்
**ஈ) மாறனலங்காரம்** - சொல்லிணக்கணம் **[இ) குவலயானந்தம் - அணியிலக்கணம்]**

2. **அ) வந்து** - பெயரெச்சம்
**ஆ) உயர்ந்தோர்** - பலர்பால் வினைமுற்று
**இ) இலாத** - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
**ஈ) வெங்கதிர்** - பண்புத்தொகை **[ஈ) வெங்கதிர் - பண்புத்தொகை]**

## பொருந்தாததைத் தேர்க.

1. **அ) தமிழ்மொழி** - பொதிய மலை
**ஆ) தொல்காப்பியம்** - இலக்கண நூல்
**இ) தண்டியலங்காரம்** - தண்டி
**ஈ) காவியதர்சம்** - தமிழ்மொழி இலக்கண நூல் **[ஈ) காவியதர்சம் - தமிழ்மொழி இலக்கணநூல்]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## பொருத்துக.

1. அ) வெங்கதிர் - 1. இடைக்குறை
   ஆ) இலாத - 2. வினையெச்சம்
   இ) வந்து - 3. வினையாலணையும் பெயர்
   ஈ) உயர்ந்தோர் - 4. பண்புத்தொகை

   அ) 4 2 3 1 ஆ) 4 1 3 2 இ) 4 1 2 3 ஈ) 2 3 1 4 **[இ) 4 1 2 3]**

---

## குறுவினா

1. **தண்டியலங்கார நூலைப் பற்றிச் சிறுகுறிப்புத் தருக.**

   ➢ அணி இலக்கணத்தைக் கூறும் சிறப்பான நூல்களில் ஒன்று தண்டியலங்காரமாகும். 'காவியதர்சம்' என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்ட நூலாகும். இந்நூலை எழுதியவர் தண்டி ஆவார். இவரது காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டு. தண்டியலங்காரம் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்று பெரும் பிரிவுகளை உடையது.

---

2. **அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?**

   ➢ தண்டியலங்காரம், மாறனலங்காரம், குவலயானந்தம்

---

## சிறுவினா

1. **தன்னேர் இலாத தமிழின் சிறப்புக் குறித்துத் தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல் உணர்த்தும் செய்தி யாது?**

   ➢ இந்நில உலகில் வாழும் மக்கள் அனைவராலும் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது கதிரவனாகும்.

   ➢ குளிர்ச்சி பொருந்திய பொதிய மலையில் தோன்றி, சான்றோர்களால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதும் எதனோடும் ஒப்பிட்டுக் கூற முடியாததுமான மொழி தமிழ்மொழி ஆகும். புறஇருளைப் போக்கும் கதிரவனை விட தமிழ்மொழி தனக்கு நிகரில்லாத மொழி என்று தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல் உணர்த்துகின்றது.

---

2. **பொருள் வேற்றுமையணியைச் சான்று தந்து விளக்குக.**

   **அணி இலக்கணம்**

   ➢ இது வேற்றுமை அணியின் ஒரு பிரிவாகும். செய்யுளில் கவிஞர் இரு வேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப் பின் ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.

   **சான்று**

   **ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி**
   **ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்**
   **மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது**
   **தன்னேர் இலாத தமிழ்!**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**விளக்கம்**

- எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றும் கதிரவன் உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றும்.
- குளிர்ச்சி பொருந்திய பொதிய மலையிலே தோன்றிய தமிழ்மொழி, மக்களின் அறியாமை என்னும் அக இருளை அகற்றும். அத்தமிழ் மொழிக்கு நிகராக வேறெந்த மொழியும் இல்லை.

**அணிப்பொருத்தம்**

- கதிரவனும், தமிழ்மொழியும் மலையில் தோன்றுகின்றன என ஒப்புமையைக் கூறி, கதிரவன் புற இருளை அகற்றும்; தமிழ்மொழி அக இருளை அகற்றும், அதேநேரத்தில் அதற்கு நிகராக வேறெந்த மொழியும் இவ்வுலகில் இல்லை என்று வேறுபடுத்திக் காட்டியதால் இப்பாடல் பொருள் வேற்றுமையணி ஆகும்.

## இலக்கணக்குறிப்பு

1. **வெங்கதிர்** - பண்புத்தொகை
2. **உயர்ந்தோர்** - வினையாலணையும் பெயர்
3. **இலாத** - இடைக்குறை

## உறுப்பிலக்கணம்

1. **உயர்ந்தோர் = உயர் + த் (ந்) + த் + ஓர்** **(பெ.ஆ.க-3)**

**உயர் - பகுதி,**
**த்** - சந்தி; த் ந் ஆனது விகாரம்
**த்** - இறந்தகால இடைநிலை
**ஓர்** - பலர்பால் வினைமுற்று விகுதி.
[**ஆர்** - என்பதன் ஈற்றயலெழுத்தான
"**ஆ**" - "ஓ" ஆகத் திரியும் (நன் 353)]

2. **விளங்கி = விளங்கு + இ (பெ.ஆ.க-3)**

**விளங்கு** - பகுதி,
**இ** - வினையெச்ச விகுதி

3. **வந்து = வா (வ) + த் (ந்) + த் + உ**

**வா** - பகுதி; வ எனக் குறுகியது விகாரம்
**த்** - சந்தி; த் ந் ஆனது விகாரம்
**த்** - இறந்தகால இடைநிலை
**உ** - வினையெச்ச விகுதி.

## புணர்ச்சி விதி

1. **ஆங்கவற்றுள் = ஆங்கு + அவற்றுள்**

விதி (i) "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" என்ற விதிப்படி **'ஆங்க் + அவற்றுள்'** என்றானது,

விதி (ii) "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி **'ஆங்கவற்றுள்'** என்றானது.

2. **தனியாழி = தனி + ஆழி**

விதி (i) 'இஈஐ வழி யவ்வும்' என்ற விதிப்படி 'யகர' உடம்படுமெய் தோன்றி **'தனி + ய் + ஆழி'** என்றானது,

விதி (ii) 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி **'தனியாழி'** என்றாது.

3. **வெங்கதிர் = வெம்மை + கதிர்**

விதி (i) 'ஈறுபோதல்' என்ற விதிப்படி 'மை' கெட்டு **'வெம் + கதிர்'** என்றானது,

விதி (ii) 'முன்னின்ற மெய் திரிதல்' என்ற விதிப்படி 'ம்' 'ங்' -ஆக திரிந்து **'வெங்கதிர்'** என்றானது.

**விரிவானம்** # தம்பி நெல்லையப்பருக்கு - பாரதியார்

## பலவுள் தெரிக.

1. **தமிழ்நாட்டில் வீதி தோறும் இருக்க வேண்டியது எஃது எனப் பாரதியார் விரும்புகிறார்.**
   அ) ஆலயம் ஆ) தொழிற்சாலை இ) பள்ளிக்கூடம் ஈ) இவற்றில் எதுமில்லை
   **[இ) பள்ளிக்கூடம்]**

2. **பாரதியார் நெல்லையப்பருக்கு, நம் பாடப்பகுதியில் உள்ள கடிதத்தை எங்கிருந்து எழுதினார். (பெ.ஆ.க-3)**
   அ) எட்டயபுரம் ஆ) திருநெல்வேலி இ) புதுச்சேரி ஈ) சென்னை **[இ) புதுச்சேரி]**

3. **'வம்சமணி தீபிகை' என்னும் நூலை எழுதியவர்**
   அ) பாரதியார் ஆ) கவிகேசரி சாமி தீட்சிதர்
   இ) இளசைமணி ஈ) பரலி சு. நெல்லையப்பர் **[ஆ) கவிகேசரி சாமி தீட்சிதர்]**

4. **பாரதியார் நெல்லையப்பருக்கு எழுதிய கடிதங்களைப் பதிப்பித்தவர்**
   அ) இளசைமணி ஆ) ரா.அ.பத்மநாபன் இ) கி.ராஜநாராயணன் ஈ) கவிகேசரி சாமி தீட்சிதர்
   **[ஆ) ரா.அ.பத்மநாபன்]**

5. **பரலி சு. நெல்லையப்பர் பாரதியாரை விட எத்தனை ஆண்டுக்கு இளையவர்**
   அ) ஏழாண்டுகள் ஆ) ஏழரை ஆண்டுகள் இ) ஒன்பதாண்டுகள் ஈ) எட்டாண்டுகள்
   **[அ) ஏழாண்டுகள்]**

6. **தேசபக்தன் இதழின் துணையாசிரியர்**
   அ) பாரதியார் ஆ) பரலி சு. நெல்லையப்பர்
   இ) இளசைமணி ஈ) சுப்பிரமணிய சிவா **[ஆ) பரலி சு. நெல்லையப்பர்]**

7. **பாரதியார் நடத்திய இதழ்கள்**
   அ) சூரியோதயம், தேசபக்தன் ஆ) சூரியோதயம், நெல்லைத்தென்றல்
   இ) லோகோபகாரி, கர்மயோகி ஈ) சூரியோதயம், கர்மயோகி **[ஈ) சூரியோதயம், கர்மயோகி]**

8. **பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது - என்று கடிதம் எழுதியவர்**
   **(பெ.ஆ.க-1)**
   அ) நெல்லையப்பர் ஆ) பாரதியார் இ) வாணிதாசன் ஈ) பாரதிதாசன் **[ஆ) பாரதியார்]**

## கருத்து சரியா? தவறா?

1. **கருத்து 1 : பாரதி, தான் கல்வி கற்க உதவி வேண்டி எட்டயபுரம் அரசருக்குக் கவிதைக் கடிதம் எழுதினார்.**
   **கருத்து 2 : பாரதி, தன் கவிதைக் கடிதத்தைப் பதினாறு வயதில் எழுதவில்லை.**
   அ) இரண்டு கருத்தும் சரி ஆ) கருத்து 1 தவறு, 2 சரி
   இ) கருத்து 1 சரி, 2 தவறு ஈ) இரண்டு கருத்தும் தவறு **[அ) இரண்டு கருத்தும் சரி]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

2. கருத்து 1 : ஆணும் பெண்ணும் ஓருயிரின் இரண்டு தலைகள் என்றார் பாரதி.
கருத்து 2 : பரலி சு. நெல்லையப்பர் பாரதியின் பாப்பாப்பாட்டைப் பதிப்பித்தவர்.
அ) இரண்டு கருத்தும் தவறு ஆ) இரண்டு கருத்தும் சரி
இ) கருத்து 1 தவறு, 2 சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு **[ஈ) கருத்து 1 சரி, 2 தவறு]**

## சரியானதைத் தேர்க.

1. **அ) முரசுப்பாட்டு** - சு.நெல்லையப்பர்
**ஆ) நெல்லைத்தென்றல்** - பாரதியார்
**இ) பாரதி கடிதங்கள்** - ரா.அ.பத்மநாபன்
**ஈ) சு.நெல்லையப்பர்** - வம்சமணி தீபிகை **[இ) பாரதி கடிதங்கள் - ரா.அ.பத்மநாபன்]**

2. **அ) கவிகேசரி சாமி தீட்சிதர்** - பாரதி கடிதங்கள்
**ஆ) இளசைமணி** - வம்சமணி தீபிகை
**இ) கண்ணன்பாட்டு** - ரா.அ.பத்மநாபன்
**ஈ) வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாறு** - சு.நெல்லையப்பர்
**[ஈ) வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாறு - சு.நெல்லையப்பர்]**

## பொருந்தாததைத் தேர்க.

1. **அ) இளசைமணி** - வம்சமணி தீபிகை நூலின் மறுபதிப்பு
**ஆ) வம்சமணி தீபிகை** - கவிகேசரி சாமி தீட்சிதர்
**இ) பரலி சு. நெல்லையப்பர்** - ஆசிரியர்
**ஈ) பாரதி வாழ்த்து** - பரலி சு.நெல்லையப்பர் **[இ) பரலி சு. நெல்லையப்பர் - ஆசிரியர்]**

## பொருத்துக.

1. **அ) வம்சமணி தீபிகை** - 1. சு.நெல்லையப்பர்
**ஆ) பாரதி கடிதங்கள்** - 2. லோகோபகாரி
**இ) நெல்லைத்தென்றல்** - 3. ரா.அ.பத்மநாபன்
**ஈ) சு.நெல்லையப்பர்** - 4. கவிகேசரி சாமி தீட்சிதர்
அ) 4 3 2 1 ஆ) 4 3 1 2 இ) 4 2 3 1 ஈ) 4 1 3 2 **[ஆ) 4 3 1 2]**

## நூல்வெளி

மகாகவி பாரதி நெல்லையப்பருக்கு எழுதிய இக்கடிதம் ரா.அ.பத்மநாபன் பதிப்பித்த 'பாரதி கடிதங்கள்' என்னும் நூலில் இடம்பெற்றிருக்கிறது. பாரதி, பதினைந்து வயதில் கல்விகற்க உதவிவேண்டி எட்டயபுரம் அரசருக்கு எழுதிய கவிதைக் கடிதம் முதல், அவர்தம் மறைவிற்கு முன்னர் குத்திகேசவருக்கு எழுதிய கடிதம்வரை அனைத்தும் நம்மிடம் பேசுவதுபோல இருப்பதே அவருடைய நடையழகின் சிறப்பு. பாரதியாரைவிட ஏழாண்டுகள் இளையவரான பரலி சு.நெல்லையப்பரைப் பாரதி தன்னுடைய அருமைத் தம்பியாகவே கருதி அன்புகாட்டி வந்தார். பாரதியின் கடிதங்கள் மேலும் அவரை நன்றாகப் புரிந்துகொள்ளத் துணை புரிகின்றன.

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## எட்டயபுர ஜமீனுக்குப் பாரதி எழுதிய கவிதைக் கடிதம்

ஐயநின் அருளே அருங்கதி யென்ன
உய்ய இவண்வந் துற்று என் தந்தையார்
என்னையும் புறமொழிகற்க வென்றி யம்புவர்
என்னை யான் செய்குவ தின்றமிழ் கற்பினோ
பின்னை ஒருவரும் பேணார் ஆதலின்
கன்ன யான் அம்மொழி கற்கத் துணிந்தனன்; எனினும்
கைப்பொருள் அற்றான் கற்ப தெவ்வகை?

---

## இனிக்கும் இலக்கணம் — தமிழாய் எழுதுவோம்

### பலவுள் தெரிக.

1. **வேற்றுமைப் புணர்ச்சியில் லகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் லகரம் எவ்வாறு திரியும்.**

அ) இயல்பாகப் புணரும் ஆ) லகரம் டகரமாகும்

இ) லகரம் னகரமாகும் ஈ) லகரம் றகரமாகும் **[ஈ) லகரம் றகரமாகும்]**

2. **வேற்றுமைப் புணர்ச்சியில் ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் எவ்வாறு திரியும்.**


அ) ளகரம் லகரமாகும் ஆ) ளகரம் னகரமாகும்

இ) ளகரம் டகரமாகும் ஈ) இவற்றில் ஏதுவுமில்லை **[ஈ) இவற்றில் ஏதுவுமில்லை]**

### குறுவினா

1. **எழுதும்போது ஏற்படும் பிழைகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்? (ப.ஆ.க-1)**
   - எழுத்துப்பிழை
   - சொற்பொருட்பிழை
   - சொற்றொடர்ப்பிழை
   - பொதுவான பிழைகள் சில என வகைப்படுத்தலாம்.

---






Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# இயல் 5 நாடென்ப நாட்டின் தலை

*நாகரிகம்,தொழில்,வணிகம்*

கோரமண்டல் கடற்கரையில் அமைந்துள்ள செயிண்ட் ஜார்ஜ் கோட்டையின் ஓவியம்.



நன்றி - பிரிட்டிஷ் நூலகம்

## கற்றல் நோக்கங்கள்

- ஊர்களின் வரலாறு குறித்த தகவல்களைத் திரட்டிக் கட்டுரையாக எழுதும் திறன் பெறுதல்.
- இடைக்காலத்தில் கொண்டாடப்பட்ட திருவிழாக்களின்வழி மக்களின் நாகரிகக்கூறுகளை அறிந்து அவற்றின் இன்றைய தொடர்ச்சியை அறிய முற்படுதல்.
- திருவருட்பா வழியாக நேர்மறைச் சிந்தனைகளை அறிந்து பின்பற்ற முனைதல்.
- சங்க காலத் தமிழரின் பண்டமாற்று வணிகமுறையையும் பயன்படுத்தப்பட்ட கலைச்சொற்களையும் அறிந்து சமகால நிலையோடு ஒப்பிடுதல்.
- நகர்மயமாதல் ஏற்படுத்திய வாழ்வியல் தாக்கங்கள் குறித்த விழிப்புணர்வு பெறுதல்.
- படிமத்தின் காட்சித்தன்மை தரும் இயல்புகளை அறிந்து கவிதையில் ஆளவும் கவிதையைச் சுவைக்கவும் அறிந்துகொள்ளுதல்.

## பாடப் பகுதி

மதராசப்பட்டினம்

தெய்வமணிமாலை – இராமலிங்க அடிகளார்

தேவாரம் – திருஞான சம்பந்தர்

அகநானூறு – அம்மூவனார்

தலைக்குளம் – தோப்பில் முகமது மீரான்

படிமம்

திருக்குறள் – திருவள்ளுவர்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## இலக்கணத் தேர்ச்சிகொள் (பக்கம்.124)

1. **படிமம் என்பதன் பொருள் (ப.ஆ.க-2)**

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி **[இ) காட்சி]**

2. **'காலை இளம்வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' இக்கவிதையில்---- பயின்று வந்துள்ளது. பொருளுணர்ந்து (ப.ஆ.க-5)**

அ) பயன்படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம் **[ஆ) வினைப்படிமம்]**

3. **கூற்று** : உவமை உருவகம் போலப் படிமமும் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

**காரணம்** : எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்தினை விளக்குவதில்லை.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி

இ) கூற்றும் சரி, காரணமும் சரி ஈ) கூற்றும் தவறு, காரணமும் தவறு

**[அ) கூற்று சரி, காரணம் தவறு]**

4. **மெய்ப் படிமத்துக்குரிய பாடலைத் தேர்வு செய்க.**

அ) நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந்தாங்கு .........

ஆ) கட்டில் நிணக்கும் இழசினன் கையது .........

இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும் .........

ஈ) வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப ........ **[இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும் .........]**

5. **''மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது'' - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது.**

மெய்ப்படிமம்

## நம்மை அளப்போம் (பக்கம்.125)

### பலவுள் தெரிக.

1. **சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் - காரணம்-**

அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்

ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு

இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ஈ) அ, ஆ, இ அனைத்தும் **[ஈ) அ, ஆ, இ அனைத்தும்]**

2. **கூற்று :** இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.

**காரணம் :** கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி

இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று சரி, காரணம் சரி **[ஈ) கூற்று சரி, காரணம் சரி]**

3. **பொருத்துக.**

அ) திருவல்லிக்கேணி ஆறு - 1. மாவலிபுரச் செலவு

ஆ) பக்கிங்காம் கால்வாய் - 2. கல்கோட்டரி

இ) பல்லாவரம் - 3. அருங்காட்சியகம்

ஈ) எழும்பூர் - 4. கூவம்

அ) 1, 2, 4, 3 ஆ) 4, 2, 1, 3 இ) 4, 1, 2, 3 ஈ) 2, 4, 3, 1 **[இ) 4, 1, 2, 3]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

4. **'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு**
அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்

**[இ) முரண் பண்பு]**

5. **'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது? (ப.ஆ.க-3)**
அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி **[இ) நாய்]**

6. **சரியான எழுத்து வழக்கைத் தேர்ந்தெடுக்கவும். (ப.ஆ.க-6)**
அ) இப்ப எனக்குப் புரிஞ்சிச்சி நீயும் புரிஞ்சிக்க
ஆ) இப்போ எனக்குப் புரிஞ்சிருச்சி நீயும் புரிஞ்சிக்கோ
இ) இப்போ எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்.
ஈ) இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்

**[ஈ) இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்]**

## குறுவினா

1. **கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக. (ப.ஆ.க-3)**
கலிவிழா - திருமயிலையில் நடைபெறும் எழுச்சி மிக்க விழா
ஒலி விழா - திருமயிலையில் நடைபெறும் ஆரவார விழா

2. **கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக. (ப.ஆ.க-6)**
**கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்:**
   - ➢ காலின் மெக்கன்சியின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு 1869-இல் உருவாக்கப்பட்ட இந்நூலகம் அரிய ஓலைச்சுவடிகள், தாள்சுவடிகள், புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகளைக் கொண்டது.

3. **'தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர் தலமோங்கு கந்தவேளே' - தொடருக்குப் பதவுரை எழுதுக.**
   - ➢ அறச்செயல்கள் செய்கின்றவர்கள் நிறைந்திருக்கும் சென்னைப் பகுதியில் கந்தகோட்டத்தில் அமைந்திருக்கின்ற திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கந்தவேளே!

4. **'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்' - தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.**
   - ➢ பெருங்கடல் - சிறுகுடி - இதுவே இத்தொடரில் உள்ள முரண் நயமாகும். பரதவர் மீன் பிடிக்கும் கடல் பெரியது. ஆனால் அவர்கள் வாழும் இடமோ சிறுகுடி என்று கூறப்பட்டுள்ளது.

## சிறுவினா

1. **சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.**
   - ➢ இந்திய 'சாரசனிக் கட்டடக்கலை' பாணியில் கட்டப்பட்ட மத்திய தொடர்வண்டி நிலையம், தென்னகத் தொடர்வண்டித் தலைமையகம், எழும்பூர் தொடர்வண்டி நிலையம், பொது அஞ்சல் அலுவலகம், உயர்நீதிமன்றம், சென்னைப் பல்கலைக்கழகம், ரிப்பன் கட்டடம், விக்டோரியா அரங்கு.
   - ➢ தமிழ்நாடு ஆவணக் காப்பகம் என்று வழங்கப்படும் 'மெட்ராஸ் ரெக்காட் ஆபிஸ்'
   - ➢ எழும்பூர் மற்றும் கோட்டை அருங்காட்சியகங்கள்.
   - ➢ கன்னிமரா நூலகம்.
   - ➢ திரைப்படத் தொழில் சார்ந்த இடங்களும், திரையரங்குகளும் சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்று நிலைத்து இருப்பனவாகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

2. **இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?**

- ஒருநெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர்போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும். உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகர்தம் உறவு என்னைப் பற்றாதவாறு காக்க வேண்டும் எனக் கந்தவேளிடம் இராமலிங்க அடிகள் வேண்டுகிறார்.

3. **பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?**

**(ப.ஆ.க-2,5)**

- இளம் பெண்கள் அனைவரும் இணைந்து ஆரவாரத்தோடு கொண்டாடி மகிழும் திருவிழாக்கள் நிறைந்த வீதிகளையுடைய பெரிய ஊர் திருமயிலை. மயிலை என்று அழைக்கப்படும் மயிலாப்பூரில் கபாலீச்சரம் என்னும் கோவிலில் வீற்றிருக்கும் இறைவனுக்குத் திசை தோறும் பூசையிடும் பங்குனி உத்திரத் திருவிழா ஆரவாரத்தோடு நடைபெற்றது என திருஞான சம்பந்தர் கூறுகிறார்.

4. **'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' - இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக. (ப.ஆ.க-1)**

**பண்டமாற்று வணிகம்:**

பண்டைய காலங்களில் பண்டமாற்று வணிகமே சிறப்புற்றிருந்தது. பழந்தமிழர் தொழில் நிலத்தின் இயல்பைச் சார்ந்து அமைந்திருந்தது. பழந்தமிழர் தங்கள் வாழிடத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்தித் தொழில் செய்தனர். அவ்வாறு தொழில் செய்து விளைவித்த பொருட்களைப் பிறநில மக்களிடம் பண்டமாற்று முறையிலே வாணிகம் செய்தனர்.

தங்களது நிலத்தில் விளையாத பொருட்களைப் பெற தங்கள் நிலத்தில் விளைந்த பொருட்களைப் பண்டமாற்று முறையில் பெற்றுக் கொள்வர்.

**பண்டைய தமிழகம்:**

பழங்காலத்தில் தமிழ்நாட்டில் சந்தைக்குரிய உற்பத்திப் பொருளாக உப்பு விளங்கியது. உப்பு விளைவித்த பிறகு உமணர்கள் அந்த உப்பைக் கொண்டு பிற நிலங்களில் விளைந்த பொருட்களைப் பண்டமாற்று முறையில் பெற்றுக் கொண்டனர்.

பண்டமாற்று வணிகத்தில் விளைவிக்கப்படும் பொருள்களுக்கு விலையாகப் பணம் கொடுப்பதில்லை. மாறாகத் தங்கள் நிலங்களில் விளையாத பொருட்களே பெற்றுக் கொள்ளப்பட்டன. இதனையே உமணர் மகள், ''உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக் கொள்ள வாரீரோ!'' என்று கூறுவதன் மூலம் அறிந்து கொள்ளலாம். இதன் வழியாக பண்டையத் தமிழகத்தில் நடந்த வணிகம் பண்டமாற்று வணிகம் என்பதை அறியலாம்.

## நெடுவினா

1. **''ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு'' நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.**

**முன்னுரை:**

காவிரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி தமிழகத்தின் மூன்றாவது பெரிய நகரமாகும். இந்தியாவின் தூய்மையான 10 நகரங்களில் திருச்சியும் ஒன்றாகும். இந்நகரம் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**பெயர்க்காரணம்:**

திருச்சிராப்பள்ளி என்ற பெயர் 'திரிஷிராபுரம்' என்ற வடமொழிச் சொல்லில் இருந்து தோன்றியதாக நம்பப்படுகிறது. மூன்று சிரங்களைக் கொண்ட 'திரிசிரன்' சிவபெருமானை வழிபட்டு பலனடைந்ததாக இந்து சமயப் புராணங்கள் கூறும். 'சிறுத்த-பள்ளி' என்ற சொல்லில் இருந்து உருவாகியிருக்கும் என்று சி.பி. பிரவுன் எனும் தெலுங்கு அறிஞர் கூறுகிறார். 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்றில் திருச்சிராப்பள்ளி, திரு - சிலா - பள்ளி (புனித - பாறை - ஊர்) எனக் குறிப்பிட்டுள்ளதால் அதிலிருந்து இப்பெயர் வந்திருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. இது 'தென்னாட்டுக்கலை நகரம்' எனவும் அழைக்கப்படுகிறது.

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**வரலாறு:**

தமிழ்நாட்டில் மக்கள் வாழ்ந்த மிகப் பழமையான நகரங்களில் ஒன்று திருச்சி. கி.மு இரண்டாயிரமாண்டு காலத்திற்கு முந்தையது. முற்காலச் சோழர்களின் தலைநகராக கி.மு.3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.3-ஆம் நூற்றாண்டு வரை விளங்கிய உறையூர் தற்போதைய திருச்சியின் சுற்றுப்புறத்தில் அமைந்துள்ள பகுதியாகும். கரிகால் சோழன் கட்டிய கல்லணை உறையூரில் இருந்து 20 கி.மீ தொலைவில் உள்ளது.

பல்லவர்கள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் இருந்து 6-ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தனர். அதன்பின் பிற்காலச் சோழர்கள், பாண்டியர்கள், ஆட்சிக்குப் பின்பு விஜய நகரப் பேரரசின் கீழ் வந்தது.

மதுரை நாயக்கர்களின் வழியில் வந்த இராணி மங்கம்மாள் திருச்சி மலைக் கோட்டைப் பகுதியில் கட்டிய அரண்மனை அரசு அருங்காட்சியகமாகச் செயல்பட்டு வருகிறது.

**நகரமைப்பு:**

நகரத்தின் வடபகுதியில் தொழிற்பேட்டைகளும், வசிப்பிடங்களும் நெருக்கமாக அமைந்துள்ளன. நகரத்தின் தென்பகுதியில் குடியிருப்புப் பகுதிகள் நிறைந்துள்ளன. நகரைச் சுற்றிலும் வயல்வெளிகள் சூழ்ந்துள்ளன. கோட்டைக்குள் அடங்கியுள்ள பழைய நகரம் திட்டமிடப்படாததாகவும் நெரிசல் மிக்கதாகவும் விளங்குகிறது.

புதிய நகர்ப்புறப் பகுதிகள் திட்டமிடப்பட்டுக் கட்டமைக்கப்பட்டுள்ளன. ஸ்ரீரங்கத்தில் அமைந்துள்ள பல வீடுகள் தொன்மையான இந்து சமய கோவில் வடிவமைப்புகளுக்கான சிற்ப சாத்திரங்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன.

திருச்சிராப்பள்ளி 65 பகுதிகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திற்கும் 15 பகுதிகள் வீதம் 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**போக்குவரத்து:**

தரைவழிப் போக்குவரத்தில் தேசிய நெடுஞ்சாலைகள் 45, 45ஆ, 67, 210, 227 ஆகியவை திருச்சி வழியாகச் செல்கின்றன. இரண்டு பேருந்து நிலையங்கள் உள்ளன.

திருச்சிராப்பள்ளி சந்திப்பு, தென்னக இரயில்வேயின் ஆறுகோட்டங்களில் ஒன்றாகும். 1868-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து சேவை நடைபெறுகிறது.

சென்னைக்கு அடுத்து இரண்டாவது பெரிய வானூர்தி நிலையம் திருச்சிராப்பள்ளி வானூர்தி நிலையமாகும்.

**கல்வி:**

திருச்சியிலும் அதன்புறநகர் பகுதியிலுமாக 30-க்கும் மேற்பட்ட கல்லூரிகள் உள்ளன. சட்டப்பல்கலைக்கழகமும், பாரதிதாசன் பல்கலைக்கழகமும் வேளாண்மைக்கல்லூரியும் உள்ளன. மருத்துவக்கல்லூரியும் உள்ளது.

**சுற்றுலாத் தலங்கள்:**

திருச்சி மலைக்கோட்டை, ஸ்ரீரங்கம், திருவானைக்கோவில், இராணி மங்கம்மாள் கொலு மண்டபம், முக்கொம்பு, கல்லணை, முதலாம் உலகப்போர் நினைவுச்சின்னம் ஆகியவை குறிப்பிடத்தகுந்தவை.

**முடிவுரை:**

மிகவும் புகழ்பெற்ற மலைக்கோட்டையைக் கொண்ட பண்பாட்டு நகரமாக விளங்கும் திருச்சி தமிழ்ப்பண்பாட்டினை உலகிற்கு எடுத்துச் செல்லும்.

2. **''கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன'' - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க. (ப.ஆ.க-3)**

இந்தியாவின் முதுகெலும்பு கிராமமாகும். அழகியல் தன்மையோடு விளங்கும் கிராமங்கள் இன்று தங்கள் அழகியலை இழந்து கிராமத்திற்கே உரிய இலக்கணங்களை இழந்து, கொஞ்சம் கொஞ்சமாகத் தமது வடிவழகையும் இழந்து வருகின்றன.

**வாழ்வோடு இணைந்த கிராமம்:**

அதிகாலையில் எழும்பி வீட்டு முற்றத்தைத் தூய்மை செய்து, கோலமிட்டுக் கடவுளைத் தொழுது குதுகலாமாகப் பொழுதினைத் தொடங்கும் வாழ்க்கை கிராம மக்களின் வாழ்வோடு இணைந்திருந்தது. ஏலேலோ பாடும் கிராமத் தென்றலில் தாலேலோ பாடி விவசாயம் செய்த காலம் மலையேற, கணினியில் கானல் நீராய் நம் கிராம மக்களின் வாழ்க்கையும் கரைந்தது. அந்தந்த கிராமத்தில் விளைந்ததை அங்கங்கே தின்று வாழ்ந்த காலத்தில் எந்த நோய்களும் தலை தூக்கியதில்லை.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**அழகை இழக்கும் கிராமங்கள்:**

இன்று பெருகி வரும் நகர்ப்புற நாகரிகத்தினால் கிராமங்கள் தங்கள் அழகை இழக்கின்றன. பாடித் திரிந்த பறவைகளின் ஒலிகள் இப்போது கேட்க முடியவில்லை. மனிதன் நகர்ப்புற நாகரிகத்தை நாடியதால் குளங்கள் குடியிருப்புகளாக மாறிவிட்டன. அகன்ற தெருக்களெல்லாம் தங்கள் இருப்பைச் சுருக்கிக் கொண்டன. கலாச்சார மாற்றங்களால் கூரை வேயப்பட்ட, ஓடுகளால் நிரம்பிய வீடுகள் எல்லாம் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் தீப்பெட்டி போல மாற்றம் பெற்றுள்ளன. எல்லோரும் நீர் இறைக்கும் ஊர்க் கிணறு கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது.

**முகவரி இழக்கும் கிராமங்கள்:**

கிராமங்களுக்கே உரித்தான நாட்டுப்புற விளையாட்டுகளை எல்லாம் இன்றைய அலைபேசிகளும், முகநூல்களும், புலனங்களும் முடக்கி விட்டன. பச்சைப்பசேலென வளர்ந்து நிற்கும் நெற்பயிரை இன்று காணமுடியவில்லை. உழுது உணவைத் தந்த வயல்கள் எல்லாம் இன்று குடியிருப்புகளுக்காக அளக்கப்பட்டு எல்லைக் கற்களால் பிரிக்கப்பட்டு வீடுகளாக மாற ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றன.

**நாகரிக மோகத்தால் அழியும் கிராமம்:**

கிராமத்திற்கே உரிய அன்பும், விருந்தோம்பல் பண்பும், வெள்ளந்தியான பழக்கமும் இன்று கொஞ்சம் கொஞ்சமாக தனது இயல்பை இழந்து வருகின்றது. கிராம மக்கள் நகர்ப்புற நாகரிகத்தின் மீது கொண்ட மோகத்தால் இயற்கையை இழந்து நகர்ப்புறம் தேடி வருவதும், ஊடகத்தாக்கமும், சமூக வலைத்தளங்களின் தாக்கமும் இயல்பான கிராம வாழ்க்கையை மாற்றி விடுகின்றன. ஒன்றுக்குள் ஒன்றாக உறவுகளாக இருக்கும் கிராம மக்கள் இன்று நாகரிக மோகத்தால் உறவுகளை மேம்படுத்தும் செயலில் இருந்தும் விலகி விடுகின்றனர்.

இவ்வாறாக அமைதியான சூழலில் அன்பாக வாழ்ந்து வந்த கிராம மக்கள் தங்கள் இயல்பை மாற்ற விரும்புவதால், தாங்கள் பழகிய, ஒட்டி உறவாடிய கிராமத்தை விட்டு நகர்ப்புறம் செல்வதால் கிராமங்கள் தங்கள் அழகியலை இழப்பதுடன் கிராமங்களுக்கே உரிய இயற்கைத் தன்மையையும் இழந்து தங்களது முகவரியைத் தொலைத்து நகர்புறச் சாயலுடன் புத்துருவாக்கம் அடைகின்றன.

3. **சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்தகோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன?**

**மயிலாப்பூர்:**

- ❖ மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் நாகரிகத்தின் வெளிப்பாடு, கோவில் திருவிழாக்கள். கோவில் ஓர் ஊரின் பெருமைக்குரிய அடையாளங்களுள் ஒன்று.
- ❖ புகழைப் பறைசாற்றும் எழுச்சியே திருவிழாக்கள். அத்தகைய விழாக்கள் நிறைந்த ஊர் திருமயிலை, மயிலை என்று அழைக்கப்படும் மயிலாப்பூர்.
- ❖ இளம்பெண்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் திருவிழாக்கள் நிறைந்த வீதிகளையுடைய பெரிய ஊர் திருமயிலை.
- ❖ அங்கு எழுச்சிமிக்க விழாக்கள் நிகழும்.
- ❖ மயிலை கபாலீச்சரம் என்னும் கோவிலில் வீற்றிருக்கும் இறைவனுக்குப் பூசையிடும் பங்குனி உத்திர ஆரவார விழா விமரிசையாக நடைபெறுமென மிக அருமையாக மயிலாப்பூர் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**கந்தகோட்டம்:**

- ❖ ஆன்மநேய ஒருமைப்பாட்டையும், சமய ஒருமைப்பாட்டையும், ஒளி வழிபாட்டையும் முன்வைத்துச் சீர்திருத்தச் சிந்தனையை உருவாக்கி, இவ்வுண்மை நெறியை வளர்த்தவர் வள்ளலார்.
- ❖ வள்ளலாரின் சிந்தனைகளின் ஊற்றுக்களமாக இருந்தது கந்தகோட்டம்.
- ❖ இராமலிங்க அடிகள், சென்னை, கந்தகோட்டத்து முருகப்பெருமானின் அருளை வேண்டி தெய்வமணிமாலை என்னும் பாமாலையைப் பாடியுள்ளார்.
- ❖ அறம் செய்வார் நிறைந்திருக்கும் சென்னையின் கந்தகோட்டத்துத் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கந்தவேளே! குளிர்ந்த முகத்தோற்றத்தையுடைய தூய மாணிக்க மணியே! அம்மணிகளுள் அருள் நிறைந்த சைவமணியே! ஒருநெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர்போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்;



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



- உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகர்தம் உறவு என்னைப் பற்றாதவாறு காக்க வேண்டும்;
- என்றும் உன்னை மறவாதிருக்க வேண்டும்;
- ஆறுமுகங்களை உடைய தெய்வமாகிய மணியே, இத்தகைய சிறப்புகளை நீ எனக்கு அருள்வாயாக என இராமலிங்க அடிகள் கந்தகோட்டத்து இறைவனிடம் வேண்டுவது மிக அழகாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

## மொழியை ஆள்வோம் (பக்கம் – 126)

### தமிழாக்கம் தருக.

Periyar was not only a great social revolutionary; he was something more than that. He is known as a great champion of the underprivileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep-tooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.

பெரியார் சிறந்த சமூக சீர்திருத்தவாதி மட்டுமல்ல. அதற்கும் மேலான சிறப்புடையவர். அவர் ஒடுக்கப்பட்டோரின் சிறந்த தலைவர் எனக் கருதப்படுகிறார். அவர் சீர்திருத்தப்பணியில் அதிகக் கவனம் செலுத்தினார். அவருடைய சிந்தனைகளும் செயல்களும் மிகவும் ஆழமானதாகவும் பரந்த மனப்பான்மை உடையதாகவும் காணப்பட்டன. எந்த ஒரு செயல்பாட்டையும் ஆழ்ந்து சிந்தித்து, அதனைப் புரிந்து கொண்டு அதன்படி அனைத்துப் பிரச்சனைகளுக்கும் நிரந்தர தீர்வு காணும்வரை உழைப்பார். பெரியார் இந்தச் சமூகக் காட்சியின் திரையில் வரும்வரை சமூகம் ஏற்றத்தாழ்வு நிறைந்த ஒரு சமுதாயமாகவே இருந்தது.

### இலக்கிய நயம் பாராட்டுக.

**பிறப்பினால் எவர்க்கும் – உலகில்**
**பெருமை வாராதப்பா!**
**சிறப்பு வேண்டுமெனில் – நல்ல**
**செய்கை வேண்டுமப்பா!**
**நன்மை செய்பவரே – உலகம்**
**நாடும் மேற்குலத்தார்!**
**தின்மை செய்பவரே – அண்டித்**
**தீண்ட ஒண்ணாதார்!**

**– கவிமணி தேசிக விநாயகம்**

**‘நல்லதைச் செய்வோம்’**

**முன்னுரை:**

தமிழின் மீது அளவற்ற அன்பு கொண்ட கவிமணி, ‘குழந்தைகள் கவிஞர்’ என்று அழைக்கப்படுகின்றார். ‘தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு’ என்ற பாடல் மூலம் குழந்தைகளால் மிகவும் நேசிக்கப்படுபவர். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் எழுதியுள்ள இப்பாடலின் நயங்களைக் காண்போம்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**திரண்ட கருத்து:**

பிறப்பை வைத்து யாருக்கும் இந்த உலகில் பெருமை வருவதில்லை; உலகில் சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்றால் நல்ல செயல்களைச் செய்ய வேண்டும். உலகில் மேல்குலத்தோர் என்போர் தன் வாழ்வில் நன்மை செய்பவர்களே! தீமை செய்பவர்களே இந்த உலகில் தீண்டத்தகாதவர்கள்.

**மையக்கருத்து:**

நன்மை செய்தால் அவன் மேன்மையடைவான்; தீமை செய்தால் ஒதுக்கப்படுவான்.

**சொல் நயம்:**

**''சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது வசனம்,**
**சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது கவிதை'' - கோல்ரிட்ஜ்**

சிறந்த சொற்களைக் கொண்டு கவிதையை நயம்பட பாடியுள்ளார் கவிஞர். இப்பாடலில் அடைச்சொல்லையும், அகராதிச் சொல்லையும் கவிஞர் பயன்படுத்தியுள்ளார்.

**சான்றாக,**

அடைச்சொல் - அண்டித்தீண்ட
அகராதிச் சொல் - ஒண்ணாதார் - ஒவ்வாதார்

**பொருள் நயம்:**

இவ்வுலகில் மேற்குலத்தோர், தீண்டதகாதவர் என்பது பிறப்பினால் வருவதல்ல அவரவர்களின் செய்கையால் வருகின்றது என்ற பொருளை வலியுறுத்த சிறந்த சொற்களைக் கொண்டு கவிஞர் இக்கவிதையை இயற்றியுள்ளார்.

**தொடை நயம்:**

பாடலில் மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை ஆகியவற்றைக் கொண்டு தொடுப்பது தொடையாகும்.

**மோனை நயம்:**

**''அடிதொறுந் தலைஎழுத்து ஒப்பது மோனை''**

**- தொல்காப்பியம்**

சீர்களிலோ, அடிகளிலோ முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனையாகும்.

**சான்று:**

பிறப்பினால் - பெருமை
சிறப்பு - செய்கை
நன்மை - நாடும்
தின்மை - தீண்ட

**எதுகை நயம்:**

**''அடிதொறுந் தலைஎழுத்து ஒப்பது மோனை**
**அஃது ஒழிந்த வற்றின் எதுகை ஆகும்''**

**- தொல்காப்பியம்**

பாடலின் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும். இப்பாடலில் அடி எதுகை பயின்று வந்துள்ளது.

**சான்று:**

பிறப்பினால்
சிறப்பு
நன்மை
தின்மை

**இயைபு நயம்:**

**''இறுவாய் ஒப்பின் அது இயைபு என மொழிப''**

**- தொல்காப்பியம்**

ஒரு செய்யுளில் ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளின் இறுதி எழுத்து அல்லது இறுதிச் சொல் அல்லது ஒரே அடியில் உள்ள சீர்களின் இறுதி எழுத்துகள் ஒன்றி வந்தாலும் அஃது இயைபு எனப்படும்.

இப்பாடலில் அடி இயைபு பயின்று வந்துள்ளது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**சான்று:**

வாராதப்பா மேற்குலத்தார்
வேண்டுமப்பா ஒண்ணாதார்

**முரண் நயம்:**

**"மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே"**

**- தொல்காப்பியம்**

செய்யுளில், சொல் அல்லது பொருள் முரண்பட்டு நயம் பயக்கும் வகையில் அமைவது முரண் தொடையாகும். இப்பாடலில் இடம் பெற்றுள்ள முரண் தொடை

நன்மை X தின்மை

**சந்த நயம்:**

**"சந்தம் தமிழுக்குச் சொந்தம்"**

இப்பாடலை ஏற்ற இசைக் கருவிகளுடன் இசைத்துப் பாடினால், பாடுவோர்க்கும் கேட்போருக்கும் மிகுந்த கவி இன்பத்தைத் தரும் சந்த நயங்களுடன் கவிஞர் இப்பாடலை இயற்றியுள்ளார்.

இப்பாடல் **சிந்துப்பா** வகையைச் சார்ந்தது.

**அணி நயம்:**

**"அணி செந்தமிழ் கவிதைக்குப் பணி"**

இப்பாடலில் உள்ளதை உள்ளபடியே கவிஞர் கூறுவதால் இப்பாடலில் இயல்பு நவிற்சி அணி பயின்று வந்துள்ளது.

**முடிவுரை:**

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இப்பாடலில் கவிதைக்குரிய நயங்களை எல்லாம் அமைத்து, கவி நயங்களால் தமிழன்னைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

> மாணாக்கரே!
> கேட்கப்பட்டிருக்கும் கேள்வியில் எத்தனை நயங்கள் கேட்கப்பட்டிருக்கின்றதோ அத்தனை நயங்களை மட்டும் எழுதினால் போதும்.

**பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

(எ.கா.) **இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சுக்கோ. (மார்ச்.20)**
இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்.

1. **நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும். (ப.ஆ.க-6)**
   நிலத்தைக் கிளர வேண்டும். அப்போதுதான் வயிறு நிரம்பும்.
2. **அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.**
   அன்றைக்கு அவனுக்குப் பணம் கொடுத்து உதவியிருக்க வேண்டியது தானே.
3. **வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு. (ப.ஆ.க-1, மார்ச்.20)**
   வீட்டின் அருகில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை அப்பா எங்கு இழுத்துக் கொண்டு போனார்.
4. **புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.**
   பிள்ளைக்கு (குழந்தைக்கு) உடம்பு சரியில்லை. மூன்று நாட்களாகச் சிரமப்படுகிறது.
5. **ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல். (ப.ஆ.க-2,6)**
   இரவிற்குச் சித்தப்பாவைக் காவலுக்குப் போகச் சொல்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## வெட்டியும் ஒட்டியும் பேசுதல்

**கிராமங்கள் நகரமாவது வளர்ச்சியா? வீழ்ச்சியா?**

**கிராமங்கள் நகரமாவது வளர்ச்சியே!**

பண்டைய நாட்களில் கிராமங்களில் வாழ்கின்றவர்கள் கிராமத்தை விட்டு நகரத்திற்குக் குடிபெயரவோ அல்லது நகர நாகரிகத்தை ஏற்றுக் கொள்ளவோ விரும்பவில்லை, இதனால் அவர்கள் பல இழப்புகளைச் சந்தித்தனர். மூடநம்பிக்கையால், போதிய மருத்துவ வசதியின்மையால் பலர் உயிர்களை இழந்தனர். எனவே கிராமங்கள் நகரமாவது அவசியமாகும். போதிய கல்வியறிவைப் பெறவும், நவீன வளர்ச்சி அடையவும், கிராமப்புறக் குழந்தைகளும் அறிவியல் வளர்ச்சியை அனுபவிக்கவும் கிராமங்கள் இன்றைய தொழில்நுட்பங்களை உணர்ந்து தங்களைப் படிப்படியாக வளர்த்துக் கொண்டு இன்றைய அத்தனை அறிவியல் பொருட்களையும் அனுபவிக்கவும் வேண்டி, கட்டாயம் கிராமங்கள் நகரமாக வேண்டும். அவ்வாறு நகரமாவதே ஒரு நாட்டின் வளர்ச்சியாகும்.

**கிராமங்கள் நகரமாவது வீழ்ச்சியே!**

கிராமங்கள் நகரமாவதால் இயற்கையைக் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கின்றோம். கிராமங்கள் நகரமாவதால் நிலத்தடி நீருக்கு ஆதாரமாக இருக்கின்ற குளங்கள், ஏரிகள் எல்லாம் ஆக்கிரமிக்கப்பட்டுக் குடியிருப்புகளாக மாறுவதால் இயற்கை சூறையாடப்படுகின்றது. விவசாய நிலங்கள் குடியிருப்புகளால் சூழப்படுவதால் விவசாயம் பெரும்பாதிப்படைகின்றது. கிராமங்களுக்கே உரித்தான உறவு முறைகளின் அன்பும் பாசமும் பிரித்தாளப்பட்டு கிராமங்கள் தீவுகளாக மாறுகின்றன. கிராமத்திற்கு உரிய இயல்புகள் மாறுவதால் பண்பாட்டு காரியங்கள், கலாச்சாரங்கள் மாறுபட்டு கிராமத்தின் இயல்பு மாறும். எனவே, கிராமங்கள் நகரமாவது மாபெரும் வீழ்ச்சியாகும்.

## மொழியோடு விளையாடு (பக்கம் - 127)

### எண்ணங்களை எழுத்தாக்குக.

உள்நாட்டுச் சந்தைக்குப் பொருள்களை எடுத்துச் செல்லும் சிறு வணிகர் கூட்டம், 17ஆம் நூ.நடராசர் கோவில் சுவரோவியம், அம்மன் சந்நிதி, சிதம்பரம்.



பண்டைய தமிழகத்தில் தாங்கள் வாழும் நிலப்பகுதியில் விளைந்த பொருட்களை விற்பனை செய்வதற்காக குடும்பத்தில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் என எல்லோருமே சந்தைக்குச் செல்வதுண்டு. தங்களின் உழைப்பின் பயனாக விளைந்த தானியங்கள், காய்கறிகள் அல்லது பழங்கள் போன்றவற்றை ஊரின் ஒரு பகுதியில் கூடும் உள்நாட்டுச் சந்தை முதல் பிற இடங்களுக்கும் கொண்டு சென்று நேரடியாகவே தங்களுக்குத் தேவையான பிற பொருட்களைப் பண்டமாற்று முறையில் பெற்றுக் கொள்வர். இப்படத்தில் சிறு வணிகர்கள் பொருட்களை உள்ளூர் சந்தைக்குக் கொண்டு செல்லும் காட்சியைப் பார்க்கும் போது நம் பண்டைத் தமிழர்களின் பண்டமாற்று வணிகத்தை அறியலாம்.

### ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க.

**எ.கா.**

பூட்டிய வீட்டிலும்
பூத்துச் சிரிக்கிறது
**முல்லை**

1. விழும்
மரங்கள் அழியும்
காடு **வனத்தீ**
**(காட்டுத்தீ)**


2. அப்படியென்ன
சொல்லியது காற்று
குதித்தாடுகிறது மேகம்
**கொடையாளியாய்**
**(அ) சூறாவளி**

3. பூத்த
மலரொன்று
பறக்கிறது
**பட்டாம்**
**பூச்சியாய்!**
**(ப.ஆ.க-3)**

4. வானம்
அழுகிறது
பூமி
சிரிக்கிறது
**சிதறும்**
**மழைத்துளி**
**(ப.ஆ.க-3)**

## கருத்துப்படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.

**(மார்ச்.20)**




| அகம் | புறம் | அகமும் புறமும் |
|---|---|---|
| நற்றிணை | புறநானூறு | பரிபாடல் |
| குறுந்தொகை | பதிற்றுப்பத்து | |
| ஐங்குறுநூறு | | |
| அகநானூறு | | |
| கலித்தொகை | | |
| | | |

| அகம் | புறம் |
|---|---|
| குறிஞ்சிப்பாட்டு | மதுரைக்காஞ்சி |
| முல்லைப்பாட்டு | திருமுருகாற்றுப்படை |
| நெடுநல்வாடை | பொருநராற்றுப்படை |
| பட்டினப்பாலை | பெரும்பாணாற்றுப்படை |
| | சிறுபாணாற்றுப்படை |
| | கூத்தராற்றுப்படை |

சங்க இலக்கியம் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் இரண்டு பிரிவுகளாக உள்ளது. எட்டுத்தொகை நூற்களில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை அகம் பற்றிப் பேசுகின்றது. எட்டுத்தொகை நூற்களில் புறநானூறு, பதிற்றுப்பத்து புறம் பற்றிப் பேசுகின்றது. பரிபாடல் அகமும் புறமும் பற்றிக் கூறுகிறது.

பத்துப்பாட்டு நூற்களில் குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை ஆகிய நூல்கள் அகம் பற்றிப் பேசுகின்றது. பத்துப்பாட்டு நூற்களில் மதுரைக்காஞ்சி, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை ஆகியவை புறம் பற்றிக் கூறுகிறது.

## கீழ்க்காணும் பகுதியைப் படித்துப் பார்த்து, பிறமொழிச் சொற்களைக் கண்டறிந்து தமிழ்ப்படுத்துக.

சர்க்கார் கொடுக்கும் சம்பளம் ஜீவனத்துக்குப் போதுமா? அதற்குள் ஜீவனம் நடத்த முடியுமா? என்று அவர் சிந்தித்தது கிடையாது. சிந்திக்க முயன்றதும் கிடையாது. எல்லாம் மாயை; உள்ளூர நிற்கும் ஆத்மா மாசுபடவில்லை. தான் வேறு இந்த மாயை வேறு. தான் இந்தப் பிரபஞ்சத்தை ஆட்டிவைக்கும் சக்தியின் ஒரு அம்சம் என்று திடமாக நம்பியிருந்தார். ஏனென்றால், அவரது ஆத்ம விசாரத்தைச் சோதனை போட்டுப் பார்க்க இதுவரை தெய்வத்துக்கோ மனுஷனுக்கோ அவகாசம் கிடைத்ததில்லை. மனுஷ வர்க்கம் முழுவதுமே தன்னைப் படைத்தவனுடைய தன்மையை ஸ்புடம் போட்டுப் பார்ப்பது போல தவறுக்கு மேல் தவறு செய்து கொண்டிருந்தது.

| பிறமொழிச் சொற்கள் | தமிழ்ச்சொற்கள் | பிறமொழிச் சொற்கள் | தமிழ்ச்சொற்கள் |
|---|---|---|---|
| **சர்க்கார்** | - அரசாங்கம் | **தெய்வம்** | - கடவுள் |
| **சம்பளம்** | - ஊதியம் | **மனுஷனுக்கோ** | - மனிதர்களுக்கோ |
| **ஜீவனத்துக்கு** | - பிழைப்பிற்கு (வாழ்க்கைக்கு) | **மனுஷ வர்க்கம்** | - மனித இனம் |
| **ஜீவனம்** | - பிழைப்பு (வாழ்வு) | **ஸ்புடம் போட்டு** | - நெருப்பில் இட்டு |
| **ஆத்மா** | - மனம் | **ஆத்ம விசாரம்** | - மனவோட்டம் |
| **பிரபஞ்சம்** | - உலகம் | **அவகாசம்** | - காலக்கெடு |



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## நிற்க அதற்குத் தக

(ஆளுமைத் திறன் என்பது ஒருவரது ஒழுங்கமைந்த இயங்கியல் நடத்தை, உணர்வு, சிந்தனை ஆகியவற்றைக் குறிக்கிறது. தன்னம்பிக்கை, நேர்மறைச் சிந்தனைகள், அடிப்படை ஒழுக்கம், உடற்பயிற்சி ஆகிய அனைத்துமே ஆளுமைப் பண்புகளுள் அடங்கும்)

**இமயா இருசக்கர வாகனம் ஓட்டப் பழகுகிறாள். ஓட்டுகையில் இடையில் தடுமாறிக் கீழே விழுகிறாள். கற்றுக் கொடுக்கும் அவளுடைய அண்ணன், 'உன்னால் இருசக்கர வாகனம் ஓட்ட இயலாது' என்கிறான். நீங்கள் இமயாவாக இருந்தால் என்ன சொல்வீர்கள்?**

''அண்ணா! நிச்சயமாக என்னால் முடியும். நான் முயற்சி செய்து கண்டிப்பாக இருசக்கர வாகனம் ஓட்டுவேன். எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. 'முடியாது' என்று சொல்லாதே நிச்சயமாக தொடர் முயற்சி மூலம் நான் சாதித்துக் காட்டுகிறேன் பார்'', என்று கூறுவேன்.

**பள்ளி ஆண்டுவிழாவிற்கு வருகை புரிந்த சிறப்பு விருந்தினருக்கு நன்றியுரை நிகழ்த்த ஆசிரியர் அழைக்கின்றார். அந்நிலையில் நீவிர் என்ன செய்வீர்?**

உடனடியாக அந்தப் பணியை மேற்கொள்வேன். யாருக்கெல்லாம் நன்றி கூற வேண்டும் என்று கேட்டுக் குறிப்பு எழுதிவைத்துத் தயாரித்து நன்றியுரை நிகழ்த்தத் தயாராவேன்.

## படிப்போம் பயன்படுத்துவோம் (நீதிமன்றம்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Affidavit** | ஆணை உறுதி ஆவணம் | **Allegation** | சாட்டுரை | **Conviction** | தண்டனை **(வ.ஆ.க-5)** |
| **Jurisdiction** | அதிகார எல்லை | **Plaintiff** | வாதி | | |






Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# கூடுதல் வினாக்கள்

## உரைநடை மதராசப்பட்டினம்

### பலவுள் தெரிக.

1. தென்னிந்தியாவின் நுழைவுவாயில் என்றழைக்கப்படுவது
   அ) மதுரை ஆ) புதுவை இ) குமரி ஈ) சென்னை **[ஈ) சென்னை]**

2. 400 ஆண்டுகளுக்கு முன் வங்கக் கடலோரம் சிறு குப்பமாக இருந்த இடம்
   அ) புதுவை ஆ) சேலம் இ) சென்னை ஈ) குமரி **[இ) சென்னை]**

3. ''தொண்ட மண்டலத்துப் புழல் கோட்டத்து ஞாயிறு நாட்டுச் சென்னப்பட்டினம்'' என்ற பத்திரம் எழுதப்பட்ட ஆண்டு.
   அ) கி.பி.1626 ஆ) கி.பி.1647 இ) கி.மு.1649 ஈ) கி.மு.1626 **[ஆ) கி.பி.1647]**

4. மயிலாப்பூர் வடக்குப் பகுதியைத் தேர்ந்தெடுத்த கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் அலுவலர்
   அ) தாமஸ் பிட் ஆ) எலியேல் இ) பிரான்சிஸ்டே ஈ) ஜார்ஜ் **[இ) பிரான்சிஸ்டே]**

5. கூவம் நதியின் மற்றொரு பெயர்
   அ) திருவல்லிக்கேணி ஆறு ஆ) தாமிரபரணி ஆறு
   இ) கோதண்டராம ஆறு ஈ) புழல் ஆறு **[அ) திருவல்லிக்கேணி ஆறு]**

6. விஜயநகர ஆட்சியின் ஆளுநர்களான சென்னப்பரின் மகன்கள் எத்தனை பேர்?
   அ) மூவர் ஆ) நால்வர் இ) ஐவர் ஈ) இருவர் **[ஈ) இருவர்]**

7. கூவம் நதிக்கரையில் குளித்துவிட்டு அருகில் உள்ள கோவிலில் வழிபட்டவர்
   அ) வேங்கடசாமி ஆ) வள்ளல் பச்சையப்பர்
   இ) பாரதிதாசன் ஈ) ஜீவானந்தம் **[ஆ) வள்ளல் பச்சையப்பர்]**

8. 'மாவலிபுரச் செலவு' எனும் தலைப்பில் கவிதை இயற்றியவர்
   அ) பாரதிதாசன் ஆ) ஜீவானந்தம் இ) பாரதியார் ஈ) வேங்கடசாமி **[அ) பாரதிதாசன்]**

9. பாரதிதாசன் நண்பர்களுடன் படகுப் பயணம் செய்த கால்வாய்
   அ) தேம்ஸ் ஆ) போடமாக் இ) பக்கிங்காம் ஈ) ஓட்டேரி **[இ) பக்கிங்காம்]**

10. செயிண்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி எவ்வாறு அழைக்கப்பட்டது.
    அ) கால்வாய் நகரம் ஆ) கருப்பர் நகரம் இ) பொன்னகரம் ஈ) வெள்ளையர் நகரம்
    **[ஈ) வெள்ளையர் நகரம்]**

11. செயிண்ட் ஜார்ஜ் கோட்டைக்கு வெளியே அமைந்த குடியிருப்புப் பகுதி எவ்வாறு அழைக்கப்பட்டது?
    அ) கருப்பர் நகரம் ஆ) அரண்மனை நகரம் இ) வெள்ளையர் நகரம் ஈ) லண்டன் நகரம்
    **[அ) கருப்பர் நகரம்]**

12. கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், எதனைச் சார்ந்தது.
    அ) மென்பொருள் ஆ) வன்பொருள் இ) துணி ஈ) படகு **[இ) துணி]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



13. வட சென்னைப் பகுதிகள் எவ்வாறு அழைக்கப்பட்டது.
அ) விருகம்பாக்கம் ஆ) மதராசப்பட்டினம் இ) சென்னைப் பட்டினம் ஈ) வாஷிங்டன்
[ஆ) மதராசப்பட்டினம்]

14. தென்சென்னைப் பகுதிகள் எவ்வாறு அழைக்கப்பட்டது.
அ) அத்திரம்பாக்கம் ஆ) மதராசப்பட்டினம்
இ) நுங்கம்பாக்கம் ஈ) சென்னைப்பட்டினம் [ஈ) சென்னைப்பட்டினம்]

15. கி.பி.2ஆம் நூற்றாண்டில் தாலமி என்பவர் மயிலாப்பூர் துறைமுகத்திற்குச் சூட்டிய பெயர் என்ன?
அ) மாதவரம் ஆ) தாம்பரம் இ) மல்லியர்பா ஈ) சேத்துப்பட்டு [இ) மல்லியர்பா]

16. பல்லாவரத்தில் உள்ள பல்லவர் குடைவரை, எம்மன்னன் காலத்தில் அமைக்கப்பட்டது?
அ) இரண்டாம் மகேந்திரவர்மன் ஆ) முதலாம் மகேந்திரவர்மன்
இ) மூன்றாம் மகேந்திரவர்மன் ஈ) நந்திவர்மன் [ஆ) முதலாம் மகேந்திரவர்மன்]

17. எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் புகழ்பெற்ற கிராமங்கள் இருந்துள்ளன.
அ) 400 ஆ) 200 இ) 300 ஈ) 100 [அ) 400]

18. 1646-ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி சென்னை நகரின் மக்கள்தொகை
அ) 17,000 ஆ) 18,000 இ) 19,000 ஈ) 20,000 [இ) 19,000]

19. சென்னை நகராட்சி உருவாக்கப்பட்ட ஆண்டு
அ) 1677 ஆ) 1667 இ) 1655 ஈ) 1688 [ஈ) 1688]

20. சென்னை மாகாணத்தின் முதல் தலைவர்
அ) தாமஸ் ஆ) ஜார்ஜ் இ) எலியேல் ஈ) பிரான்சிஸ்டே [இ) எலியேல்]

21. எத்தலைவரின் ஆட்சிகாலத்தைச் சென்னையின் பொற்காலம் என்பர்.
அ) தாமஸ் பிட் ஆ) எலியேல் இ) எர்வர்ட் ஈ) தாமஸ் [அ) தாமஸ் பிட்]

22. ஆசியாவில் உருவான முதல் ஐரோப்பியக் கல்வி முறை பள்ளி
அ) புனிதமேரி தேவாலய தர்மப்பள்ளி ஆ) பிரசிடென்சி பள்ளி
இ) சென்னை மாகாணப்பள்ளி ஈ) ஐரோப்பிய பள்ளி
[அ) புனிதமேரி தேவாலய தர்மப்பள்ளி]

23. புனித மேரி தேவாலய தர்மப் பள்ளி உருவான ஆண்டு
அ) 1815 ஆ) 1750 இ) 1715 ஈ) 1755 [இ) 1715]

24. சென்னைக் கோட்டைக் கல்லூரி உருவான ஆண்டு
அ) 1810 ஆ) 1812 இ) 1813 ஈ) 1814 [ஆ) 1812]

25. கிறித்தவக் கல்லூரி தொடங்கப்பட்ட ஆண்டு
அ) 1850 ஆ) 1827 இ) 1820 ஈ) 1837 [ஈ) 1837]

26. பிரசிடென்சி பள்ளி உருவான ஆண்டு
அ) 1840 ஆ) 1740 இ) 1715 ஈ) 1820 [அ) 1840]



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

27. பிரசிடென்சி பள்ளி பின்னாளில் எவ்வாறு அழைக்கப்பட்டது?
அ) பிரசின் பள்ளி ஆ) பிரான்சிஸ் பள்ளி இ) பிரசிடென்சி கல்லூரி ஈ) மாநிலக் கல்லூரி
**[ஈ) மாநிலக் கல்லூரி ]**

28. சென்னைப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்ட ஆண்டு
அ) 1757 ஆ) 1847 இ) 1857 ஈ) 1767 **[இ) 1857]**

29. பெண்களுக்கென இராணிமேரி கல்லூரி உருவான ஆண்டு
அ) 1857 ஆ) 1914 இ) 1756 ஈ) 1856 **[ஆ) 1914]**

30. ஆங்கிலேயரின் நிதி உதவியின்றி இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனம்
அ) இராணிமேரி கல்லூரி ஆ) மாநிலக் கல்லூரி இ) பச்சையப்பன் கல்லூரி ஈ) கோட்டைக் கல்லூரி
**[இ) பச்சையப்பன் கல்லூரி]**

31. இந்தோ-சாரசனிக் கட்டடக்கலைப்பாணியில் கட்டி முடிக்கப்பட்ட முதல் கட்டிடம்
அ) மத்தியத் தொடர்வண்டி நிலையம் ஆ) ரிப்பன் கட்டிடம்
இ) உயர்நீதிமன்றம் ஈ) சேப்பாக்கம் அரண்மனை **[ஈ) சேப்பாக்கம் அரண்மனை]**

32. சேப்பாக்கம் அரண்மனை கட்டி முடிக்கப்பட்ட ஆண்டு
அ) 1786 ஆ) 1768 இ) 1776 ஈ) 1767 **[ஆ) 1768]**

33. ‘மெட்ராஸ் ரெக்கார்ட் ஆபிஸ்’ இன்று எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) தமிழ்நாடு ஆவணக் காப்பகம் ஆ) தமிழ்நாடு சட்டக் காப்பகம்
இ) தமிழ்நாடு சட்ட ஒழுங்கு அலுவலகம் ஈ) தமிழ்நாடு கட்டடக்கலைக் கூடம்
**[அ) தமிழ்நாடு ஆவணக் காப்பகம்]**

34. இந்தியாவின் முதல் பொதுநூலகம் எது?
அ) மகால் நூலகம் ஆ) உ.வே.சா. அலுவலகம் இ) கன்னிமாரா நூலகம் ஈ) காமராசர் நூலகம்
**[இ) கன்னிமாரா நூலகம்]**

35. மதராசப்பட்டினத்தின் மற்றொரு முக்கியமான சாலை
அ) அத்திரம்பாக்கம் ஆ) பல்லாவரம் இ) மயிலாப்பூர் ஈ) பூவிருந்தவல்லி
**[ஈ) பூவிருந்தவல்லி]**

36. தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் அமைக்கப்பட்ட ஆண்டு.
அ) 1756 ஆ) 1856 இ) 1956 ஈ) 1865 **[ஆ) 1856]**

37. தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி அமைக்கப்பட்ட இடம்
அ) சேப்பாக்கம் ஆ) மயிலாப்பூர் இ) இராயபுரம் ஈ) பல்லாவரம் **[இ) இராயபுரம்]**

38. மதராசப்பட்டினம் என்று அழைக்கப்பட்ட பகுதிகள் ------ **(ப.ஆ.க-2)**
அ) வடசென்னைப் பகுதிகள் ஆ) தென் சென்னைப் பகுதிகள்
இ) மத்திய சென்னைப் பகுதிகள் ஈ) இவை மூன்றும் **[அ) வடசென்னைப் பகுதிகள்]**

39. இந்தோ - சாரசனிக் கட்டடக்கலை என்பது **(ப.ஆ.க-4)**
அ) முகலாயக் கட்டடக்கலை ஆ) பிரித்தானியக் கட்டடக்கலை
இ) இந்தியப் பாரம்பரியக் கட்டடக்கலை ஈ) இவை மூன்றும் கலந்தது **[ஈ) இவை மூன்றும் கலந்தது]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## கூற்று சரியா? தவறா?

1. **கூற்று 1** : வங்கக் கடலோரம் சிறு குப்பமாக இருந்த பகுதியே இன்றைய சென்னை.
**கூற்று 2** : 'தொண்டமண்டலத்துப் புழல் கோட்டத்து ஞாயிறு நாட்டு மதராசப்பட்டினம்
அ) கூற்று இரண்டு தவறு ஆ) கூற்று 1 சரி 2 தவறு
இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று இரண்டும் சரி **[ஆ) கூற்று 1 சரி 2 தவறு]**

2. **கூற்று 1** : ஆங்கிலேயர் குடியேற்றத்துக்கான இடத்தைத் தேர்ந்தெடுத்தவர் பிரான்சிஸ் டே.
**கூற்று 2** : விஜயநகர ஆட்சியில் ஆளுநர்களாக இருந்தவர்கள் சென்னப்பரின் இரு மகன்கள்.
அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று இரண்டும் தவறு
இ) கூற்று இரண்டும் சரி ஈ) கூற்று 1 தவறு 2 சரி **[இ) கூற்று இரண்டும் சரி]**

3. **கூற்று 1** : கூவம் நதியைத் 'திருவல்லிக்கேணி ஆறு' என்றும் அழைத்தனர்.
**கூற்று 2** : கூவம் நதிப்பற்றி நாட்குறிப்பில் எழுதியவர் வள்ளல் பச்சையப்பர்.
அ) கூற்று 1 தவறு 2 சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு
இ) கூற்று இரண்டும் தவறு ஈ) கூற்று இரண்டும் சரி **[ஈ) கூற்று இரண்டும் சரி]**

4. **கூற்று 1** : செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே இருந்த பகுதி 'கருப்பர் நகரம்' என்று அழைக்கப்பட்டது.
**கூற்று 2** : செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு வெளியே இருந்த பகுதி 'வெள்ளையர் நகரம்' என்று அழைக்கப்பட்டது.
அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி
இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று இரண்டும் சரி **[அ) கூற்று இரண்டும் தவறு]**

5. **கூற்று 1** : வண்ணாரப்பேட்டை என்பது 'வண்ணத்துக்காரன் பேட்டை' எனப்பட்டது.
**கூற்று 2** : சிந்தாதிரிப் பேட்டை என்பது 'சின்னதறிப்பேட்டை' எனப்பட்டது.
அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி
இ) கூற்று இரண்டும் சரி ஈ) கூற்று இரண்டும் தவறு **[இ) கூற்று இரண்டும் சரி]**

6. **கூற்று 1** : வடசென்னைப் பகுதிகள் மதராசப்பட்டினம் என அழைக்கப்பட்டது.
**கூற்று 2** : தென்சென்னைப் பகுதிகள் தண்டையார்ப்பேட்டை என அழைக்கப்பட்டது.
அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று 1 சரி 2 தவறு
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி **[ஆ) கூற்று 1 சரி 2 தவறு]**

7. **கூற்று 1** : பல்லாவரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது கல் குடம்.
**கூற்று 2** : கொற்றலையாற்றுப் படுகை மனித நாகரிகத்தின் முதன்மையான களங்களில் ஒன்று.
அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று இரண்டும் சரி
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று இரண்டும் தவறு **[இ) கூற்று 1 தவறு 2 சரி]**

8. **கூற்று** : பாரதிதாசன், 'மாவலிபுரச் செலவு' எனும் தலைப்பில் கவிதை இயற்றினார்.
**காரணம்** : பாரதிதாசன், தன் நண்பர்களுடன் படகுப் பயணம் செய்ததைக் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.
அ) கூற்று சரி காரணம் தவறு ஆ) கூற்று சரி காரணம் சரி
இ) கூற்று தவறு காரணம் தவறு ஈ) கூற்று தவறு காரணம் சரி **[ஆ) கூற்று சரி காரணம் சரி]**

9. **கூற்று** : வடசென்னை, தென்சென்னைப் பகுதிகள் இரண்டையும் இணைத்து ஆங்கிலேயர் மதராஸ் என்று அழைத்தனர்.
**காரணம்** : ஆங்கிலேயர் மதராஸ் என்று அழைத்த இடமே பின்பு மெட்ராஸ் ஆகியது.
அ) கூற்று தவறு காரணம் தவறு ஆ) கூற்று சரி காரணம் தவறு
இ) கூற்று தவறு காரணம் சரி ஈ) கூற்று சரி காரணம் சரி **[ஈ) கூற்று சரி காரணம் சரி]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



10. **கூற்று** : 18-ஆம் நூற்றாண்டிலேயே சென்னையில் ஐரோப்பிய முறைக்கல்வி கற்பிக்கும் நிறுவனங்கள் தோன்றின.

**காரணம்** : 18-ஆம் நூற்றாண்டு இறுதியில் ஐரோப்பிய முறைக் கல்வி அழிக்கப்பட்டது.

அ) கூற்று சரி காரணம் தவறு ஆ) கூற்று தவறு காரணம் சரி

இ) கூற்று தவறு காரணம் தவறு ஈ) கூற்று சரி காரணம் சரி **[அ) கூற்று சரி காரணம் தவறு]**

11. **கூற்று** : ஆங்கிலேயரின் நிதி உதவியின்றி உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனம் பச்சையப்பன் கல்லூரி.

**காரணம்** : இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்டது பச்சையப்பன் கல்லூரி.

அ) கூற்று தவறு காரணம் தவறு ஆ) கூற்று சரி காரணம் தவறு

இ) கூற்று சரி காரணம் சரி ஈ) கூற்று தவறு காரணம் சரி **[இ) கூற்று சரி காரணம் சரி]**

## பொருந்தாததைத் தேர்க.

1. அ) வடசென்னை ஆறு - கொற்றலையாறு
   ஆ) தென்சென்னை ஆறு - அடையாறு
   இ) மத்திய சென்னை ஆறு - கூவம்
   ஈ) வாஷிங்டன் நகர் நதி - கோதண்டராம ஆறு **[ஈ) வாஷிங்டன் நகர் நதி - கோதண்டராம ஆறு]**

2. அ) கருப்பர் நகரம் - கோட்டையின் வெளிப்பகுதி
   ஆ) வெள்ளையர் நகரம் - கோட்டையின் உள் பகுதி
   இ) வண்ணாரப்பேட்டை - வண்ணத்துக்காரன் பேட்டை
   ஈ) சிந்தாரிப்பேட்டை - சின்னப்பேட்டை **[ஈ) சிந்தாரிப்பேட்டை - சின்னப்பேட்டை]**

3. அ) கி.பி.1647-ஆம் ஆண்டு - எழுதப்பட்ட பத்திரம்
   ஆ) பிரான்சிஸ் டே - கோட்டைத் தலைவர்
   இ) கூவம் நதி - திருவல்லிக்கேணி ஆறு
   ஈ) வள்ளல் பச்சையப்பர் - நாட்குறிப்பு **[ஆ) பிரான்சிஸ் டே - கோட்டைத் தலைவர்]**

## சரியானதைத் தேர்க.

1. அ) பாரதிதாசன் - மாவலிபுரச் செலவு
   ஆ) பச்சையப்பர் - தேம்ஸ் நதி
   இ) வெள்ளையர் நகரம் - எழும்பூர்
   ஈ) வடசென்னை - எலியேல் **[அ) பாரதிதாசன் - மாவலிபுரச் செலவு]**

2. அ) கூவம் நதி - கொற்றலையாறு
   ஆ) பிரான்சிஸ் டே - நாட்குறிப்பு
   இ) பல்லாவரம் - கல்கோடரி
   ஈ) கூடுவாஞ்சேரி - குடைவரை **[இ) பல்லாவரம் - கல்கோடரி]**

3. அ) கி.பி.1647-ஆம் ஆண்டு - ஆற்றுப்படுகை
   ஆ) லண்டன் நகர் - தேம்ஸ் நதி
   இ) மத்திய சென்னை - எலியேல்
   ஈ) வாஷிங்டன் - அடையாறு **[ஆ) லண்டன் நகர் - தேம்ஸ் நதி]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## சரியான நிறுத்தற்குறியுடைய தொடரினைத் தேர்க.

1. அ) பாரதிதாசன், 'பக்கிங்காம் கால்வாயில்' மயிலை சீனி, வேங்கடசாமி, ப.ஜீவானந்தம், உள்ளிட்ட நண்பர்களுடன் படகுப் பயணம் செய்திருக்கிறார்.
   ஆ) பாரதிதாசன், பக்கிங்காம் கால்வாயில் மயிலை சீனி. வேங்கடசாமி, ப.ஜீவானந்தம், உள்ளிட்ட நண்பர்களுடன் படகுப் பயணம் செய்திருக்கிறார்.
   இ) பாரதிதாசன் ''பக்கிங்காம் கால்வாயில்'' மயிலை சீனி, வேங்கடசாமி, ப.ஜீவானந்தம் உள்ளிட்ட நண்பர்களுடன் படகுப் பயணம் செய்திருக்கிறார்.
   ஈ) பாரதிதாசன் பக்கிங்காம் கால்வாயில் மயிலை சீனி, வேங்கடசாமி, ப.ஜீவானந்தம் உள்ளிட்ட நண்பர்களுடன் படகுப் பயணம் செய்திருக்கிறார்.

**[ஆ) பாரதிதாசன், பக்கிங்காம் கால்வாயில் மயிலை சீனி. வேங்கடசாமி, ப.ஜீவானந்தம், உள்ளிட்ட நண்பர்களுடன் படகுப் பயணம் செய்திருக்கிறார்.]**

---

2. அ) பாரதிதாசன், மாவலிபுரச் செலவு எனும் தலைப்பில் கவிதை இயற்றினார்.
   ஆ) பாரதிதாசன் ''மாவலிபுரச் செலவு'' எனும் தலைப்பில் கவிதை இயற்றினார்.
   இ) பாரதிதாசன், 'மாவலிபுரச் செலவு' எனும் தலைப்பில் கவிதை இயற்றினார்.
   ஈ) பாரதிதாசன், மாவலிபுரச் செலவு, எனும் தலைப்பில் கவிதை இயற்றினார்.

**[இ) பாரதிதாசன், 'மாவலிபுரச் செலவு' எனும் தலைப்பில் கவிதை இயற்றினார்]**

---

3. அ) செயின்ட் ஜார்ஜ், 'கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி' வெள்ளையர் நகரம், என்று அழைக்கப்பட்டது.
   ஆ) செயின்ட் ஜார்ஜ், கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி, வெள்ளையர் நகரம் என்று அழைக்கப்பட்டது.
   இ) செயின்ட் ஜார்ஜ் 'கோட்டைக்கு, 'உள்ளே வீடுகள் இருந்த பகுதி' வெள்ளையர் நகரம், என்று அழைக்கப்பட்டது.
   ஈ) செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி 'வெள்ளையர் நகரம்' என்று அழைக்கப்பட்டது.

**[ஈ) செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி 'வெள்ளையர் நகரம்' என்று அழைக்கப்பட்டது]**

---

4. அ) கி.பி.2ஆம் நூற்றாண்டில் தாலமி என்பவரால் 'மல்லியர்பா' எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது.
   ஆ) கி.பி.2ஆம் நூற்றாண்டில், தாலமி, என்பவரால் ''மல்லியர்பா'' எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது.
   இ) கி.பி.2ஆம் நூற்றாண்டில் 'தாலமி என்பவரால் மல்லியர்பா' எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது.
   ஈ) கி.பி.2ஆம் நூற்றாண்டில் தாலமி, என்பவரால் 'மல்லியர்பா' எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது.

**[அ) கி.பி.2ஆம் நூற்றாண்டில் தாலமி என்பவரால் 'மல்லியர்பா' எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது]**

---

5. அ) மெட்ராஸ், 'ரெக்காட் ஆபிஸ்' சாரசெனிக் கட்டடக்கலை முறையில் கட்டப்பட்டது.
   ஆ) 'மெட்ராஸ் ரெக்காட் ஆபிஸ்' சாரசெனிக் கட்டடக்கலை முறையில் கட்டப்பட்டது.
   இ) ''மெட்ராஸ் ரெக்காட் ஆபிஸ்'' சாரசெனிக் ''கட்டடக்கலை'' முறையில் கட்டப்பட்டது.
   ஈ) மெட்ராஸ் ரெக்காட் ஆபிஸ், 'சாரசெனிக்' கட்டடக்கலை முறையில் கட்டப்பட்டது.

**[ஆ) 'மெட்ராஸ் ரெக்காட் ஆபிஸ்' சாரசெனிக் கட்டடக்கலை முறையில் கட்டப்பட்டது]**

---

6. **உரிய நிறத்தற்குறி அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்கவும். (ப.ஆ.க-6)**
   அ) ''நீங்கள் கொடுத்து வைத்தவர்'' என்று ஆசி கூறினார்.
   ஆ) 'நீங்கள் கொடுத்து வைத்தவர்' என்று ஆசி கூறினார்.
   இ) 'நீங்கள் கொடுத்து வைத்தவர்!'' என்று ஆசி கூறினார்.
   ஈ) 'நீங்கள் கொடுத்துவைத்தவர்' என்று ஆசி கூறினார்.

**[அ) ''நீங்கள் கொடுத்து வைத்தவர்'' என்று ஆசி கூறினார். ]**

---



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## பொருத்தித் தேர்க.

| | உருவான ஆண்டு | கல்விநிறுவனம் |
|---|---|---|
| 1. | அ) 1715-ஆம் ஆண்டு | - 1. பிரசிடென்சி பள்ளி |
| | ஆ) 1812-ஆம் ஆண்டு | - 2. கிறித்தவக் கல்லூரி |
| | இ) 1837-ஆம் ஆண்டு | - 3. சென்னைக் கோட்டைக் கல்லூரி |
| | ஈ) 1840-ஆம் ஆண்டு | - 4. புனிதமேரி தேவாலய தர்மப்பள்ளி |

அ) 3 4 1 2 ஆ) 4 3 2 1 இ) 2 4 1 ஈ) 1 4 2 3 **[ஆ) 4 3 2 1]**

| | உருவான ஆண்டு | கல்வி நிறுவனம் |
|---|---|---|
| 2. | அ) 1857-ஆம் ஆண்டு | - 1. சேப்பாக்கம் அரண்மனை |
| | ஆ) 1914-ஆம் ஆண்டு | - 2. ஐரோப்பிய கல்வி முறை |
| | இ) 1768-ஆம் ஆண்டு | - 3. சென்னைப் பல்கலைக் கழகம் |
| | ஈ) 18-ஆம் நூற்றாண்டு | - 4. இராணிமேரி கல்லூரி |

அ) 4 2 1 3 ஆ) 1 3 4 2 இ) 3 1 2 4 ஈ) 3 4 1 2 **[ஈ) 3 4 1 2]**

| | | |
|---|---|---|
| 3. | அ) பொது நூலகம் | - 1. இராயபுரம் |
| | ஆ) எழும்பூர் | - 2. கன்னிமாரா |
| | இ) முதல் தொடர்வண்டி நிலையம் | - 3. நம்பிக்கை மையம் |
| | ஈ) சென்னை நகரம் | - 4. அருங்காட்சியகம் |

அ) 3 1 4 2 ஆ) 2 1 3 4 இ) 2 4 1 3 ஈ) 4 2 1 3 **[இ) 2 4 1 3]**

| | | |
|---|---|---|
| 4. | அ) வடசென்னை | - 1. மானுட எச்சங்கள் |
| | ஆ) கூடுவாஞ்சேரி | - 2. மெட்ராஸ் |
| | இ) மதராஸ் | - 3. சென்னையின் பொற்காலம் |
| | ஈ) தாமஸ் பிட் | - 4. மதராசப்பட்டினம் |

அ) 4 1 2 3 ஆ) 2 4 1 3 இ) 2 3 4 1 ஈ) 1 4 3 2 **[அ) 4 1 2 3]**

## கீழ்க்காணும் தொடர்களில் பயின்று வரும் சுவைகள் யாது?

**அ. தென்னிந்தியாவிலேயே முதல் தொடர்வண்டி நிலையம் அமைந்த இடம் இராயபுரமே. (ப.ஆ.க-3)**

பெருமிதச்சுவை.

**ஆ. என்னே! யோகாசனத்தின் சிறப்புகள்! (ப.ஆ.க-3)**

வியப்பு சுவை.

## குறுவினா

**1. குப்பம் நகரமாக மாற்றம் பெற்ற வரலாற்றை எடுத்துக்கூறும் குறிப்பு எது?**

- கி.பி. (பொ.ஆ) 1647-இல் எழுதப்பட்ட பத்திரம் ஒன்றில் ‘‘தொண்ட மண்டலத்துப் புழல் கோட்டத்து ஞாயிறு நாட்டுச் சென்னப்பட்டினம்’’ என்று காணப்படும் குறிப்பு, குப்பம் நகரமாக மாற்றம் பெற்ற வரலாற்றைக் கூறுகிறது.

**2. வள்ளல் பச்சையப்பர் கூவம் நதிப் பற்றிக் கூறுவதை எழுதுக.**

- வள்ளல் பச்சையப்பர் கூவம் நதிக்கரையில் குளித்துவிட்டு அருகில் உள்ள கோவிலில் வழிபட்டதாக அவரது நாட்குறிப்பில் உள்ளது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**3. செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே, வெளியே உள்ள பகுதிகள் எவ்வாறு அழைக்கப்பட்டது?**

➢ செயிண்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி 'வெள்ளையர் நகரம்' எனவும், கோட்டைக்கு வெளியே அமைத்த குடியிருப்புகள் உள்ள பகுதி 'கருப்பர் நகரம்' என அழைக்கப்பட்டது.

**4. கிழக்கிந்திய நிறுவனம் எவற்றை வணிகம் செய்தது?**

➢ கிழக்கிந்திய நிறுவனம் பெரும்பாலும் துணி வணிகத்தையே செய்து வந்தது.

**5. ஆங்கிலேயர் மதராஸ் என்று அழைத்த பகுதிகள் யாவை?**

➢ வடசென்னைப் பகுதிகள் மதராசப்பட்டினம் என்றும், தென்சென்னைப் பகுதிகள் சென்னைப்பட்டினம் என்றும் வழங்கப்பட்டன. ஆங்கிலேயர் இரண்டையும் இணைத்து மதராஸ் என்று அழைத்தனர்.

**6. சென்னைக்கு அருகில் அகழாய்வு செய்த பகுதிகள் யாவை?**

➢ குடியம், அத்திரம்பாக்கம், கொற்றலையாற்றுப்படுகை, கூடுவாஞ்சேரி, பல்லாவரம், புழல் போன்ற பகுதிகள் அகழாய்வுச் செய்யப்பட்டப் பகுதிகள் ஆகும்.

**7. சென்னை நகரத்தில் பழமையான கோயில்கள் யாவை?**

➢ சென்னை நகரத்தில் பழமையான கோயில்களான திருவொற்றியூர், திருவான்மியூர், மயிலாப்பூர், திருமுல்லைவாயில் உள்ளிட்ட கோயில்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பாடல் பெற்ற தலங்களாக உள்ளன.

**8. சென்னையில் 400 ஆண்டுகளுக்கு முன்னரே புகழ்பெற்ற கிராமங்கள் யாவை?**

➢ சேத்துப்பட்டு (சேற்றுப்பட்டு), நுங்கம்பாக்கம், வியாசர்பாடி, மாதவரம், கோயம்பேடு, தாம்பரம் போன்ற பகுதிகள் கிழக்கிந்திய நிறுவனம் கால் பதிப்பதற்கு 400 ஆண்டுகளுக்கு முன்னரே 12-13 ஆம் நூற்றாண்டுகளில் புகழ்பெற்ற கிராமங்களாக இருந்துள்ளன.

**9. சென்னை நகராட்சி உருவாக்கப்படக் காரணம் என்ன?**

➢ 1646-ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள் தொகை 19,000 ஆகும். இவ்வளர்ச்சியினை அறிந்தே 1688-இல் சென்னை நகராட்சி உருவாக்கப்பட்டது.

**10. 19-ஆம் நூற்றாண்டில், கல்வி வளர்ச்சியின் உடனிகழ்வானவை யாவை?**

➢ 19-ஆம் நூற்றாண்டில், கல்வி வளர்ச்சியின் உடனிகழ்வான அச்சுப்பரவல், நாளிதழ்ப் பெருக்கம் ஆகியவை சென்னையின் அறிவு வளர்ச்சிக்குத் துணை நின்றன. இதுவே, தமிழ்ச்சமூகம் அறிவுத்துறையில் பெரும் பாய்ச்சலை மேற்கொண்ட காலகட்டமாகும்.

**11. சென்னை நகரின் பண்பாட்டு அடையாளங்கள் யாவை?**

➢ இந்திய சாரசனிக் கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்ட பல கட்டடங்கள், எழும்பூர் அருங்காட்சியகம், கோட்டை அருங்காட்சியகம், இந்தியாவின் முதல் பொது நூலகமான கன்னிமாரா நூலகம், திரைப்படத் தொழில் சார்ந்த இடங்கள் ஆகியவை சென்னை நகரின் குறிப்பிடத்தக்க பண்பாட்டு அடையாளங்கள் ஆகும்.

**12. இந்தோ-சாரசனிக் கட்டடக்கலை என்றால் என்ன? (ப.ஆ.க-2,5)**

➢ முகலாயக் கட்டடக்கலை, பிரித்தானியக் கட்டடக்கலை (பிரிட்டன்) இந்தியப் பாரம்பரியக் கட்டிடப் பாணி இந்த மூன்றும் கலந்து உருவாக்கப்பட்டதே இந்தோ-சாரசனிக் கட்டடக்கலை எனப்படும்.

**13. இந்தோ-சாரசனிக் கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்டக் கட்டிடங்கள் யாவை?**

➢ சேப்பாக்கம் அரண்மனை, மத்திய தொடர்வண்டி நிலையம், தென்னகத் தொடர் வண்டித் தலைமையகம், எழும்பூர் தொடர்வண்டி நிலையம், பொது அஞ்சல் அலுவலகம், உயர்நீதிமன்றம், சென்னைப் பல்கலைக்கழகம், ரிப்பன் கட்டடம், விக்டோரியா அரங்கம்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**14. சென்னை இலக்கியச் சங்கம் பற்றி எழுதுக.**

- 1812-ஆம் ஆண்டு கோட்டைக் கல்லூரியின் இணைவாக உருவானது இந்நூலகம். அரிய பல நூல்களைக் கொண்ட இந்தியாவின் பழைய நூலகங்களில் இதுவும் ஒன்று.

**15. கன்னிமாரா நூலகம் குறித்து எழுதுக.**

- 1860-இல் சென்னை அருங்காட்சியகத்தின் அங்கமாகத் தொடங்கப்பட்டது இந்நூலகம். இந்தியாவின் முதல் பொது நூலகம் என்ற பெருமையை உடையது இந்நூலகம்.

**16. அண்ணா நூற்றாண்டு நூலகம் குறித்து எழுதுக.**

- 2010-ஆம் ஆண்டில் சென்னையில் தொடங்கப்பட்டது இந்நூலகம். இஃது ஆசியாவின் இரண்டாவது மிகப்பெரிய நூலகமாகும்.

**17. சென்னையில் அமைக்கப்பட்டுள்ள தமிழாய்வு நூலகங்கள் யாவை?**

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகம், ராஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், மறைமலையடிகள் நூலகம், செம்மொழித் தமிழாய்வு நூலகம் முதலியனவாகும்.

**18. சென்னையை அலங்கரித்த ஆறுகளை எழுதுக. (மார்ச்.20)** (அல்லது)
**சென்னையில் ஓடிய ஆறுகளைக் கூறுக.**

- கொற்றலையாறு, கூவமாறு, அடையாறு, பாலாறு இவையே சென்னையை அலங்கரித்த ஆறுகளாகும்.

**19. சென்னையின் நீர்நிலைகளையும் வடிகால்களையும் குறித்து எழுதுக. (ப.ஆ.க-2)**

- வடசென்னைக்குக் கொற்றலையாறு, மத்திய சென்னைக்குக் கூவம் (திருவல்லிக் கேணி ஆறு), தென்சென்னைக்கு அடையாறு, அதற்கும் கீழே பாலாறு என நான்கு ஆறுகளை உடையது சென்னை.
- இந்த நான்கு ஆறுகளையும் இணைக்கக்கூடிய பக்கிங்காம் கால்வாய் மற்றும் காட்டன் கால்வாய், விருகம்பாக்கம் கால்வாய், ஓட்டேரி நல்லா என 18 பெரிய ஓடைகள் என இயற்கையாய் அக்காலத்தில் சென்னை வடிகால்களையும் பெற்றிருந்தது.

## சிறுவினா

**1. சென்னை மாநகரத்தின் உருவாக்கத்தை விளக்குக. (ப.ஆ.க-5)**

- சென்னை மாநகரத்தின் உருவாக்கம் நீண்ட வரலாற்றுப் பின்னணி கொண்டது. ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு முன் வங்கக் கடலோரம் சிறு குப்பமாக இருந்த பகுதியே இன்றைய சென்னைக்குத் தொடக்கப் புள்ளியாக அமைந்தது.
- கி.பி. (பொ.ஆ) 1647-இல் எழுதப்பட்ட பத்திரம் ஒன்றில் ''தொண்டமண்டலத்துப் புழல் கோட்டத்து ஞாயிறு நாட்டுச் சென்னப்பட்டினம்'' என்று காணப்படும் குறிப்பு, குப்பம் நகரமாக மாற்றம் பெற்ற வரலாற்றைக் கூறுகிறது.
- மயிலாப்பூருக்கு வடக்கே சில குப்பங்கள் மட்டுமே இருந்த மணல்வெளியைக் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் அலுவலர் 'பிரான்சிஸ் டே' விஜயநகர ஆட்சியில் உள்ளூர் ஆளுநர்களான சென்னப்பரின் இரு மகன்களிடமிருந்து 22.08.1639-ஆம் நாளில் வாங்கினார். கிழக்கிந்திய நிறுவனத்தின் நுழைவுக்குப் பிறகு அவர்களின் வணிகத்திற்காக இந்நகரம் சீரமைக்கப்பட்டது.

**2. வள்ளல் பச்சையப்பர், பாரதிதாசன் ஆகியோர் கூவம் நதி பற்றிக் கூறுவதை எழுதுக.**

- மயிலாப்பூருக்கு வடக்கே சில குப்பங்கள் இருந்தன. அதன் இருபுறமும் கூவம் அழகான ஆறாகக் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. 'திருவல்லிக்கேணி ஆறு' என்றும் அதனை அழைத்தனர்.
- வள்ளல் பச்சையப்பர் கூவம் நதிக்கரையில் குளித்துவிட்டு அருகில் உள்ள கோவிலில் வழிபட்டதாக ஒரு குறிப்பு, அவரது நாட்குறிப்பில் உள்ளது.
- பாரதிதாசன், பக்கிங்காம் கால்வாயில் மயிலை சீனி. வேங்கடசாமி, ப.ஜீவானந்தம், உள்ளிட்ட நண்பர்களுடன் படகுப் பயணம் செய்திருக்கிறார். அதனை அவர், 'மாவலிபுரச் செலவு' எனும் தலைப்பில் கவிதையாக்கியிருக்கிறார்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

3. **மதராசப்பட்டினம் - நகர உருவாக்கம் பற்றிக் கூறுக.**

- செயிண்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி 'வெள்ளையர் நகரம்' என்று அழைக்கப்பட்டது. கோட்டைக்குள் இருப்பவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பணியாளர்கள், வணிகர்கள் போன்றோருக்காக வெளியே அமைத்த குடியிருப்புகள் உள்ள பகுதி 'கருப்பர் நகரம்' என அழைக்கப்பட்டது. இவ்விரு பகுதிகளும் இணைந்த பகுதியே 'மதராசப்பட்டினம்' எனப்பட்டது.
- கிழக்கிந்திய நிறுவனம் பெரும்பாலும் துணி வணிகத்தையே செய்த காரணத்தால், இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர். அவர்களால் பல கிராமங்கள் இணைக்கப்பட்டன. வடசென்னைப் பகுதிகள் மதராசப்பட்டினம் என்றும், தென்சென்னைப் பகுதிகள் சென்னைப் பட்டினம் என்றும் வழங்கப்பட்டன. ஆங்கிலேயர் இரண்டையும் இணைத்து மதராஸ் என்று அழைத்தனர்.

4. **சென்னையின் தொன்மை குறித்து விளக்குக.**

- சென்னைக்கு அருகேயுள்ள குடியம், அத்திரம்பாக்கம் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுப் பணி, அப்பகுதியின் மனித நாகரிகத்தின் பழமையை ஒரு லட்சம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது என நிறுவுகிறது. அங்கு ஓடக்கூடிய கொற்றலையாற்றுப் படுகை மனித நாகரிகத்தின் முதன்மையான களங்களில் ஒன்று எனலாம்.
- பல்லாவரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல் கோடரி இந்திய அகழாய்வுத்துறை வரலாற்றில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது. மேலும் கூடுவாஞ்சேரி, பல்லாவரம், புழல் போன்ற பகுதிகளில் இன்றும் கிடைக்கும் தொல்பழங்கால மானுட எச்சங்கள் இப்பகுதியின் பழமையை நமக்கு உணர்த்துகின்றன. இன்று சென்னையின் ஒரு பகுதியாக விளங்கும் மயிலாப்பூர், கி.பி. (பொ.ஆ) 2-ஆம் நூற்றாண்டில் தாலமி என்பவரால் 'மல்லியர்பா' எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது.

5. **சென்னை அறிவின் நகரம் என்பதை விளக்குக. (பெ.ஆ.க-1,2)**

- சென்னையின் பல்வேறு கல்வி நிறுவனங்கள் ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்டவை. 18-ஆம் நூற்றாண்டிலேயே சென்னையில் ஐரோப்பிய முறையில் கல்வி கற்பிக்கும் நிறுவனங்கள் தோன்றின. 1715-இல் உருவான 'புனித மேரி தேவாலய தர்மப் பள்ளி' ஆசியாவில் உருவான முதல் ஐரோப்பியக் கல்வி முறையிலான பள்ளியாகும்.
- 19-ஆம் நூற்றாண்டில் பள்ளிகள் பெருகின. 1812-இல் உருவான சென்னைக் கோட்டைக் கல்லூரி, 1837-இல் தொடங்கப்பட்ட கிறித்தவக் கல்லூரி, 1840-இல் உருவான பிரசிடென்சி பள்ளி (பின்னாளில் மாநிலக் கல்லூரி) போன்ற பல்வேறு கல்வி நிறுவனங்கள் சென்னையின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றின.

6. **தென்னிந்தியக் கல்வி நிறுவனங்கள் பற்றிக் குறிப்பு வரைக.**

- தென்னிந்தியப் பல்கலைக்கழகங்களுக்கும் வேராக இருந்து 19-ஆம் நூற்றாண்டின் அறிவுப் புரட்சியில் பெரும்பங்காற்றிய சென்னைப் பல்கலைக்கழகம் 1857-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1914-இல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட இராணிமேரி கல்லூரி பெண்கல்வி வரலாற்றில் குறிப்பிடத்தக்க கல்வி நிறுவனம் ஆகும்.
- ஆங்கிலேயரின் நிதி உதவியின்றி இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனம் பச்சையப்பன் கல்லூரி. மேலும் மருத்துவக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, உடற்பயிற்சிக் கல்லூரி, கவின்கலைக் கல்லூரி, மாற்றுத்திறனாளிகளுக்கான பள்ளி எனச் சென்னை நகரின் கல்விக் கூடங்கள் பலவும் தமிழ்ச் சமூகத்தில் பெரும் அசைவுகளை ஏற்படுத்தின.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

7. **சென்னை நகரின் போக்குவரத்து வளர்ச்சி குறித்து எழுதுக. (மார்ச்.20)**

- மதராசப்பட்டினத்தில் நடந்து செல்லும் பாதைகள், மாட்டு வண்டிகள் சென்ற பாதைகள் அனைத்தும் ஆங்கிலேயரின் குடியிருப்பால் சாலைகளாக மாறின. 1856-இல் தென்னிந்தியாவில் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.
- இராயபுரம் தொடர்வண்டி நிலையம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து சென்னை மத்தியத் தொடர்வண்டி நிலையம், எழும்பூர் தொடர்வண்டி நிலையம் ஆகியவை உருவாயின. சென்னை நகர வீதிகளில் டிராம் வண்டிகள் இயக்கப்பட்டன.
- இவ்வாறு சென்னையின் தரைவழிப் போக்குவரத்து வளர்ச்சி அடைந்தது. 19-ஆம் நூற்றாண்டில் பெரும் வளர்ச்சியடைந்த சென்னை துறைமுகமும் உலக நாடுகளை தமிழகத்துடன் இணைக்கும் பன்னாட்டு விமான நிலையமும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவை. ஆங்கிலேயருக்கும் சென்னை மாநகருக்கும் ஏறத்தாழ 300 ஆண்டுகாலமாக இருந்த உறவு, 1947 ஆகஸ்ட் 15 ஆம் நாள் முடிவுக்கு வந்தது.

8. **நகரம் உலகப் புகழ்பெறுவதற்குரிய காரணத்தை விளக்குக. (ப.ஆ.க-3)**

- ஒரு நகரம் உலகப் புகழ்பெறுவதற்கு, அது பண்டையச் சிறப்புடையதாக இருக்க வேண்டும்; தொழில் வளம் மிகுதியாகப் பெற்றிருக்க வேண்டும்; சிறந்த குடிமக்களைக் கொண்டிருக்க வேண்டும்; துறைமுக வசதியுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்;
- ஏற்றுமதி இறக்குமதி, வணிகம் தொடர்ந்து நடைபெற வேண்டும். இவற்றுடன் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் மிளிர வேண்டும். இத்தகைய தகுதிகள் உடைய நகரமே உலகப் புகழ்பெற்ற சிறந்த நகரமாக விளங்கும்.

## நெடுவினா

1. **சென்னை நகரம் அறிவு வளர்ச்சிக்குச் சிறந்த நகரமாக அமையக் காரணமாக இருந்த கல்வி நிறுவனங்களைப் பற்றி விவரி.**

மனிதன் அறிவுப்பெறக் காரணமாக இருக்கும் கல்விநிறுவனங்கள், ஒரு நாட்டின் வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கின்றன. 18-ஆம் நூற்றாண்டிலே சிறந்த கல்வி நிறுவனங்கள் சென்னை நகரில் தோன்றின.

**கல்விக்கூடங்கள்:**

- சென்னையில் பல்வேறு கல்வி நிறுவனங்கள் ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்டவை.
- 18-ஆம் நூற்றாண்டிலே ஐரோப்பிய முறையில் கல்வி கற்பிக்கும் நிறுவனங்கள் சென்னை நகரங்களில் தோன்றின.
- 'புனித மேரி தேவாலய தர்ம பள்ளி' ஆசியாவில் உருவான முதல் ஐரோப்பிய கல்வி முறை பள்ளியாகும். இது 1715-இல் சென்னை நகரில் உருவானது.
- சென்னை நகரில் 19-ஆம் நூற்றாண்டில் பல பள்ளிகள் உருவாகின.
- மாற்றுத் திறனாளிகளுக்கான பள்ளியும் தோன்றியது.

**கல்லூரிகள்:**

- சென்னை நகரில் 1812-இல் சென்னைக் கோட்டைக் கல்லூரி, 1837-இல் கிறிஸ்தவக் கல்லூரி, 1840-இல் பிரசிடென்சி கல்லூரி (மாநிலக் கல்லூரி) முதலியவை தோன்றின.
- 1914-இல் பெண்களுக்காகத் தொடங்கப்பட்ட இராணிமேரி கல்லூரியும், ஆங்கிலேயரின் நிதி உதவியின்றி இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட பச்சையப்பன் கல்லூரியும், மருத்துவக் கல்லூரியும், ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியும் உடற்பயிற்சிக் கல்லூரியும் , கவின் கலைக்கல்லூரியும் தோன்றின.

**பல்கலைக்கழகங்கள்:**

- சென்னைப் பல்கலைக்கழகம் 19-ஆம் நூற்றாண்டின் அறிவுப் புரட்சியில் பெரும்பங்காற்றியது.
- இச்சென்னைப் பல்கலைக்கழகம் தென்னிந்தியப் பல்கலைக்கழகங்களுக்கும் வேராக இருந்தது.

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**அறிவின் கூடாரம்:**

- 19-ஆம் நூற்றாண்டின் கல்வி வளர்ச்சியில் கல்வி நிறுவனங்களை உருவாக்கிய சென்னை நகரம் அறிவு வளர்ச்சியின் உடன் நிகழ்வான அச்சுப்பரவல், நாளிதழ்ப் பெருக்கம் ஆகியவையும் சென்னையின் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றன.

இவ்வாறாகக் கல்விக்கூடங்களும், கல்லூரிகளும் சென்னை நகரின் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றன.

2. **மதராசப்பட்டினம் பற்றி விளக்கி எழுதுக. (பெ.ஆ.க-1)**

- சென்னை மாநகரத்தின் உருவாக்கம் நீண்ட வரலாற்றுப் பின்னணி கொண்டது. ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு முன் வங்கக் கடலோரம் சிறு குப்பமாக இருந்த பகுதியே இன்றைய சென்னைக்குத் தொடக்கப் புள்ளியாக அமைந்திருந்திருந்தது.
- கி.பி. 1647-இல் எழுதப்பட்ட பத்திரம் ஒன்றில் ''தொண்டமண்டலத்துப் புழல் கோட்டத்து ஞாயிறு நாட்டுச் சென்னப்பட்டினம்'' என்று காணப்படும் குறிப்பு, குப்பம் நகரமாக மாற்றம் பெற்ற வரலாற்றைக் கூறும்.
- போர்த்துக்கீசியர் மற்றும் டச்சுக்காரர்களின் வணிக வெற்றியைத் தொடர்ந்து ஆங்கிலேயரும் இங்கு தம் வணிகத்தை மேற்கொள்ள திட்டமிட்டு மயிலாப்பூருக்கு வடக்கே சில குப்பங்கள் மட்டுமே இருந்த மணல்வெளியைக் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் அலுவலர் 'பிரான்சிஸ்டே' ஆங்கிலேயர் குடியேற்றத்திற்கு உரிய இடமாகத் தேர்ந்தெடுத்தார்.
- அப்பகுதியில் அன்று கூவம் ஆறு அழகான ஆறாகக் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது.
- அந்த இடத்தை விஜயநகர ஆளுநர்களான சென்னப்பரின் இரு மகன்களிடமிருந்து 22.08.1639 ஆம் நாளில் 'பிரான்சிஸ் டே' வாங்கினார்.
- கிழக்கிந்திய நிறுவனத்தின் நுழைவுக்குப் பிறகு ஆங்கிலேயரின் வணிகத்திற்காக நகரம் சீரமைக்கப்பட்டு, கோட்டையைச் சுற்றியுள்ள ஒவ்வொரு கிராமமும் இணைக்கப்பட்டுத் தொழில் வளர்ச்சிக்கு ஏற்றவாறு மாற்றப்பட்டது.
- செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி 'வெள்ளையர் நகரம்' என்றும், கோட்டைக்குள் இருப்பவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பணியாளர்கள், வணிகர்கள் போன்றோருக்காக வெளியே அமைந்த குடியிருப்புகள் உள்ள பகுதி 'கருப்பர் நகரம்' எனவும் அழைக்கப்பட்டது. இவ்விருப்பகுதியும் இணைந்த பகுதியே மதராசப்பட்டினம் எனப்பட்டது.
- நெசவாளர்களின் வருகையால் வண்ணாரப்பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை முதலிய புதிய பகுதிகள் தோன்றின. ஏற்கனவே இருந்த எழும்பூர், திருவல்லிக்கேணி, புரசைவாக்கம், தண்டையார்ப்பேட்டை, திருவொற்றியூர் முதலிய கிராமங்களும் இணைக்கப்பட்டன.
- வடசென்னைப் பகுதிகள் மதராசப்பட்டினம் என்று அழைக்கப்பட்டன.

3. **உலகப் புகழ்பெற்ற சென்னை அறிவின் நகரம், பண்பாட்டின் அடையாளம்,நம்பிக்கை நகரம் என்பதை விளக்குக. (பெ.ஆ.க-6)**

**சென்னை அறிவின் நகரம்:**

சென்னையின் பல்வேறு கல்வி நிறுவனங்கள் ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்டவை. 18-ஆம் நூற்றாண்டிலேயே சென்னையில் ஐரோப்பிய முறை கல்வி கற்பிக்கும் நிறுவனங்கள் தோன்றின. 1715-இல் உருவான 'புனித மேரி தேவாலய தர்மப் பள்ளி' ஆசியாவில் உருவான முதல் ஐரோப்பியக் கல்வி முறையிலான பள்ளியாகும்.

19-ஆம் நூற்றாண்டில் பள்ளிகள் பெருகின. 1812-இல் உருவான சென்னைக் கோட்டைக் கல்லூரி, 1837-இல் தொடங்கப்பட்ட கிறித்தவக் கல்லூரி, 1840-இல் உருவான பிரசிடென்சி பள்ளி (பின்னாளில் மாநிலக் கல்லூரி) போன்ற பல்வேறு கல்வி நிறுவனங்கள் சென்னையில் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றின.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**சென்னை பண்பாட்டின் அடையாளம்:**

இந்திய சாரசனிக் கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்ட பல கட்டடங்கள், எழும்பூர் அருங்காட்சியகம், கோட்டை அருங்காட்சியகம், இந்தியாவின் முதல் பொது நூலகமான கன்னிமாரா நூலகம், திரைப்படத் துறையின் வளர்ச்சி ஆகியவை சென்னை நகரின் குறிப்பிடத்தக்க பண்பாட்டு அடையாளங்கள் ஆகும்.

**சென்னை நம்பிக்கை நகரம்:**

சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம், சென்னையை மையமிட்டு உருவான தொழிற்சாலைகளும் நிறுவனங்களும் ஏற்படுத்திய நேரடி, மறைமுக வேலை வாய்ப்புகள் நகரின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றுகின்றன. இன்றைய சூழலில் கணினி மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தி ஆகியவற்றில் சென்னையின் பங்கு மிகவும் பெரியது. எனவே நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து வரும் மனிதர்கள் நம்பிக்கையுடன் இந்நகரம் நோக்கி வருகின்றனர்.

---

4. **சென்னை மாநகரின் வரலாறும் வடிவழகும் குறித்து கட்டுரை எழுதுக. (ப.ஆ.க-2)**

**முன்னுரை:**

ஒவ்வொரு நகரத்திற்கும், வரலாறும் வடிவழகும் உண்டு. சென்னை போன்ற மாநகருக்கு என்று தனித்துவமான அமைப்பும் வரலாற்றுத் தடங்களையும் அறிந்து கொள்வது நமது கடமையாகும்.

**சென்னை மாநகரின் வரலாறு:**

சென்னை மாநகரத்தின் உருவாக்கம் நீண்ட வரலாற்றுப் பின்னணி கொண்டது. ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு முன் வங்கக் கடலோரம் சிறு குப்பமாக இருந்த பகுதியே இன்றைய சென்னைக்குத் தொடக்கப் புள்ளியாக அமைந்திருந்திருந்தது. கி.பி. 1647-இல் எழுதப்பட்ட பத்திரம் ஒன்றில் ''தொண்டமண்டலத்துப் புழல் கோட்டத்து ஞாயிறு நாட்டுச் சென்னப்பட்டினம்'' என்று காணப்படும் குறிப்பு, குப்பம் நகரமாக மாற்றம் பெற்ற வரலாற்றைக் கூறும்.

போர்த்துக்கீசியர் மற்றும் டச்சுக்காரர்களின் வணிக வெற்றியைத் தொடர்ந்து ஆங்கிலேயரும் இங்குதம் வணிகத்தை மேற்கொள்ள திட்டமிட்டு மயிலாப்பூருக்கு வடக்கே சில குப்பங்கள் மட்டுமே இருந்த மணல்வெளியைக் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் அலுவலர் 'பிரான்சிஸ்டே' ஆங்கிலேயர் குடியேற்றத்திற்கு உரிய இடமாகத் தேர்ந்தெடுத்தார். அப்பகுதியில் அன்று கூவம் ஆறு அழகான ஆறாகக் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. அந்த இடத்தை விஜயநகர ஆளுநர்களான சென்னப்பரின் இரு மகன்களிடமிருந்து 22.08.1639 ஆம் நாளில் 'பிரான்சிஸ் டே' வாங்கினார்.

கிழக்கிந்திய நிறுவனத்தின் நுழைவுக்குப் பிறகு ஆங்கிலேயரின் வணிகத்திற்காக நகரம் சீரமைக்கப்பட்டு, கோட்டையைச் சுற்றியுள்ள ஒவ்வொரு கிராமமும் இணைக்கப்பட்டுத் தொழில் வளர்ச்சிக்கு ஏற்றவாறு மாற்றப்பட்டது. செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி 'வெள்ளையர் நகரம்' என்றும், கோட்டைக்குள் இருப்பவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பணியாளர்கள், வணிகர்கள் போன்றாருக்காக வெளியே அமைத்த குடியிருப்புகள் உள்ள பகுதி 'கருப்பர் நகரம்' எனவும் அழைக்கப்பட்டது. இவ்விருப்பகுதியும் இணைந்த பகுதியே மதராசப்பட்டினம் எனப்பட்டது.

நெசவாளர்களின் வருகையால் வண்ணாரப்பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை முதலிய புதிய பகுதிகள் தோன்றின. ஏற்கனவே இருந்த எழும்பூர், திருவல்லிக்கேணி, புரசைவாக்கம், தண்டையார்ப்பேட்டை, திருவொற்றியூர் முதலிய கிராமங்களும் இணைக்கப்பட்டன. வடசென்னைப் பகுதிகள் மதராசப்பட்டினம் என்று அழைக்கப்பட்டன.

**வடிவழகு:**

இந்திய சாரசனிக் கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்ட பல கட்டடங்கள், எழும்பூர் அருங்காட்சியகம், கோட்டை அருங்காட்சியகம், இந்தியாவின் முதல் பொது நூலகமான கன்னிமாரா நூலகம், திரைப்படத் துறையின் வளர்ச்சி ஆகியவை சென்னை நகரின் குறிப்பிடத்தக்க பண்பாட்டு அடையாளங்கள் ஆகும்.

**முடிவுரை:**

இவ்வாறு நீண்ட வரலாறும் பண்பாட்டின் அடையாளமாகவும் விளங்குகின்ற சென்னை மாநகரின் வரலாற்றை மறக்காமல், அதன் வடிவழகை சிதைக்காமலும் இருப்பதே நமது கடமையாக இருக்க வேண்டும்.

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## கவிதைப்பேழை தெய்வமணிமாலை - இராமலிங்க அடிகள்

### பலவுள் தெரிக.

1. வள்ளலாரின் இயற்பெயர்
   அ) சம்பந்தர் ஆ) இராமலிங்கர் இ) தாயுமானவர் ஈ) இளந்திரையன் **[ஆ) இராமலிங்கர்]**

2. இராமலிங்கர் சத்திய தருமச்சாலையை நிறுவிய இடம்
   அ) வடலூர் ஆ) கடலூர் இ) சென்னை ஈ) மதுரை **[அ) வடலூர்]**

3. மதமான பேய் என்னை அணுகாதிருக்க வேண்டுமென கூறியவர்
   அ) வாசிகர் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) இராமலிங்கர் **[ஈ) இராமலிங்கர்]**

4. திருவருட்பா எத்தனை திருமுறையாகப் பகுக்கப்பட்டுள்ளது.
   அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு **[இ) ஆறு]**

5. திருவருட்பாவில் இடம் பெற்ற ஐந்தாம் திருமுறை
   அ) தெய்வமணிமாலை ஆ) தேவாரம் இ) பெரியபுராணம் ஈ) பூத்தது மானுடம் **[அ) தெய்வமணிமாலை]**

6. வாடிய பயிரைக் கண்டபோது வாடிய வள்ளலார்
   அ) பாரி ஆ) பேகன் இ) இராமலிங்கர் ஈ) மலயன் **[இ) இராமலிங்கர்]**

7. இராமலிங்க அடிகள் எழுதிய உரைநடை நூல்கள் எத்தனை
   அ) மூன்று ஆ) நான்கு இ) இரண்டு ஈ) ஐந்து **[இ) இரண்டு]**

8. இராமலிங்க அடிகளின் சீர்திருத்தச் சிந்தனை உருவான இடம்
   அ) மதுரை ஆ) கடலூர் இ) புதுவை ஈ) சென்னை **[ஈ) சென்னை]**

9. இராமலிங்க அடிகளின் சிந்தனை ஊற்றுக்களமாக இருந்த இடம்
   அ) மயிலாப்பூர் ஆ) கந்தகோட்டம் இ) சேலம் ஈ) திருவாதவூர் **[ஆ) கந்தகோட்டம்]**

10. கந்தகோட்டத்து இறைவன் யார்?
    அ) சிவன் ஆ) திருமால் இ) முருகன் ஈ) வருணன் **[இ) முருகன்]**

11. திருவருட்பா எத்தனை திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.
    அ) 7 ஆ) 5 இ) 4 ஈ) 6 **[ஈ) 6]**

12. ‘தெய்வமணிமாலை’ எந்தத் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.
    அ) 5 ஆ) 6 இ) 4 ஈ) 3 **[அ) 5]**

13. நம் பாடப்பகுதி தெய்வமணிமாலையில் எத்தனையாவது பாடல்
    அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 5 **[இ) 8]**

14. சமரச சன்மார்க்க நெறியை வகுத்தவர் யார்?
    அ) வள்ளலார் ஆ) தாயுமானவர் இ) இராமனடியார் ஈ) மாணிக்கவாசகர் **[அ) வள்ளலார்]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



15. **'நினைக்கின்ற' - இச்சொல்லின் சரியான பகுபத பிரிப்பு முறை**

அ) நினைக்கின்று + அ ஆ) நினை + க் + கின்ற இ) நினை + க் + கின்று + அ ஈ) நினைக்கும் + கின்ற + அ

**[இ) நினை + க் + கின்று + அ]**

16. **'பேசுவார்' - இச்சொல்லின் சரியான பகுபத பிரிப்பு முறை**

அ) பேசு + வ் + ஆர் ஆ) பேசுவ் + ஆர் இ) பேசு + வ் + அர் ஈ) பேசு + வார் **[அ) பேசு + வ் + ஆர்]**

17. **'உள்ளொன்று' - இச்சொல்லில் பயின்றுவரும் புணர்ச்சி விதிகள்**

அ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

ஆ) தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

இ) தன்னொற்று இரட்டல், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

**[ஆ) தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே]**

18. **'நினதுதிரு மலரடி நினைக்கின்ற' - மலரடி என்பதன் இலக்கணக்குறிப்பு**

அ) உருவகம் ஆ) உவமைத்தொகை இ) பண்புத்தொகை ஈ) உம்மைத்தொகை

**[ஆ) உவமைத்தொகை]**

19. **'வளர் தலமோங்கு கந்தவேளே! - வளர்தலம் இலக்கணக்குறிப்பு**

அ) பண்புத்தொகை ஆ) உம்மைத்தொகை இ) வினைத்தொகை ஈ) முற்றெச்சம் **[இ) வினைத்தொகை]**

20. **இராமலிங்க அடிகள் இயற்றிய நூல்: (மார்ச்.20)**

அ) திருவருட்பா ஆ) திருவாசகம் இ) திருக்குறள் ஈ) திருமந்திரம் **[அ) திருவருட்பா]**

## கூற்று சரியா? தவறா?

1. **கூற்று 1** : இராமலிங்க அடிகள் பொய் பேசாதிருக்க வேண்டுமென இறைவனிடம் வேண்டினார்.
   **கூற்று 2** : இராமலிங்க அடிகள் மதமான பேய் என்னை அணுக வேண்டும் என வேண்டினார்.

   அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று 1 சரி 2 தவறு

   இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி **[ஆ) கூற்று 1 சரி 2 தவறு]**

2. **கூற்று 1** : திருவருட்பா ஐந்து திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன.
   **கூற்று 2** : சிறுவயதிலேயே கவிபாடும் ஆற்றல் உடையவர் இராமலிங்க அடிகள்

   அ) கூற்று 1 தவறு 2 சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு

   இ) கூற்று இரண்டும் சரி ஈ) கூற்று இரண்டும் தவறு **[அ) கூற்று 1 தவறு 2 சரி]**

3. **கூற்று 1** : இராமலிங்க அடிகளின் சீர்திருத்தச் சிந்தனை உருவான இடம் சென்னை.
   **கூற்று 2** : இராமலிங்க அடிகள் ஆன்மீக மையத்தை வடலூரில் ஏற்படுத்தினார்

   அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று இரண்டும் சரி

   இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி **[ஆ) கூற்று இரண்டும் சரி]**

4. **கூற்று** : வாடிய பயிரைக் கண்டபோது வாடியவர் இராமலிங்க அடிகள்
   **காரணம்** : பயிரைப் பற்றி நினைத்துப்பாராதவர் இராமலிங்க அடிகள்

   அ) கூற்று சரி காரணம் சரி ஆ) கூற்று தவறு காரணம் தவறு

   இ) கூற்று சரி காரணம் தவறு ஈ) கூற்று தவறு காரணம் சரி **[இ) கூற்று சரி காரணம் தவறு]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## சரியானதைத் தேர்க.

1. அ) உத்தமர் - உறவு வேண்டாம்
   ஆ) வஞ்சகர் - உறவு வேண்டும்
   இ) துறவுக்கு எதிரானது - பெண்ணாசை
   ஈ) கந்தவேள் - சிவபெருமான் **[இ) துறவுக்கு எதிரானது - பெண்ணாசை]**

## பொருந்தாததைத் தேர்க.

1. அ) திருவருட்பா - ஆறுதிருமுறைகள்
   ஆ) வாய்மை - வாழ்வியல் நெறி
   இ) இராமலிங்க அடிகள் - மருதூர்
   ஈ) ஆன்மீக மையம் - கடலூர் **[ஈ) ஆன்மீக மையம் - கடலூர்]**

## சரியான நிறுத்தற்குறியுடைய தொடரினைத் தேர்க.

1. அ) ''மனுமுறை கண்ட வாசகம்'', ''ஜீவகாருண்ய ஒழுக்கம்'' ஆகியவை வள்ளலாரின் உரைநடை நூற்கள்.
   ஆ) ''மனுமுறை கண்ட வாசகம் ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகியவை வள்ளலாரின் உரைநடை நூற்கள்''.
   இ) 'மனுமுறை கண்ட வாசகம்', 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' ஆகியவை வள்ளலாரின் உரைநடை நூற்கள்.
   ஈ) ''மனுமுறை கண்ட வாசகம்'', ஜீவகாருண்ய ஒழுக்கம்; ஆகியவை வள்ளலாரின் உரைநடை நூற்கள்!
   **[இ) 'மனுமுறை கண்ட வாசகம்', 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' ஆகியவை வள்ளலாரின் உரைநடை நூற்கள்]**

2. அ) ஆறுமுகங்களை உடைய தெய்வமாகி மணியே, இத்தகைய சிறப்புகளை நீ எனக்கு அருள்வாயாக.
   ஆ) ''ஆறுமுகங்களை உடைய தெய்வமாகி மணியே; இத்தகைய சிறப்புகளை நீ எனக்கு அருள்வாயாக''
   இ) 'ஆறுமுகங்களை உடைய தெய்வமாகி மணியே; இத்தகைய சிறப்புகளை நீ எனக்கு அருள்வாயாக'.
   ஈ) ஆறுமுகங்களை உடைய தெய்வமாகி மணியே, இத்தகைய சிறப்புகளை நீ எனக்கு அருள்வாயாக!
   **[அ) ஆறுமுகங்களை உடைய தெய்வமாகி மணியே, இத்தகைய சிறப்புகளை நீ எனக்கு அருள்வாயாக]**

## பொருத்துக.

1. அ) கந்தகோட்டம் - 1. வஞ்சகர்
   ஆ) புறம்பேசுபவர் - 2. ஜீவகாருண்ய ஒழுக்கம்
   இ) ஆறுமுகன் - 3. சென்னை
   ஈ) உரைநடைநூல் - 4. முருகப்பெருமான்

   அ) 3 1 4 2 ஆ) 4 2 3 1 இ) 2 3 1 4 ஈ) 1 4 3 2 **[அ) 3 1 4 2]**

## குறுவினா

1. **இராமலிங்க அடிகளார் எதனை மறக்க வேண்டுமென கூறுகிறார்?**
   - இராமலிங்க அடிகளார் துறவுக்கு எதிரான பெண்ணாசையை என் மனம் மறக்க வேண்டுமென கூறுகின்றார்.

2. **உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார் பற்றி இராமலிங்க அடிகளார் கூறுவது என்ன?**
   - உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகத் தன்மையுடையவர்களின் உறவு என்னைப் பற்றாதவாறு காக்க வேண்டுமென இராமலிங்க அடிகளார் கூறுகின்றார்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

3. **கந்தகோட்டத்துக் கந்தவேளை இராமலிங்க அடிகள் எவ்வாறு பாடியுள்ளார்?**

- அறச் செயல்கள் செய்கின்றவர்கள் நிறைந்திருக்கும் சென்னையின் கந்தகோட்டத்துத் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கந்தவேளே எனவும், குளிர்ந்த முகத்தோற்றத்தையுடைய தூய மாணிக்க மணி போன்றவனே எனவும், அம்மணிகளுள் அருள் நிறைந்த சைவமணி எனவும் இராமலிங்க அடிகள் பாடியுள்ளார்.

4. **இராமலிங்க அடிகளார் பற்றிக் குறிப்பு எழுதுக.**

- கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் உள்ள மருதூரில் 05.10.1823-இல் இராமையா, சின்னம்மை இணையர்க்கு ஐந்தாவது மகனாக இராமலிங்கர் பிறந்தார். வடலூரில் சத்தியதருமச்சாலையை நிறுவிச் சாதி, மத வேறுபாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார்.
- வாடிய பயிரைக் கண்டபோது வாடிய அவ்வள்ளலின் பாடல்கள் ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் தன்மையுடையவை. இவர் பாடிய ஆறாயிரம் பாடல்களின் திரட்டு, திருவருட்பா என்று அழைக்கப்படுகிறது. இது ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

## சிறுவினா

1. **இராமலிங்க அடிகள் கந்தகோட்டத்து இறைவனிடம் வேண்டுவன யாவை?**

''கந்தகோட்டத்துத் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கந்தவேளே! ஒருநெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர்போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்; உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகர்தம் உறவு என்னைப் பற்றாதவாறு காக்க வேண்டும்; பெருமை சான்ற நினது புகழையே நான் பேச வேண்டும்; பொய் பேசாதிருக்க வேண்டும்; சிறந்த வாழ்வியல் நெறியைப் பின்பற்றுமாறு எனக்கு அருள வேண்டும்; மதமான பேய் என்னை அணுகாதிருக்க வேண்டும்; துறவுக்கு எதிரான பெண்ணாசையை என் மனம் மறக்க வேண்டும்; என்றும் உன்னை மறவாதிருக்க வேண்டும்; மதியும் நின் கருணையாகிய நிதியும் நோயற்ற வாழ்வும் உடையவனாக நான் இருக்க வேண்டும்; ஆறுமுகங்களை உடைய தெய்வமாகிய மணியே, இத்தகைய சிறப்புகளை நீ எனக்கு அருள்வாயாக'' என இராமலிங்க அடிகள் இறைவனிடம் வேண்டுகிறார்.

2. **''பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்க வேண்டும்'' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம்:**

இப்பாடல் வரியானது இராமலிங்க அடிகளார் பாடிய திருவருட்பாவில் ஐந்தாம் திருமுறையில் இடம்பெற்றுள்ள தெய்வமணிமாலை என்னும் பாமாலையின் 8ஆம் பாடலில் இடம்பெற்றுள்ளது.

**பொருள்:**

வள்ளலார் இறைவனிடம் சிறந்த வாழ்வியல் நெறியைப் பின்பற்றி வாழ எனக்கு அருள வேண்டும் என்றும், மதமான பேய் என்னை அணுகாதிருக்க வேண்டும் என்றும் வேண்டுகிறார்.

**விளக்கம்:**

சென்னையின் கந்தகோட்டத்துத் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானிடம் வள்ளலார் வேண்டுகின்றார். அவ்வாறு வேண்டும்போது என் மனமானது எப்போதும் உனது புகழையே பேச வேண்டும். நான் பொய் பேசாமல் இருக்க வேண்டும். என் வாழ்வில் எப்போதும் நான் சிறந்த வாழ்வியல் நெறிகளையே பின்பற்றி வாழ்ந்திட எனக்கு எப்போதும் நீ அருள் புரிய வேண்டும்; என் மனமானது மதம் என்னும் பேயால் சூழாமல் இருக்க வேண்டும். என்னை மதம் என்னும் பேய் எப்போதும் அணுகாமல் நீ காத்தருள வேண்டும் என்று கூறுமிடத்தில் இடம் பெற்றுள்ளது.

## இலக்கணக்குறிப்பு

1. **மலரடி** - உவமைத்தொகை
2. **மறவா** - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்
3. **வளர்தலம்** - வினைத்தொகை

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## உறுப்பிலக்கணம்

1. **நினைக்கின்ற - நினை + க் + கின்று + அ**
   நினை - பகுதி
   க் - சந்தி
   கின்று - நிகழ்கால இடைநிலை
   அ - பெயரெச்ச விகுதி

2. **வைத்து - வை + த் + த் + உ**
   வை - பகுதி
   த் - சந்தி
   த் - இறந்தகால இடைநிலை
   உ - வினையெச்ச விகுதி

3. **பேசுவார் - பேசு + வ் + ஆர் (பெ.ஆ.க-1,4)**
   பேசு - பகுதி
   வ் - எதிர்கால இடைநிலை
   ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

## புணர்ச்சி விதி

1. **உள்ளொன்று - உள் + ஒன்று**
   விதி (1) : ''தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்'' - என்ற விதிப்படி உள்ள் + ஒன்று - என்றாகியது.
   விதி (2) : ''உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'' - என்ற விதிப்படி 'உள்ளொன்று' - என்றானது.

2. **ஒருமையுடன் - ஒருமை + உடன் (பெ.ஆ.க-5)**
   விதி (1) : 'இஈஐ வழி யவ்வும்' - என்ற விதிப்படி ஒருமை + ய் + உடன் என்றாகியது.
   விதி (2) : ''உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'' என்ற விதிப்படி 'ஒருமையுடன்' - என்றானது.

**கவிதைப்பேழை** **தேவாரம்** **- திருஞானசம்பந்தர்**

## பலவுள் தெரிக.

1. **திருமுறைகள் மொத்தம் எத்தனை?**
   அ) பன்னிரண்டு ஆ) பத்து இ) எட்டு ஈ) ஏழு **[அ) பன்னிரண்டு]**

2. **முதல் மூன்று திருமுறைகள் பாடியவர்**
   அ) வள்ளலார் ஆ) பரிமேலழகர் இ) திருஞானசம்பந்தர் ஈ) திருநாவுக்கரசர் **[இ) திருஞானசம்பந்தர்]**

3. **திருமயிலாப்பூர் பதிகம் அமைந்துள்ள திருமுறை**
   அ) ஒன்றாம் ஆ) இரண்டாம் இ) மூன்றாம் ஈ) நான்காம் **[ஆ) இரண்டாம்]**

4. **திருஞானசம்பந்தர் அருளிய பாடல்கள் எவ்வாறு வழங்கப்படுகிறது?**
   அ) ஞான ஒளி ஆ) திருவாசகம் இ) கந்தபுராணம் ஈ) தேவாரம் **[ஈ) தேவாரம்]**

5. **திருவிழாக்கள் நிறைந்த வீதிகளையுடைய பெரிய ஊர்**
   அ) மயிலாப்பூர் ஆ) எழும்பூர் இ) பெரம்பலூர் ஈ) திருவான்மியூர் **[அ) மயிலாப்பூர்]**

6. **மயிலைப் பதிகத்தில் பங்குனி உத்திர விழா கொண்டாடப்படும் தமிழ் மாதம்**
   அ) ஐப்பசி ஆ) மார்கழி இ) தை ஈ) பங்குனி **[ஈ) பங்குனி]**

7. **திருமயிலை, மயிலை என்று அழைக்கப்படும் ஊர்**
   அ) திருவான்மியூர் ஆ) திருவொற்றியூர் இ) மயிலாப்பூர் ஈ) திருவாதவூர் **[இ) மயிலாப்பூர்]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



8. **ஒலிவிழா என்பதன் பொருள்**

அ) ஆரவார விழா ஆ) மலி விழா இ) எழுச்சி விழா ஈ) உத்திர விழா **[அ) ஆரவார விழா]**

9. **'கண்டான்' - இச்சொல்லின் சரியான பகுபத உறுப்பிலக்கணப் பிரிப்பு முறை (ப.ஆ.க-1)**

அ) கண் + ட் + ஆன் ஆ) காண் (கண்) + ட் + ஆன் இ) கண்டு + ஆன் ஈ) காண் + ஆன்

**[ஆ) காண் (கண்) + ட் + ஆன்]**

10. **'அமர்ந்தான்' இச்சொல்லின் சரியான பகுபத உறுப்பிலக்கணப் பிரிப்பு முறை**

அ) அமர்ந்து + ஆன் ஆ) அமர் + ந் + த் + ஆன்

இ) அமர் + த் (ந்) + த் + ஆன் ஈ) அமர் + த் + த் + ஆன் **[இ) அமர் + த் (ந்) + த் + ஆன்]**

11. **'பூம்பாவாய்' - இச்சொல்லில் பயின்று வரும் புணர்ச்சிவிதி**

அ) ஈறுபோதல், இனமிகல் ஆ) தன்னொற்றிரட்டல்

இ) பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும் ஈ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

**[இ) பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும்]**

12. **'நல்லார் மாமயிலை' - மாமயிலை இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு**

அ) பண்புத்தொகை ஆ) உரிச்சொற்றொடர்

இ) வினையாலணையும் பெயர் ஈ) வினைத்தொகை **[ஆ) உரிச்சொற்றொடர்]**

## கூற்று சரியா? தவறா?

1. **கூற்று 1** : முத்துப்பல்லக்கில் தேவாரம் தந்த திருஞானசம்பந்தர் சென்றார்.

**கூற்று 2** : 16-ஆம் நூற்றாண்டு சுவரோவியம் அமைந்த இடம் திருநெல்வேலி.

அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி

இ) கூற்று இரண்டும் சரி ஈ) கூற்று இரண்டும் தவறு **[அ) கூற்று 1 சரி 2 தவறு]**

2. **கூற்று 1** : பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடியது.

**கூற்று 2** : இரண்டாம் திருமுறையில் திருமயிலாப்பூர் பதிகம் இடம் பெற்றுள்ளது.

அ) கூற்று 1 தவறு 2 சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு

இ) கூற்று இரண்டும் சரி ஈ) கூற்று இரண்டும் தவறு **[இ) கூற்று இரண்டும் சரி]**

3. **கூற்று** : திருமயிலை, மயிலை என்று அழைக்கப்படும் ஊர் மயிலாப்பூர்

**காரணம்** : மயிலாப்பூர் மதுரை மாநகரின் ஒரு பகுதி.

அ) கூற்று தவறு காரணம் சரி ஆ) கூற்று சரி காரணம் சரி

இ) கூற்று தவறு காரணம் தவறு ஈ) கூற்று சரி காரணம் தவறு **[ஈ) கூற்று சரி காரணம் தவறு]**

## பொருந்தாததைத் தேர்க.

1. அ) மயிலாப்பூர் - சென்னை

ஆ) திருமுறைகள் - பன்னிரண்டு

இ) திருஞானசம்பந்தர் - தேவாரம்

ஈ) மாசி - ஆரவாரவிழா **[ஈ) மாசி - ஆரவாரவிழா]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## சரியானதைத் தேர்க.

1. அ) மலிவிழா - பயணம்
   ஆ) கலி விழா - எழுச்சிவிழா
   இ) பலி விழா - ஒளி விழா
   ஈ) ஒலி விழா - அமைதி விழா **[ஆ) கலி விழா - எழுச்சிவிழா]**

## பொருத்தமான நிறுத்தற்குறியுடைய தொடரினைத் தேர்க.

1. அ) விழாக்கள் நிறைந்த ஊர் திருமயிலை; 'மயிலை' என்று அழைக்கப்படும் மயிலாப்பூர்.
   ஆ) விழாக்கள் நிறைந்த ஊர் 'திருமயிலை', 'மயிலை' என்று அழைக்கப்படும் மயிலாப்பூர்.
   இ) ''விழாக்கள் நிறைந்த ஊர் திருமயிலை'', 'மயிலை' என்று அழைக்கப்படும் மயிலாப்பூர்.
   ஈ) விழாக்கள் நிறைந்த ஊர் திருமயிலை, மயிலை என்று அழைக்கப்படும் மயிலாப்பூர்.
   **[ஈ) விழாக்கள் நிறைந்த ஊர் திருமயிலை, மயிலை என்று அழைக்கப்படும் மயிலாப்பூர்]**

## பொருத்துக.

1. அ) ஐப்பசி - 1. தைப்பூச விழா
   ஆ) கார்த்திகை - 2. ஓண விழா
   இ) மார்கழி - 3. விளக்குத் திருவிழா
   ஈ) தை - 4. திருவாதிரை விழா
   அ) 1 4 3 2 ஆ) 2 1 3 4 இ) 2 3 4 1 ஈ) 4 3 1 2 **[இ) 2 3 4 1]**

## குறுவினா

1. **பூம்பாவாய் - பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக. (ப.ஆ.க-1,2)**
   பூம்பாவாய் - பூ + பாவாய்
   **விதி :** ''பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும்'' என்னும் விதிப்படி பூ + ம் + பாவாய் - பூம்பாவாய் எனப் புணர்ந்தது.

2. **திருஞானசம்பந்தர் பாடல்களில் விரவிக்கிடப்பன யாவை?**
   - சமுதாயத்தின் பொருளாதார கலை பண்பாட்டு நிலைகள், தமிழுக்கும் வடமொழிக்கும் இருந்த உயர்நிலை, இசை, தத்துவம், சமயக் கோட்பாடுகள் அனைத்தும் சம்பந்தர் பாடல்களில் விரவிக் கிடக்கின்றன.

3. **மயிலைப் பதிகத்தில் காணப்பெறும் விழாக்கள் யாவை?**
   - ஐப்பசி - ஓண விழா
   - கார்த்திகை - விளக்குத் திருவிழா
   - மார்கழி - திருவாதிரை விழா
   - தை - தைப்பூச விழா
   - மாசி - கடலாட்டு விழா
   - பங்குனி - பங்குனி உத்திர விழா



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## சிறுவினா

1. **திருஞானசம்பந்தர் பாடிய திருமயிலாப்பூர் பதிகம் பற்றிக் குறிப்பு எழுதுக.**

பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடிய பாடல்களின் தொகுப்புகளாகும். இவர் பாடிய பாடல் இரண்டாம் திருமுறையில் உள்ள திருமயிலாப்பூர் பதிகத்தில் இடம்பெற்றுள்ளது. இவர் பாடல்கள் இசைப்பாடல்களாகவே திகழ்கின்றன. இப்பாடல்கள் நம்பியாண்டார் நம்பி என்பவரால் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களுக்குத் தேவாரம் என்று பெயர்.

2. **மயிலாப்பூரின் பெருமை மிகுச் சிறப்புகள் யாவை?**

- மடலார்ந்த தெங்கின் மயிலை.
- இருளகற்றும் சோதித் தொன்மயிலை.
- கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம்
- கண்ணார் மயிலைக் கபாலீச்சரம்
- கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம்.
- மங்குல் மதிதவழும் மாடவீதி மயிலாப்பூர்.
- ஊர்திரை வேலை உலாவும் உயர்மயிலை.

3. **''கலிவிழாப் பாடல்செய் பங்குனி உத்திரநாள்**
**ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்'' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம்:**

இப்பாடல் வரியானது திருஞானசம்பந்தர் பாடிய இரண்டாம் திருமுறையில் திருமயிலாப்பூர் பதிகத்தில் இடம் பெற்றுள்ளது.

**பொருள்:**

மயிலை கபாலீச்சரம் என்னும் கோவிலில் வீற்றிருக்கும் இறைவனுக்குப் பூசையிடும் பங்குனி உத்திர ஆரவார விழாவினைக் காணாமல் செல்வது முறையாகுமா?

**விளக்கம்:**

இளம்பெண்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் திருவிழாக்கள் நிறைந்த வீதிகளையுடைய பெரிய ஊர் திருமயிலை. இங்கு எழுச்சிமிகு விழாக்களும் ஆரவார விழாக்களும் நடைபெறும். அப்படி ஆரவாரமாக நடைபெறும் மயிலை கபாலீச்சரம் கோவில் பங்குனி உத்திர ஆரவார விழாவினைக் காணாமல் செல்வது முறையாகுமா? என்று கூறும் இடத்தில் உள்ளது.

## இலக்கணக்குறிப்பு

**மாமயிலை** - உரிச்சொற்றொடர்

## புணர்ச்சி விதி

**பூம்பாவாய் - பூ + பாவாய்**

விதி (1) - 'பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும்' - என்ற விதிப்படி 'பூம்பாவாய்' என்றானது.

## உறுப்பிலக்கணம்

1. **கண்டான் - காண் (கண்) + ட் + ஆன்**

காண் - பகுதி, 'காண்', 'கண்' - எனக்குறுகியது விகாரம்
ட் - இறந்தகால இடைநிலை
ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

2. **அமர்ந்தான் - அமர் + த் (ந்) + த் + ஆன்**

அமர் - பகுதி
த் - சந்தி, த், ந் - ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



கவிதைப்பேழை

# அகநானூறு

- அம்மூவனார்

## பலவுள் தெரிக.

1. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
   அ) அகநானூறு ஆ) தேவாரம் இ) பெரியபுராணம் ஈ) திருவாசகம் **[அ) அகநானூறு]**
2. அகநானூறு களிற்றியானை நிரையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை.
   அ) 100 ஆ) 140 இ) 120 ஈ) 180 **[இ) 120]**
3. அகநானூறு மணிமிடைப் பவளத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை.
   அ) 140 ஆ) 100 இ) 120 ஈ) 180 **[ஈ) 180]**
4. அகநானூறு நித்திலக்கோவையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை.
   அ) 180 ஆ) 100 இ) 120 ஈ) 140 **[ஆ) 100]**
5. நெய்தல் திணை பாடல்களைப் பாடுவதில் வல்லவர்.
   அ) கபிலர் ஆ) பேயனார் இ) அம்மூவனார் ஈ) ஓரம்போகியார் **[இ) அம்மூவனார்]**
6. உப்பு விளையும் களத்தின் பெயர்
   அ) அளம் ஆ) செறு இ) ஞமலி ஈ) பகடு **[அ) அளம்]**
7. பகடு என்பதன் பொருள்
   அ) நாய் ஆ) உப்பு இ) எருது ஈ) மலை **[இ) எருது]**
8. கடலும் கடல்சார்ந்த இடமும்
   அ) நெய்தல் ஆ) மருதம் இ) முல்லை ஈ) பாலை **[அ) நெய்தல்]**
9. அகநானூற்றுக்கு வழங்கும் வேறு பெயர்
   அ) குறிஞ்சிப்பாட்டு ஆ) முல்லைப்பாட்டு இ) நெடுந்தொகை ஈ) புறம் **[இ) நெடுந்தொகை]**
10. அகநானூற்றுப் பாக்களின் அடிவரையறை
    அ) 4 அடிமுதல் 8 அடி வரை ஆ) 9 அடி முதல் 12 அடிவரை
    இ) 7 அடி முதல் 21 அடி வரை ஈ) 13 அடி முதல் 31 அடி வரை
    **[ஈ) 13 அடி முதல் 31 அடி வரை]**
11. 'விளியறி ஞமலி' - ஞமலி என்பதன் பொருள்
    அ) நிலா ஆ) சூரியன் இ) குரங்கு ஈ) நாய் **[ஈ) நாய்]**
12. 'எல்வளை தெளிர்ப்ப வீசி' - எல்வளை என்பதன் பொருள்.
    அ) வளையல் ஆ) எலிவளை இ) ஒளிரும் வளையல் ஈ) ஒலி தரும் வளையல்
    **[இ) ஒளிரும் வளையல்]**
13. 'வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி' - கொள்ளை என்பதன் பொருள்
    அ) திருடியப் பொருள் ஆ) விலை இ) திருட்டு ஈ) வியாபாரம்
    **[ஆ) விலை]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



14. 'மாமூது அள்ளல் அழுந்திய சாக்காட்டு' - 'அள்ளல்' என்பதன் பொருள் என்ன?

அ) எருது ஆ) அழகிய மீன் இ) சோறு ஈ) வணிகர் **[அ) எருது]**

15. 'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடி' - வேட்டம் என்பதன் பொருள் என்ன?

அ) கடல் ஆ) மீன் விற்றல் இ) மீன் பிடித்தல் ஈ) மீன் உலர்த்தல் **[இ) மீன் பிடித்தல்]**

16. 'செய்த' இச்சொல்லின் சரியான பகுபத பிரிப்பு முறை

அ) செய்து + அ ஆ) செய் + த் + த் + அ இ) செய் + த் + அ ஈ) செய் + அ **[இ) செய் + த் + அ]**

17. 'சாற்றி' - இச்சொல்லின் சரியான பகுபத பிரிப்பு முறை

அ) சாற் + றி ஆ) சாற் + இ இ) சாற் + ற் + இ ஈ) சாற்று + இ **[ஈ) சாற்று + இ]**

18. 'பெருங்கடல்' இச்சொல்லில் பயின்றுவரும் புணர்ச்சி விதி

அ) ஈறுபோதல், இனமிகல் ஆ) ஈறுபோதல், தன்னொற்றிரட்டல்

இ) 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'

ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

**[அ) ஈறுபோதல், இனமிகல்]**

19. செறுவின் உழாஅது செய்த - 'உழாஅது' என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு **(ப.ஆ.க-5)**

அ) இன்னிசையளபெடை ஆ) செய்யுளிசையளபெடை

இ) சொல்லிசையளபெடை ஈ) ஒற்றளபெடை **[ஆ) செய்யுளிசையளபெடை]**

20. 'வெரீஇய மதர்கயல்' - 'வெரீஇய' என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு

அ) ஒற்றளபெடை ஆ) செய்யுளிசையளபெடை

இ) இன்னிசையளபெடை ஈ) சொல்லிசையளபெடை **[ஈ) சொல்லிசையளபெடை]**

## கூற்று சரியா? தவறா?

1. **கூற்று 1** : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று அகநானூறு

**கூற்று 2** : அகநானூறு மூன்று பிரிவுகளை உடையது.

அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்ற 1 சரி 2 தவறு

இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி **[ஈ) கூற்று இரண்டும் சரி]**

2. **கூற்று 1** : அகப்பாடல்கள் மட்டுமே பாடியவர்களுள் ஒருவர் அம்மூவனார்.

**கூற்று 2** : நெய்தல் திணை பாடல்களைப் பாடுவதில் வல்லவர் கம்பர்.

அ) கூற்று 1 தவறு 2 சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு

இ) கூற்று இரண்டும் தவறு ஈ) கூற்று இரண்டும் சரி **[ஆ) கூற்று 1 சரி 2 தவறு]**

3. **கூற்று** : உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக் கொள்ள வாரீரோ!

**காரணம்** : பண்டைய தமிழகத்தில் பண்டமாற்று முறையிலே தான் வணிகம் நடைபெற்றது.

அ) கூற்று சரி காரணம் தவறு ஆ) கூற்று தவறு காரணம் சரி

இ) கூற்று தவறு காரணம் தவறு ஈ) கூற்று சரி காரணம் சரி **[ஈ) கூற்று சரி காரணம் சரி]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## பொருந்தாததைத் தேர்க.

1. அ) குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த இடமும்
ஆ) முல்லை - காடும் காடு சார்ந்த இடமும்
இ) மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும்
ஈ) நெய்தல் - மணலும் மணல் சார்ந்த இடமும் **[ஈ) நெய்தல் - மணலும் மணல் சார்ந்த இடமும்]**

2. அ) பகடு - எருது
ஆ) உமணர் - அமணர்
இ) விடர் - மலை வெடிப்பு
ஈ) ஞமலி - நாய் **[ஆ) உமணர் - அமணர்]**

## சரியானதைத் தேர்க.

1. அ) வேட்டம் - உப்பு
ஆ) செறு - கயல்
இ) உமணர் - மீன்
ஈ) பகடு - நாய் **[ஆ) செறு - கயல்]**

2. அ) கதழ்வு - விரைவு
ஆ) மதர்கயல் - அழகிய எருது
இ) பகடு - தலைவன்
ஈ) அள்ளல் - வயல் **[அ) கதழ்வு - விரைவு]**

## சரியான நிறுத்தற்குறியுடைய தொடரினைத் தேர்க.

1. அ) ''உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக் கொள்ள வாரீரோ'' என்று, கூவினாள்.
ஆ) உப்புக்கு மாற்றாக! நெல்லைத் தந்து! உப்பினைப் பெற்றுக் கொள்ள வாரீரோ' என்று கூவினாள்.
இ) 'உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக் கொள்ள வாரீரோ!' என்று கூவினாள்.
ஈ) 'உப்புக்கு மாற்றாக நெல்லைத்' தந்து உப்பினைப் பெற்றுக் கொள்ள வாரீரோ! என்று, கூவினாள்.
**[இ) 'உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக் கொள்ள வாரீரோ!' என்று கூவினாள்]**

2. அ) உப்பு விளையும் களத்திற்கு 'அளம்' என்று பெயர்.
ஆ) 'உப்பு விளையும் களத்திற்கு அளம்! என்று பெயர்.
இ) உப்பு விளையும், களத்திற்கு அளம், என்று பெயர்.
ஈ) உப்பு! விளையும் களத்திற்கு அளம், என்று பெயர். **[அ) உப்பு விளையும் களத்திற்கு 'அளம்' என்று பெயர்]**

## பொருத்துக.

1. **திணை** **பாடியோர்**
அ) குறிஞ்சி - 1. பேயனார்
ஆ) முல்லை - 2. அம்மூவனார்
இ) மருதம் - 3. கபிலர்
ஈ) நெய்தல் - 4. ஓரம்போகியார்
அ) 4 1 3 2 ஆ) 3 2 1 4 இ) 3 1 4 2 ஈ) 2 4 3 1 **[இ) 3 1 4 2]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



2. சொல் பொருள்

அ) புனவன் - 1. சேறு

ஆ) அள்ளல் - 2. விலை

இ) கொள்ளை - 3. மலைவெடிப்பு

ஈ) விடர் - 4. கானவன்

அ) 4 1 2 3 ஆ) 4 2 1 3 இ) 2 3 1 4 ஈ) 2 1 3 4 **[அ) 4 1 2 3]**

## குறுவினா

**1. நெய்தல் நில மக்கள் மேற்கொண்ட தொழில்களைப் பற்றி எழுதுக.**

- நெய்தல் நில மக்கள், பெரிய கடல் பரப்பில் மீன் வேட்டையாடுவர். நிலப்பரப்பில் உப்பளங்களில் உழவு செய்யாமலே உப்பு விளைவிப்பர். அந்த வெண்ணிறக் கல் உப்பை, உப்பு வணிகர் தங்களது வண்டியில் ஏற்றித் தொலைவில் உள்ள ஊர்களில் விற்பனை செய்வர்.

**2. உப்பங்கழி (அ) உப்பளம் என்றால் என்ன? (ப.ஆ.க-2)**

- கடலுக்கு அருகில் நிலத்தால் பிரிக்கப்பட்டு மணல் திட்டுகளில் கடல்நீர் தேங்கியிருக்கும் பகுதிக்கு உப்பங்கழி எனப்பெயர்.

**3. அகநானூறு எத்தனை பிரிவுகளாய் உள்ளது?**

- அகநானூறு மூன்று பிரிவுகளாய் 400 பாடல்களைக் கொண்டுள்ளது. அப்பிரிவுகளுள் முதற்பகுதியான களிற்றியானை நிரை, முதல் 120 பாடல்களைக் கொண்டது; இரண்டாம் பகுதியான மணிமிடை பவளம், அடுத்த 180 பாடல்களைக் கொண்டது; மூன்றாம் பகுதியான நித்திலக்கோவை, கடைசி 100 பாடல்களைக் கொண்டது.

**4. அகநானூற்றுப் பாடல்களின் எண்ணிற்கு ஏற்ப திணை அமைப்பு முறையை விளக்குக.**

| திணை | பாடல் வரிசை | எண்ணிக்கை |
|---|---|---|
| பாலை | 1, 3, 5, 7, 9................ | 200 |
| குறிஞ்சி | 2, 8, 12, 18, 22........... | 80 |
| முல்லை | 4, 14, 24, 34, 44.............. | 40 |
| மருதம் | 6, 16, 26, 36, 46.......... | 40 |
| நெய்தல் | 10, 20, 30, 40, 50........... | 40 |

**5. அம்மூவனார் உணர்த்தும் நம் பாடப்பகுதி நெய்தல் திணைப்பாடலின் உள்ளுறை என்ன?**

- 'கருஞ்சேற்றில் சிக்கிய வண்டியை இழுக்கும் எருதுகளின் துன்பத்தைத் தலைவியின் தந்தை போக்கியது போல, தலைவியைக் கண்டதால் தனக்கு ஏற்பட்ட துன்பத்தை நீ போக்குவதற்கு உரியவன்' என்று தலைவன் பாங்கனிடம் கூறினான்.
- எருது தலைவனுக்கும், தந்தை பாங்கனுக்கும், உப்பின் எடையால் வருந்தும் நிலையைத் தலைவனின் காதல் வருத்தத்திற்கும் உள்ளுறையாக வைக்கப்பட்டுப் பாடல் பாடப்பட்டுள்ளது.

**6. அம்மூவனார் பாடிய நம் பாடப்பகுதி நெய்தல் திணைப் பாடலில் தலைமகன் பாங்கற்கு (தோழற்கு) உரைத்தது என்ன?**

- உப்பு வணிகம் செய்ய வந்த உமணர் ஒருவரின் மகள், 'உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக் கொள்ளுங்கள்' என்று கூவினாள். அவன் குரலைக் கேட்டு நாய் குரைத்தது. இதனால் அச்சம் கொண்ட அவள் கண்கள் மருண்டன. அம்மருண்ட கண்கள் எனக்குக் காதல் துன்பத்தைத் தந்தது.
- 'கருஞ்சேற்றில் சிக்கிய வண்டியை இழுக்கும் எருதுக்கு அவள் தந்தை உதவியது போல, என் துன்பத்தையும் நீ நீக்குவாயாக!' என்று தலைமகன் பாங்கனிடம் கூறினான்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



7. **அம்மூவனார் பாடிய அகநானூற்றுப் பாடலில் காணப்படும் உவமை யாவை?**

**உவமை:**

'மதர்கயல் மலைப்பின் அன்ன'

**விளக்கம்:**

தெருவில் புதுக்குரல் கேட்டு வீட்டில் உள்ள நாய் குரைத்தது. அதைக்கேட்ட அப்பெண்ணின் கண்கள் இரண்டும் அச்சத்தால் மீன்கள் தம்முள் போர் செய்வது போல் மருண்டன.

---

8. **உமணப்பெண்ணின் தோற்றம் பற்றிக் கூறுக. (பெ.ஆ.க-1)**

- உமணர் ஒருவரின் மகள், அழகும் இளமையும் வாய்ந்தவள்.
- தன் கைகளில் அணிந்திருக்கும் அழகிய வளையல்கள் ஒலிக்கத் தெருவில் கைகளை வீசி நடந்தாள்.
- ''உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக் கொள்ள வாருங்கள்'', என்று கூவினாள்.
- தெருவில் புதுக்குரல் கேட்டதால் வீட்டில் உள்ள நாய் குரைத்தது.
- இதனை எதிர்பாராத அப்பெண்ணின் கண்கள் இரண்டும் அச்சத்தால் மீன்கள் தம்முள் போர் செய்வது போல மருண்டன.

---

## சிறுவினா

1. **'மதர் கயல் மலைப்பின் அன்னகண் எனக்கு' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம்:**

இப்பாடல் வரி அம்மூவனார் பாடிய அகநானூற்று நூலில் உள்ள நெய்தல் திணைப்பாடலில் (140) உள்ளது.

**பொருள்:**

உப்பு விற்பனைக்காக வந்த உமணர் மகள் உப்பினை விற்பதற்காகக் கூவினாள் புதுக்குரலினைக் கேட்ட நாய் குரைத்தது. அதனை எதிர்பாராத அப்பெண்ணின் கண்கள் இரண்டும் அச்சத்தில் மீன்கள் தம்முள் போர் செய்வது போல் மருண்டன.

**விளக்கம்:**

நிலப்பரப்பில் உப்பளங்களில் உழவு செய்யாமலே உப்பு விளைவித்து அதனைப் பண்டமாற்று முறைக்காக விற்பனை செய்ய தொலைவில் உள்ள ஊர்களுக்குக் கொண்டு செல்வர். அப்படி விற்பனைக்காகக் கொண்டு சென்ற உமணர் மகள் ஒருத்தி, ''உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக் கொள்ள வாரீரோ!'' என்று கூவினாள். அவள் கூவுவதைக் கேட்டு வீட்டில் உள்ள நாய் இது வேற்றுக் குரல் என்று குரைத்தது. அதனை எதிர்பாராத அப்பெண்ணின் கண்கள் இரண்டும் அச்சத்தால் மீன்கள் தம்முள் போர் செய்வது போல் மருண்டன எனக் கூறும் இடத்தில் இவ்வரி இடம் பெற்றுள்ளது.

---

## நெடுவினா

1. **தலைமகன் பாங்கனுக்குச் சொல்லும் செய்தியாக அம்மூவனார் கூறும் அகநானூற்றுப் பாடலின் கருத்தினைத் தொகுத்து எழுதுக. (மார்ச்.20)**

**நெய்தல் நில மக்கள்:**

- நெய்தல் நிலத்தில் வாழ்கின்ற பரதவர், பெரிய கடல் பரப்பில் மீன் வேட்டையாடுவர்.
- நிலங்களில் உப்பளம் ஏற்படுத்தி உழாமலே உப்பு விளைவிப்பர்.
- வெண்ணிறக் கல் உப்பை, உப்பு வணிகர் தங்களது வண்டியில் எருதுகளைப் பூட்டி, அவ்வெருதுகளை விரட்ட தாழ்கோல் கொண்டு, விற்பனைக்காகக் கோடைக் காலத்தில் வெப்பத்தால் பிளவுபட்ட குன்றைக் கடந்து செல்வர்.
- தங்கள் நிலத்தைக் கடந்து தொலைவில் உள்ள ஊர்களில் விற்பனை செய்வர்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**பண்டமாற்று வணிகம்:**

- உமணர் ஒருவரின் மகள், அழகும் இளமையும் வாய்ந்தவள்.
- தன் கைகளில் அணிந்திருக்கும் அழகிய வளையல்கள் ஒலிக்கத் தெருவில் கைகளை வீசி நடந்தாள்.
- ''உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக் கொள்ள வாருங்கள்'', என்று கூவினாள்.
- தெருவில் புதுக்குரல் கேட்டதால் வீட்டில் உள்ள நாய் குரைத்தது.
- இதனை எதிர்பாராத அப்பெண்ணின் கண்கள் இரண்டும் அச்சத்தால் மீன்கள் தம்முள் போர் செய்வது போல மருண்டன.

**தலைவனின் கூற்று:**

- மருண்ட தலைவியின் கண்களைக் கண்ட தலைவன் அவள் மீது காதல் கொண்டு வருத்தமுற்றான்.
- புதிதாகத் தினைப்புனம் அமைக்க கானவர் (வேடவர்) பழைய புனத்தைத் தீயிட்டதால் உண்டான கரும்புகை போன்ற கருஞ்சேற்றில் உமணரின் வண்டி சிக்கிக் கொண்டது.
- அவ்வண்டியைச் சேற்றிலிருந்து துன்பத்துடன் மீட்க முயன்ற எருதிற்குத் தலைவியின் தந்தை உதவினார்.
- அந்த எருது அடைந்த துன்பம் போல, அவள் கண்களால் நானும் துன்பம் அடைந்தேன்.
- அவள் தந்தை எருதின் துன்பத்தை விலக்கியது போல, ''நீயும் எனக்கு உதவ வேண்டும்'' என்று தலைவன் பாங்கனிடம் கூறினான்.

## இலக்கணக்குறிப்பு

1. **பெருங்கடல்** - பண்புத்தொகை
2. **உழாஅது** - செய்யுளிசை அளபெடை
3. **வெரீஇய** - சொல்லிசை அளபெடை

## உறுப்பிலக்கணம்

1. **செய்த - செய் + த் + அ (பெ.ஆ.க-5)**

செய் - பகுதி
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

2. **சாற்றி - சாற்று + இ**

சாற்று - பகுதி
இ - வினையெச்ச விகுதி

## புணர்ச்சி விதி

1. **பெருங்கடல்- பெருமை + கடல் (பெ.ஆ.க-5)**

விதி (i) 'ஈறுபோதல்' - என்ற விதிப்படி பெரு + கடல் என்றாகியது.

விதி (ii) 'இனமிகல்' என்ற விதிப்படி 'பெருங்கடல்' என்றானது.

2. **பூங்கோதை - பூ + கோதை (பெ.ஆ.க-5)**

விதி (i) பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும் என்ற விதிப்படி **'பூங்கோதை'** என்றானது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



விரிவானம் **தலைக்குளம்** - தோப்பில் முகமது மீரான்

## பலவுள் தெரிக.

1. ‘தலைக்குளம்’ என்ற சிறுகதையின் ஆசிரியர்
அ) தோப்பில் முகமது மீரான் ஆ) தி.ஜானகிராமன்
இ) சண்முகசுந்தரம் ஈ) கி.ராஜநாராயணன் **[அ) தோப்பில் முகமது மீரான்]**

2. தோப்பில் முகமது மீரான் எழுதிய ‘தலைக்குளம்’ சிறுகதை இடம் பெற்ற தொகுப்பு.
அ) தஞ்சைக் கதைகள் ஆ) பூமணி சிறுகதைகள் இ) ஒரு குட்டித்தீவின் வரைபடம் ஈ) உரிமைத்தாகம்
**[இ) ஒரு குட்டித்தீவின் வரைபடம்]**

3. தோப்பில் முகமது மீரான் எழுதி சாகித்திய அகாதெமி விருது பெற்ற புதினம்
அ) அஞ்ஞாடி ஆ) துறைமுகம் இ) கூனன் தோப்பு ஈ) சாய்வு நாற்காலி
**[ஈ) சாய்வு நாற்காலி]**

4. தோப்பில் முகமது மீரான் சாகித்திய அகாதெமி விருது பெற்ற ஆண்டு
அ) 1995 ஆ) 1997 இ) 1996 ஈ) 1998 **[ஆ) 1997]**

5. நெல்லை வட்டாரத் தமிழில் எழுதியவர்
அ) புதுமைப்பித்தன் ஆ) முகமது மீரான் இ) சண்முக சுந்தரம் ஈ) தி.ஜானகிராமன்
**[அ) புதுமைப்பித்தன்]**

6. வட்டார எழுத்திற்கு, ‘கரிசல் இலக்கியம்’ என்று பெயரிட்டவர்.
அ) கண்ணதாசன் ஆ) ஆறுமுகம் இ) கி.ராஜநாராயணன் ஈ) நடராசன்
**[இ) கி.ராஜநாராயணன்]**

7. ‘தலைக்குளம்’ கதையில் பத்திரிகையில் விளம்பரம் கொடுக்க யோசனை கூறியவர்
அ) உறவினர் ஆ) இளைய மகள் இ) இரண்டாவது மகன் ஈ) மூத்த மகன் **[ஈ) மூத்த மகன்]**

8. தோப்பில் முகமது மீரான் எழுதிய தமிழக அரசின் விருது பெற்ற நூல்
அ) குட்டித்தீவு ஆ) துறைமுகம் இ) சாய்வு நாற்காலி ஈ) தோப்பில் **[ஆ) துறைமுகம்]**

9. கோவில்பட்டி வட்டாரத் தமிழில் எழுதியவர்
அ) புதுமைப்பித்தன் ஆ) இளந்திரையன் இ) கி.ராஜநாராயணன் ஈ) முகமது அமீர்
**[இ) கி.ராஜநாராயணன்]**

10. கோவைத் தமிழில் சிறுகதை எழுதியவர்
அ) புதுமைப்பித்தன் ஆ) இளந்திரையன் இ) சண்முக சுந்தரம் ஈ) ஜெயகாந்தன்
**[இ) சண்முக சுந்தரம்]**

11. சென்னை வட்டாரத் தமிழில் எழுதியவர்
அ) புதுமைப்பித்தன் ஆ) தோப்பில் முகமது மீரான் இ) ஜெயகாந்தன் ஈ) வல்லிக்கண்ணன்
**[இ) ஜெயகாந்தன்]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



12. தோப்பில் முகமது மீரான் இறந்த நாள்

அ) மே 10, 2019 ஆ) மே 12, 2019 இ) மே14, 2019 ஈ) மே15, 2019

**[அ) மே 10, 2019]**

## கூற்று சரியா? தவறா?

1. **கூற்று 1** : தோப்பில் முகமது மீரான் கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்ப்பட்டணத்தில் பிறந்தவர்.
   **கூற்று 2** : தோப்பில் முகமது மீரான் பிறந்த ஆண்டு - 1945
   அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி
   இ) கூற்று இரண்டும் சரி ஈ) கூற்று இரண்டும் தவறு **[அ) கூற்று 1 சரி 2 தவறு]**

2. **கூற்று 1** : புதுமைப்பித்தன் நெல்லை வட்டாரத் தமிழில் சிறுகதை எழுதியவர்.
   **கூற்று 2** : ஜெயகாந்தன் சென்னை வட்டாரத் தமிழில் சிறுகதை எழுதியவர்.
   அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி
   இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று இரண்டும் சரி **[ஈ) கூற்று இரண்டும் சரி]**

3. **கூற்று** : கிராமங்கள் மக்கள் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்ற இடம்.
   **காரணம்** : இயற்கையோடு இணைந்து வாழ்கின்றனர்.
   அ) கூற்று சரி காரணம் தவறு ஆ) கூற்று சரி காரணம் சரி
   இ) கூற்று தவறு காரணம் தவறு ஈ) கூற்று தவறு காரணம் சரி **[ஆ) கூற்று சரி காரணம் சரி]**

## பொருந்தாததைத் தேர்க.

1. அ) தலைக்குளம் - ஜெயகாந்தன்
   ஆ) கன்னியாகுமரி - மாவட்டம்
   இ) 1997-ஆம் ஆண்டு - சாய்வு நாற்காலி
   ஈ) வட்டாரச் சிறுகதை - தஞ்சைக் கதைகள் **[அ) தலைக்குளம் - ஜெயகாந்தன்]**

## சரியானதைத் தேர்க.

1. அ) உம்மா - அப்பா
   ஆ) வாப்பா - அம்மா
   இ) ஏச்சு - திட்டுதல்
   ஈ) கடவு - நகர்தல் **[இ) ஏச்சு - திட்டுதல்]**

## சரியான நிறுத்தற்குறியுடைய தொடரினைத் தேர்க.

1. அ) நான் பிறந்த மண்ணுடா, என் அப்பன் வச்ச வீடு! சும்மா கிடக்குடா, அந்தத் தண்ணீ குடிச்சுதான் வளர்ந்தேன்.
   ஆ) ''நான் பிறந்த மண்ணுடா, என் அப்பன் வச்ச வீடு! சும்மா கிடக்குடா, அந்தத் தண்ணீ குடிச்சுதான் வளர்ந்தேன்''.
   இ) நான் பிறந்த மண்ணுடா! என் அப்பன் வச்ச வீடு, சும்மா கிடக்குடா. அந்தத் தண்ணீ குடிச்சுதான் வளர்ந்தேன்.
   ஈ) நான், பிறந்த மண்ணுடா! என் அப்பன் வச்ச வீடு சும்மா கிடக்குடா, அந்தத் தண்ணீ குடிச்சுதான் வளர்ந்தேன்.

**[ஆ) ''நான் பிறந்த மண்ணுடா, என் அப்பன் வச்ச வீடு! சும்மா கிடக்குடா, அந்தத் தண்ணீ குடிச்சுதான் வளர்ந்தேன்'']**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



2. அ) வீட்டைப் பார்க்கலாமா; பார்க்கலாம்; பழைய நாலு கட்டு வீடு, கொல்லம் ஓடு; கிணறு உண்டு.
ஆ) வீட்டைப் பார்க்கலாமா? பார்க்கலாம் பழைய நாலு கட்டு வீடு கொல்லம் ஓடு கிணறு உண்டு.
இ) ''வீட்டைப் பார்க்கலாமா?'' ''பார்க்கலாம், பழைய நாலு கட்டு வீடு. கொல்லம் ஓடு, கிணறு உண்டு.''
ஈ) 'வீட்டைப் பார்க்கலாமா பார்க்கலாம் பழைய நாலு கட்டு வீடு' கொல்லம் ஓடு; கிணறு உண்டு!

**[இ) ''வீட்டைப் பார்க்கலாமா?'' ''பார்க்கலாம், பழைய நாலு கட்டு வீடு. கொல்லம் ஓடு, கிணறு உண்டு.'']**

3. அ) ''நான் பஸ்ஸில் வரேன் சொல்லி முடிக்குமுன் கார் புறப்பட்டது.''
ஆ) 'நான் பஸ்ஸில் வரேன் சொல்லி முடிக்குமுன் கார் புறப்பட்டது.'
இ) ''நான் பஸ்ஸில் வரேன்'' சொல்லி முடிக்குமுன் கார் புறப்பட்டது!
ஈ) ''நான் பஸ்ஸில் வரேன்'' சொல்லி முடிக்குமுன் கார் புறப்பட்டது.

**[ஈ) ''நான் பஸ்ஸில் வரேன்'' சொல்லி முடிக்குமுன் கார் புறப்பட்டது]**

4. அ) அத வித்துத் தள்ளுங்க வாப்பா; இந்த நாகரிக காலத்திலே ஓடு போட்ட மரவூட்டுல ஆருதங்குவா.
ஆ) ''அத வித்துத் தள்ளுங்க வாப்பா. இந்த நாகரிக காலத்திலே ஓடு போட்ட மரவூட்டுல ஆருதங்குவா?''
இ) அத வித்துத் தள்ளுங்க வாப்பா; இந்த நாகரிக காலத்திலே ஓடு போட்ட மரவூட்டுல ஆருதங்குவா.
ஈ) 'அத வித்துத் தள்ளுங்க வாப்பா இந்த நாகரிக காலத்திலே ஓடு போட்ட மரவூட்டுல ஆருதங்குவா.'

**[ஆ) ''அத வித்துத் தள்ளுங்க வாப்பா. இந்த நாகரிக காலத்திலே ஓடு போட்ட மரவூட்டுல ஆருதங்குவா?'']**

## பொருத்துக.

| **ஆசிரியர்** | | **வட்டாரத் தமிழ்** |
|---|---|---|
| 1. அ) புதுமைப்பித்தன் | - | 1. கோவை |
| ஆ) ஜெயகாந்தன் | - | 2. தஞ்சை |
| இ) சண்முக சுந்தரம் | - | 3. நெல்லை |
| ஈ) தி.ஜானகிராமன் | - | 4. சென்னை |

அ) 1 4 2 3 ஆ) 3 4 1 2 இ) 2 3 1 4 ஈ) 4 1 2 3 **[ஆ) 3 4 1 2]**

## விரிவான விடையளி.

1. **தலைக்குளம் சிறுகதையின் மூலம் நகரமயமாதலினால் ஏற்படும் பாதிப்புகளை எடுத்துரைக்க. (பெ.ஆ.க-5)**

இந்தியாவின் வாழ்வாதாரமாக விளங்கும் கிராமங்கள் இன்று நகரமயமாவதால் பெரும் பாதிப்புகளை அடைகின்றன. அழகான இயற்கை சூழலோடு விளங்கும் கிராமங்கள் தங்கள் அழகினை இழப்பதோடு தங்களது அடையாளங்களையும் இழ்ந்து விடுகின்றன. அவ்வாறு தனது வடிவழகை நகரமயமாவதன் மூலம் இழந்த கிராமமே தலைக்குளம்.

**அடையாளத்தை இழந்த தலைக்குளம்:**

பெரிய கண்மாய், புன் மூட்டு அடி, குளம், வற்றாத கிணறு, எங்குப் பார்த்தாலும் பச்சை பசேல் என்ற வயல்வெளி இப்படி இயற்கையாய் இருந்த தலைக்குளம் நகரமயமாவதன் மூலம் தன் பொலிவைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து மொத்தத்தில் இளம்வயதில் தான் கண்ட எந்த ஒரு இயற்கை சூழலும் இல்லாமல், கண்மாயைத் தேடும் நிலைக்கு வீட்டை விற்க வருபவர் தள்ளப்படுகிறார். ஆசை ஆசையாய் நான்கு அடுக்கு வீடு, மழை தண்ணீர் உள்ளே விழும் அழகிய வீடு என்று தான் ஆசை ஆசையாய் வாழ்ந்த வீடு மட்டுமல்ல. தான் ஆசை ஆசையாய் விளையாடிய தலைக்குளம் கிராமமும் நகரமயமாவதன் மூலம் சிதிலமடைந்துள்ளதை இச்சிறுகதை மூலம் அறியலாம்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**நகரமயமாவதால் நளினம் இழந்த தலைக்குளம்:**

தலைக்குளத்தின் கதைகள், கன்னியார் கோண ஏலா பற்றிய கதைகள், ஞானியார் நீரோடை, வீட்டில் ஈட்டி மரத்தால் செய்த நிலைகள், ருசி மிகுந்த தண்ணீர், எப்பவும் தண்ணீர் ஓடும் வாய்க்கால், எவ்வளவு கற்பனையோடு வாழ்ந்தார். கிராமத்தை விட்டு நூறு கிலோமீட்டர் தொலைவில் இருந்தாலும், இன்னும் தன் கிராமம் அதே மண் வாசனையுடன் இருக்கும் என்று நம்பியே அவர் அந்த நூறு கிலோ மீட்டர் பயணத்தையும் மேற்கொண்டார். கிராமத்தை அடைந்து தனது வீட்டைப் பார்த்தவருக்கு ஏற்பட்டதோ ஏமாற்றம், அதன்பின் தன் மனதில் அடுக்கடுக்காய் கற்பனையோடு தூரத்தில் பார்த்தவருக்கு நகரமயமாதலின் வெளிப்பாடாக எழுப்பப்பட்டிருந்த இருமாடிக்கட்டிடம், புன்னமூட்டடி, கன்னியார்கோணம் ஏலா, அரசகுளம் எல்லாம் இப்போது அழகான குடியிருப்புகளாக மாறி இருந்ததை அவரால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை.

**தாகம் தீர்க்காத நகரமயமாதல்:**

தலைக்குளத்தில் ஒரு முங்கு முங்கினாலே உடம்பெல்லாம் குளிர்ச்சியால் சிலிர்த்து போகும். நாடி நரம்புகள் கலந்து தெறித்துவிடும் அளவிற்குக் குளிர்ச்சியாக இருக்கும். கோடைக் காலத்தில் கூட வீட்டுக் கிணற்றில் தண்ணீர் வற்றியதில்லை. இறைக்க இறைக்க பொங்கி வரும் கிணறு. மகன்களோடு நூறு கிலோமீட்டர் தொலைவில் தங்கியிருந்தவர் தினமும் குடிக்கும் மினரல் வாட்டரை நினைத்து வருந்துவார். எவ்வளவு சுவையாக இருக்கும் தலைக்குளத்தில் உள்ள தண்ணீர், அதை நினைத்து வருந்துவார். ஆனால், இன்று தலைக்குளம் நகரமயமாகியதால் குளமும் இல்லை. கிணற்றில் நீருமில்லை. தாகம் எடுக்க மூலையில் இருந்த பெட்டிக் கடையிலிருந்து ஒரு பாட்டில் பிஸ்லேரி வாட்டர் வாங்கிக் குடிக்கும் அளவிற்கு நகரமயமாதல் தலைக்குளம் கிராமத்தை மாற்றியிருக்கிறது.

இவ்வாறாக, இயற்கை வளங்களோடு இருந்த தலைக்குளம் கிராமம் நகரமயமாவதன் மூலம் தன்னுடைய அடையாளத்தை இழந்து நிற்கின்றது.

---

## இனிக்கும் இலக்கணம் — படிமம்

### பலவுள் தெரிக.

1. **தாழை மலர் எதுபோன்று பூத்துள்ளதாகச் சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.**
அ) கிளி ஆ) புறா இ) அன்னம் ஈ) மயில் **[இ) அன்னம்]**

2. **உவமைகளை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்.**
அ) 2 ஆ 3 இ) 4 ஈ) இவற்றில் ஏதுமில்லை **[அ) 2]**

3. **காட்சி தரும் உவமைகளைப் பெரும்பாலும் கொண்டுள்ள இலக்கியங்கள்**
அ) பக்தி இலக்கியம் ஆ) வரலாற்று இலக்கியம்
இ) சங்க இலக்கியம் ஈ) காப்பிய இலக்கியம் **[இ) சங்க இலக்கியம்]**

### கூற்று சரியா? தவறா?

1. **கூற்று 1** : காட்சிக்குத் தெளிவு தருவதும் கருத்தைக் காட்சிப்படுத்துவதும் படிமத்தின் பணிகள்.
**கூற்று 2** : படிமம் என்றால் காட்சி என்பது பொருள்.
அ) கூற்று இரண்டும் தவறு ஆ) கூற்று 1 சரி 2 தவறு
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி **[ஈ) கூற்று இரண்டும் சரி]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



2. **கூற்று 1** : உவமை, உருவகம் போல படிமமும் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.
**கூற்று 2** : எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்தினை விளக்கும்.
அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி
இ) கூற்று இரண்டும் சரி ஈ) கூற்று இரண்டும் தவறு **[இ) கூற்று இரண்டும் சரி]**

3. **கூற்று 1** : உவமை கருத்துத் தன்மையாலும் அமையும்.
**கூற்று 2** : படிமம் காட்சித் தன்மையால் மட்டுமே அமையும்.
அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 தவறு 2 சரி
இ) கூற்று இரண்டும் தவறு ஈ) கூற்று இரண்டும் சரி **[ஆ) கூற்று 1 தவறு 2 சரி]**

4. **கூற்று** : படிமம் என்றால் காட்சி என்பது பொருள்
**காரணம்** : விளக்க வந்த ஒரு காட்சியையோ, கருத்தையோ காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தி, படிமம் எனப்படும்.
அ) கூற்று சரி காரணம் தவறு ஆ) கூற்று தவறு காரணம் சரி
இ) கூற்று சரி காரணம் சரி ஈ) கூற்று தவறு காரணம் சரி **[இ) கூற்று சரி காரணம் சரி]**

## பொருந்தாததைத் தேர்க.

1. அ) நல்லியக்கோடன் - ஒய்மா நாடு
ஆ) தாழை மலர் - அன்னம்
இ) செருந்தி மலர் - வைரம்
ஈ) கழிமுள்ளிப்பூ - நீலமணி **[இ) செருந்தி மலர் - வைரம்]**

## சரியானதைத் தேர்க.

1. அ) படிமம் என்றால் அது கருத்தை விளக்கும்.
ஆ) படிமத்தை உருவாக்க உவமை, உருவகம், சொல்லும் முறை போன்றவை பயன்படுகின்றன.
இ) சங்க இலக்கியங்களில் படிமங்கள் பயன்படுத்தப்படவில்லை.
ஈ) படிமம் வினை, பயன் இவற்றின் அடிப்படையில் மட்டுமே தோன்றும்.
**[ஆ) படிமத்தை உருவாக்க உவமை, உருவகம், சொல்லும் முறை போன்றவை பயன்படுகின்றன.]**

## பொருத்தமான நிறுத்தற்குறியுடைய தொடரினைத் தேர்க.

1. அ) 'விளக்க வந்த ஒரு காட்சியையோ கருத்தையோ காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தி படிமம்'.
ஆ) விளக்க வந்த ஒரு காட்சியையோ; கருத்தையோ; காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தி, படிமம்.
இ) ''விளக்க வந்த ஒரு காட்சியையோ, கருத்தையோ, காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தி, படிமம்.
ஈ) விளக்க வந்த ஒரு காட்சியையோ, கருத்தையோ காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தி, படிமம்.
**[ஈ) விளக்க வந்த ஒரு காட்சியையோ, கருத்தையோ காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தி, படிமம்]**

2. அ) ''படிமம் உவமையிலும் அமையும் உவமையின்றிப் பிறவற்றாலும் அமையும்''.
ஆ) படிமம் உவமையிலும் அமையும்; உவமையின்றிப் பிறவற்றாலும் அமையும்.
இ) 'படிமம் உவமையிலும் அமையும் உவமையின்றிப் பிறவற்றாலும் அமையும்'.
ஈ) படிமம் உவமையிலும் அமையும், உவமையின்றிப் பிறவற்றாலும் அமையும்!
**[ஆ) படிமம் உவமையிலும் அமையும்; உவமையின்றிப் பிறவற்றாலும் அமையும்.]**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## பொருத்தித் தேர்க.

| | பூ | | உவமைப்பொருள் |
|---|---|---|---|
| 1. | அ) தாழை மலர் | - | 1. முத்துகள் |
| | ஆ) புன்னை அரும்பு | - | 2. பொன் |
| | இ) கழிமுள்ளிப்பூ | - | 3. அன்னம் |
| | ஈ) செருந்தி | - | 4. நீலமணி |

அ) 2 4 3 1 ஆ) 3 1 2 4 இ) 3 1 4 2 ஈ) 3 2 4 1 **[இ) 3 1 4 2]**

## குறுவினா

1. **''மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது'' - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?**
**''மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது''**
   - மாந்தோப்பு, பருவகாலத்தின் அழகு தோன்ற இருப்பதை இப்படிமம் உணர்த்துகிறது. பூக்களும் தளிர்களுமாகப் பட்டாடையை மரம் போர்த்தியிருப்பதாகக் காட்டி அதைப் பெண்ணாகக் காட்சிப்படுத்துகிறது.
   - இக்கவிதை, உவமை உருவகமின்றி பட்டாடை உடுத்திய பெண்ணின் தோற்றத்தை அல்லது பூத்திருக்கும் மரத்தின் தோற்றத்தோடு இணைக்கிறது. உள்ளார்ந்த ஒப்பீடு இதில் இருக்கிறது. இதில் மெய்ப்படிமம் வெளிப்படக் காணலாம்.

2. **படிமம் என்றால் என்ன?**
   - படிமம் என்றால் காட்சி என்பது பொருள். விளக்க வந்த ஒரு காட்சியையோ, கருத்தையோ காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தி, படிமம் எனப்படும்.

3. **படிமத்தின் பணிகள் யாவை?**
   - காட்சிக்குத் தெளிவு தருவதும் கருத்தைக் காட்சிப்படுத்துவதும் படிமத்தின் பணிகளாகும்.

4. **படிமம் எவ்வாறு காட்சிப்படுத்தப்படுகிறது?**
   - உவமை, உருவகம் போல படிமமும் வினை, பயன், மெய் (வடிவம்), உரு (நிறம்) ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும் என்பர். எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்தினை விளக்கும் ஓர் உத்தியாகவே பயன்படுத்தப்படுகிறது.

5. **வினைப்படிமம் எவ்வாறு காட்சிப்படுத்தப்படுகிறது?**

   கட்டில் நிணக்கும் இழிசினன் கையது
   போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று மாதோ;
   ஊர்கொள வந்த பொருநனொடு
   ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே!

   - ''கட்டிலைப் பின்னுகின்ற ஒருவனின் கை ஊசி எவ்வளவு வேகமாக வாரைச் செலுத்துமோ, அவ்வளவு விரைவானது. ஊரைக் கைப்பற்ற எண்ணி வந்த வீரனுடன், இந்நெடுந்தகை நடத்திய பெரும்போர்'', என வினையைக் காட்சிப்படுத்துகிறது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

6. **பயன் படிமம் எவ்வாறு காட்சிப்படுத்தப்படுகிறது?**

நோம் என் நெஞ்சே! நோம் என் நெஞ்சே!
புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்கு
இனிய செய்தநம் காதலர்
இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே!

- இனிய செய்தல், இன்னா செய்தல் என்ற பயன்களை (இனிய) நெருஞ்சிப் பூ, (இன்னா) முள் என்ற காட்சிப் பொருள்களால் படிமப்படுத்தியுள்ளது இக்கவிதை. இதில் பயன்படிமம் காட்சிப்படுத்தப்படுகிறது.

---

7. **மெய்ப்படிமம் எவ்வாறு காட்சிப்படுத்தப்படுகிறது?**

யானைதன் வாய்நிறை கொண்ட வலிதேம்பு தடக்கை
குன்றுபுகு பாம்பின் தோன்றும்.

- மதங்கொண்ட யானையானது தன் வாய்க்குள் பெரிய துதிக்கையின் மூலம் உணவை வைக்கிறது. யானையின் வாய் மலைக்குகையின் வாயினைப்போல உள்ளதாகவும், உணவை எடுத்துச் செல்லும் துதிக்கை, மலைக்குகையில் நுழையும் பாம்பினைப் போல உள்ளதாகவும் வடிவத்தைக் காட்சிப்படுத்தியமை இங்குப் படிமமாகிறது.

---

8. **படிமத்தை உருவாக்க எவை பயன்படுகின்றன?**

- படிமத்தை உருவாக்க உவமை, உருவகம், சொல்லும் முறை போன்றவை பயன்படுகின்றன.

---

9. **படிமம் குறித்து எழுதுக.**

- நாம் விரும்பிய அல்லது சிந்தித்த ஒரு கருத்து வடிவத்திற்கு விளக்கம் தரவும், புலன்களின் உணர்வுகளை வெளிக்கொண்டு வருவதற்காகவும் செய்யப்படும் மனதின் மொழிபெயர்ப்பே படிமம்.
- படிமங்கள் பொருள் வளம் மிக்கன.
- கருத்துச் செழிப்புடையன.
- பாடலின் மொத்தப் பொருளையும் சிறப்புச் செய்வன.
- இலக்கியங்களில் காட்சிகளையும் கருத்துகளையும் உண்மைகளையும் உணர்வுகளையும் வெளிக்கொணரும் கருவியாகப் படிமம் ஆளப்படுகிறது.

---

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. **'கோவைப்பழ மூக்கும் பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும் வேப்பிலை வாலும்' இக்கவிதையில் ---- படிமம் பயின்று வந்துள்ளது.**

அ) பயன் ஆ) வினை இ) மெய் ஈ) உரு **[இ) மெய்]**

---

2. **வினைப்படிமத்திற்குரிய பாடலைத் தேர்வு செய்க.**

அ) காலை இளம் வெயில் நன்றாக மேய தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்
ஆ) கோவைப்பழ மூக்கும் பாசிமணிக் கண்ணும்
இ) வெந்தாறு பொன்னின் அந்திப்பூப்ப
ஈ) நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந்தாங்கு

**[அ) காலை இளம் வெயில் நன்றாக மேய தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்]**

3. ‘வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப’ - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது.

உருப்படிமம்

4. ‘கட்டில் நிணக்கும் இழிசினன் கையது’ - என்னும் புறநானூற்றுப் பாடலில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது.

வினைப்படிமம்

5. யானை தன் வாய்நிறை கொண்ட வலிதேம்பு தடக்கை - என்னும் அகநானூற்றுப் பாடலில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது.

மெய்ப்படிமம்

| ஆட்சித்துறைச் சொல்லகராதி | | | பல்துறை கலைச்சொல் அகராதி | |
|---|---|---|---|---|
| 1. | **Jail corps** | சிறைக்காவற்படை | **Allergy** | ஒவ்வாமை |
| 2. | **Jails** | சிறைச்சாலைகள் | **Airways** | வான்வழி |
| 3. | **Joint Magistrate** | குற்ற இயல் நீதிபதி | **Air Brake** | காற்றுத்தடை |
| 4. | **Judicial** | நீதிமுறையான | **Ailment** | பிணி, நோய் |
| 5. | **Judge** | நீதிபதி, தீர்ப்பாளர், நடுவர் | **Aid** | உதவி |
| 6. | **District Judge** | மாவட்ட நீதிபதி | **Aided** | நிதியுதவி |
| 7. | **High Court Judge** | உயர்நீதிமன்ற நீதிபதி | **Caselaw** | தீர்ப்பு வழிச்சட்டம் |
| 8. | **Sub - Judge** | உபநீதிபதி | **Case diary** | வழக்குக் குறிப்பேடு |
| 9. | **Judgement** | தீர்ப்பு | **Case history** | வழக்கு பற்றிய விபரம், நோய் விவரக்குறிப்பு |
| 10. | **Judicial Committee** | நீதிக்கமிட்டி (குழு) | **Case** | பெட்டி, வை, நேர்வு, வழக்கு, உறை |
| 11. | **Judicial Decision** | நீதிமன்றத் தீர்ப்பு | **Case sheet** | நோயாளர் குறிப்பு |
| 12. | **Judical Service** | நீதித்துறைப்பணி | **Captain** | தலைவர், மாலுமி |
| 13. | **Justice** | நீதி, நீதிபதி | **Cemetery** | இடுகாடு |
| 14. | **Chief Justice** | தலைமை நீதிபதி | **Clearday** | முழுநாள் |
| 15. | **Criminal Justice** | குற்ற இயல் நீதிபதி | **Docoity** | கூட்டுக்கொள்ளை |
| 16. | **System of justice** | நீதி முறைப்பாடு | **Docoit** | கொள்ளைக்காரன் |
| 17. | **Justificaiton** | நியாயவாதம் | **Daily report** | நாள் அறிக்கை |

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



| | | | | |
|---|---|---|---|---|
| 18. | **Juvenile Offenders** | குற்ற இளைஞர்கள் | **Dak stage** | அஞ்சல் மாற்றுமிடம் |
| 19. | **Civilwar** | உள்நாட்டுப் போர் | **Dak tray** | அஞ்சல்தட்டு |
| 20. | **Circular** | சுற்றறிக்கை | **Dak book** | அஞ்சல்புத்தகம் |
| 21. | **Civil Jails** | உரிமையியல் சிறைகள் | **Daily wages** | தினக்கூலி |
| 22. | **Court** | நீதிமன்றம், அரங்கு, அரசவை | **Custody** | பொறுப்பில், பாதுகாப்பு |
| 23. | **Court fees** | வழக்குக்கட்டணம், நீதிமன்றக் கட்டணம் | **Custom** | வழக்கம் |
| 24. | **High court** | உயர்நீதிமன்றம் | **Customs** | சுங்கம் |
| 25. | **Supreme court** | பெருநீதிமன்றம் | **Cut out** | காட்சிப்பெருவடிவம் |






Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள அணி இலக்கணம்

1. **பொருள் வேற்றுமையணியைச் சான்று தந்து விளக்குக. (ப.ஆ.க-6)**

**அணி இலக்கணம்**

- இது வேற்றுமை அணியின் ஒரு பிரிவாகும். செய்யுளில் கவிஞர் இரு வேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப் பின் ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.

**சான்று:**

**ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது**
**தன்னேர் இலாத தமிழ்!**

**விளக்கம்:**

- எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றும் கதிரவன் உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றும்.
- குளிர்ச்சிப் பொருந்திய பொதிய மலையிலே தோன்றிய தமிழ்மொழி மக்களின் அறியாமை என்னும் அக இருளை அகற்றும். அத்தமிழ் மொழிக்கு நிகராக வேறெந்த மொழியும் இல்லை.

**அணிப்பொருத்தம்**

கதிரவனும், தமிழ்மொழியும் மலையில் தோன்றுகின்றன என ஒப்புமையைக் கூறி, கதிரவன் புற இருளை அகற்றும்; தமிழ்மொழி அக இருளை அகற்றும், அதேநேரத்தில் அதற்கு நிகராக வேறெந்த மொழியும் இவ்வுலகில் இல்லை என்று வேறுபடுத்திக் காட்டியதால் இப்பாடல் பொருள் வேற்றுமையணி ஆகும்.

2. **வேற்றுமையணி –**

**இலக்கணம்:**

புலவர் ஒரு செய்யுளில் இருபொருளுக்குரிய ஒற்றுமையை முதலில் கூறிப் பின்னர், ஒரு காரணத்தால் ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் காட்டுவது ''வேற்றுமையணி'' ஆகும்.

**எ.கா.:**

**''தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு''**

**விளக்கம்:**

தீ உடலைச்சுடும்; தீச்சொல் உள்ளத்தைச் சுடும். சுடும் தன்மையால் தீயும், தீச்சொல்லும் ஒற்றுமை உடையன. ஆனால் தீப்புண் ஆறிவிடும். தீயசொல் உள்ளத்தில் தைத்த ஆறாத வடுவாகத்தோன்றும். இஃது இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாடாகும். இவ்வாறு ஒற்றுமையைக் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவதே ''வேற்றுமையணி'' ஆகும்.

3. **நிரல் நிரையணி**

**'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது' - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக? (ப.ஆ.க-6)**

இக்குறட்பாவில் பயின்றுவரும் அணி **நிரல்நிறை** அணியாகும்.

**அணி இலக்கணம்:**

ஒரு செய்யுளில் முதலில் ஒரு சொல்லையும் பொருளையும் வரிசையாக (நிரலாக) நிறுத்தி, அவ்வரிசைப் படியே பொருள் கொள்ளும் முறை நிரல் நிறையாகும். அதாவது சில சொற்களை முதலில் ஒரு வரிசையில் வைத்து, அச்சொற்களோடு தொடர்புடைய சொற்களை அடுத்த வரிசையில் முறைமாறாமல் சொல்வது நிரல் நிறை அணியாகும்.

**சான்று பாடல் பொருள்:**

இல்வாழ்க்கையில் நாம் அன்பும் அறனும் கொண்டு ஒழுகினால், அதுவே நமக்கு வாழக்கையின் பண்பினையும் பயனையும் முழுமையாகத் தரும்.

**அணிப்பொருத்தம்:**

இக்குறட்பாவில் அன்பு, அறன் என்ற சொற்களை முதலில் ஒரு வரிசையில் நிறுத்திய திருவள்ளுவர் அவற்றோடு தொடர்புடைய பண்பு, பயன் என்பவற்றை முறையே அடுத்த வரிசையில் இணைத்துப் பொருள் கொள்ளுமாறு அமைத்துள்ளார் திருவள்ளுவர். எனவே இந்தத் திருக்குறள் நிரல்நிறை அணியாகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள திணைகள்

1. **வாகைத் திணையைச் சான்றுடன் விளக்குக.**

**(ப.ஆ.க-3)**

**திணை விளக்கம்:**

வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப்பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத் திணை ஆகும்.

**சான்று:**

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்..... எனத் தொடங்கும் நக்கீரர் எழுதிய நெடுநல்வாடைப் பாடல்

**திணைப் பொருத்தம்:**

வாடைக் காலத்தில் மேகம் வலப்பக்கமாகச் சூழ்ந்து இந்நில உலகம் குளிரும்படி மழையாகப் பெய்தது. வாடைக் காற்றின் குளிர்ச்சியினால் ஆயர்கள் சேர்ந்து உடலுக்குச் சூடேற்ற கொள்ளி நெருப்பின் மேல் கைகளை நீட்டினர். அத்தகைய குளிர்ச்சியான நேரத்தில் மன்னனும் கூதிர்பாசறையில் அமர்ந்து தன் வெற்றியைக் கொண்டாடினான் என்பதால் இப்பாடல் வாகைத் திணையைச் சார்ந்ததாகும்.

2. **i) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.**

**(ப.ஆ.க-4, மார்ச்.20)**

**திணை விளக்கம்:**

பாடு + ஆண் + திணை = பாடாண் திணை. பாடப்படும் ஆண்மகனின் புகழ், வலிமை, கொடை, அருள், கல்வி, ஒழுக்கம் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவதாம். ஆண் மகனது ஒழுகலாற்றைக் கூறுவது பாடாண் திணையின் நோக்கமாகும்.

**சான்று:**

வாயி லோயே! வாயி லோயே!
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வந்தித்தம்......
எனத் தொடங்கும்

ஔவையார் பாடிய புறநானூற்றுப் பாடலின் 206 ஆவது பாடல்

**திணைப் பொருத்தம்:**

'பரிசிலர்க்கு அடையா வாயி லோயே' என்ற வரிகள் மூலம் தன்னை நாடி வருவோர்க்கு இல்லை என்று சொல்லாது தனது அரண்மனை வாயிலை அடைக்காமல் பரிசிலர் உரிய பரிசினைப் பெற எப்போதும் திறந்திருக்கும் வாயிலை உடையவன். அதியமான் நெடுமான் அஞ்சி என்று ஔவை கூறியதில் இருந்து அஞ்சியின் கொடைத் தன்மை விளங்கும். மேலும் 'கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி' என்ற வரிகள் மூலம். விரைந்து ஓடும் குதிரைகளைத் தன் படையில் கொண்டவன் என்பதில் இருந்து அஞ்சியின் படை வலிமையையும் அறிந்து கொள்வதால், இப்பாடல் பாடாண் திணையைச் சார்ந்ததாகும்.

**ii) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.**

**திணை விளக்கம்:**

பாடு + ஆண் + திணை = பாடாண் திணை. பாடப்படும் ஆண்மகனின் புகழ், வலிமை, கொடை, அருள், கல்வி, ஒழுக்கம் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவதாம். ஆண் மகனது ஒழுகலாற்றைக் கூறுவது பாடாண் திணையின் நோக்கமாகும்.

**சான்று :**

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்டு ஆகும்......

எனத் தொடங்கும் பிசிராந்தையார் பாடிய புறநானூற்றுப் பாடலின் 184- ஆவது பாடல்

**திணைப் பொருத்தம்:**

சிறிய நிலத்தில் விளைந்த நெல்லை அறுத்து உணவாக்கிக் கவனமாகக் கொடுத்தால் அது யானைக்குப் பல நாட்கள் உணவாகும். பெரிய வயலில் யானை புகுந்து உண்ணுமாயின் வாயில் புகும் நெல்லை விடக் காலால் மிதிப்பட்டு அழியும் நெல் அதிகமாகும். அதுபோல, மன்னன் முறை தெரியாமல் வரி திரட்டினால் நாடு விரைவில் கெடும் என்று அரசன் மேற்கொண்டு வரும் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுவதால் இப்பாடல் பாடாண் திணையைச் சார்ந்ததாகும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள துறைகள்

**1. 'கூதிர்ப்பாசறை' துறையைச் சான்றுடன் விளக்குக. (பெ.ஆ.க-3)**

**துறை விளக்கம்:**

கூதிர்ப்பாசறை என்பது, போர் மேற்சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் படை வீடாகும். (இங்கிருந்து அரசன் எதிரிகளை அழிக்கும் திட்டங்களை அமைச்சர்களுடன் ஆலாசித்து முடிவெடுப்பான்)

**சான்று:**

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்...... எனத் தொடங்கும் நக்கீரர் எழுதிய நெடுநல்வாடை பாடல்

**சான்று பொருத்தம்:**

வாடைக்காலத்தில் மேகம் வலப்பக்கமாகச் சூழ்ந்து இந்நில உலகம் குளிரும்படி மழையாகப் பெய்தது. வாடைக் காற்றின் குளிர்ச்சியினால் ஆயர்கள் சேர்ந்து உடலுக்குச் சூடேற்ற கொள்ளி நெருப்பின் மேல் கைகளை நீட்டினர். அத்தகைய குளிர்ச்சியான நேரத்தில் அந்த நாளின் வெற்றியைக் கொண்டாடிய அரசன் அடுத்த நாள் போருக்கான திட்டங்களைக் கூதிர்பாசறையில் தங்கி ஆலோசித்துக் கொண்டிருந்தான் என்பதால் இப்பாடல் கூதிர்பாசறைத் துறையைச் சார்ந்ததாகும்.

**2. பரிசில் துறையைச் சான்றடன் விளக்குக.**

**துறை விளக்கம்:**

''மண்ணகம் காவல் மன்னன் முன்னர்
எண்ணிய பரிசில் இது என உரைத்தன்று'' (புறப்பொருள் வெண்பாமாலை 193) என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறுகின்றது?

பரிசு வேண்டி மன்னனின் அரண்மனையில் நிற்பதும் பரிசில் துறையில் அடங்கும்.

**சான்று:**

வாயிலோயே! வாயி லோயே!
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி
வத்தித் தாம்.....'
- எனத் தொடங்கும்

ஔவையார் பாடிய புறநானூற்றுப் பாடலின் 206-ஆவது பாடல்

**சான்று பொருத்தம்:**

'பரிசிலர்க்கு அடையா வாயி லோயே' என்ற வரிகள் மூலம் தன்னை நாடிவரும் பரிசிலர்க்கு இல்லை என்று சொல்லாது தனது அரண்மனை வாயிலை அடைக்காமல் இருப்பவன் அதியமான் நெடுமான் அஞ்சி. இவனது கொடைத் தன்மையை நோக்கி பரிசிலர் அரண்மனையின் வாயிலில் நிற்பது பரிசில் துறையாகும்.

**3. செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்குக.**

**துறை விளக்கம்:**

அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு அவன் கேட்க அறிவுறுத்தல், செவியறிவுறூஉ துறையாகும்.

**சான்று:**

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்.......
எனத் தொடங்கும்

பிசிராந்தையார் பாடிய புறநானூற்றுப் பாடலின் 184-ஆவது பாடல்.

**சான்று பொருத்தம்:**

சிறிய நிலத்தில் விளைந்த நெல்லை அறுத்து உணவாக்கிக் கவளமாகக் கொடுத்தால் அது யானைக்கப் பல நாட்களுக்கு உணவாகும். பெரிய வயலில் யானை புகுந்து உண்ணுமாயின் வாயில் புகும் நெல்லைவிடக் காலால் மிதிப்பட்டு அழியும் நெல் அதிகமாகும். அதுபோல மன்னன் முறை தெரிந்து வரி திரட்டினான் என்றால் நாடு வளமடையும் என்பதை உணர்த்த, ''அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே, கோடியாத்து நாடு பெரிது நந்தும்'' என்று உரைத்தலால் இப்பாடல் செவியறிவுறூஉ துறையைச் சார்ந்ததாயிற்று.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள கூற்று

**கூற்று :** இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் பாங்கற்கு உரைத்தது.
**திணை :** நெய்தல்; பாடியவர் : அம்மூவனார்; அகநானூறு 140-ஆவது பாடல்.

1. **தலைமகன் பாங்கற்கு உரைத்த கூற்றினை சான்று தந்து விளக்குக.**

**கூற்று விளக்கம்:**

பால் கூட்டுவிக்க, தலைவியைக் கண்டு புணர்ந்து நீங்கினான் தலைவன்; அவனது மெய்வேறுபாடு கண்டு ‘இஃது எதனால் ஆயது? எனக் கேட்ட பாங்கனுக்கு, ‘ஓர் உமணர் மகளின் கண்ணால் எனக்கு இந்நோய் உண்டாயிற்று’ எனத் தலைவன் கூறியது.

**சான்று:**

**பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்...... எனத் தொடங்கும்**
அம்மூவனார் பாடிய அகநானூற்று பாடலின் 140-ஆவது பாடல்.

**சான்று பொருத்தம்:**

உமணர் மகள், ‘உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக்கொள்ள வாரீரோ! என்று கூவினாள். அவள் கூவுவதைக் கேட்டு வீட்டில் உள்ள நாய் இது வேற்றுக்குரலென்று குரைத்தது. அதனை எதிர்பாராத அப்பெண்ணின் கண்கள் இரண்டும் அச்சத்தால் மீன்கள் தம்முள் போர் செய்வது போல மருண்டன. ‘மதர்கயல் மலைப்பின் அன்னகண் எனக்கு’. அந்தக் கண்களால் நான் துன்பப்பட்டேன்’ என்று தலைமகன் பாங்கனிடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

## பழமொழிகளை வாழ்வியல் நிகழ்வில் அமைத்து எழுதுதல்

1. **கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு**

**பழமொழி விளக்கம்:**

நாம் எவ்வளவு பெரிய கல்வியைக் கற்றிருந்தாலும் நாம் மேலும் கற்க வேண்டியது இந்த உலக அளவிற்குப் பெரியது.

**வாழ்க்கை நிகழ்வு:**

அருள் சிறந்த படிப்பாளி. சிறு வயதில் இருந்தே பாடப்புத்தகங்கள் மட்டுமின்றி இதர பொது அறிவு புத்தகங்களையும் மிகவும் ஆர்வத்துடன் படிப்பான். அவனுக்குத் தெரியாத உலக விஷயங்களே இல்லை எனலாம். மேலும் அவனுக்குத் தான் மிகவும் கற்றவன் என்ற கர்வம் உண்டு. இதுகூட தெரியாதா? என்று மற்றவர்களின் அறியாமையை நகையாடுவான். ஒருநாள் ஒரு கணிதப் புத்தகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அதில் தனக்குத் தெரியாத பல கணிதக் கணக்குகள் இருந்ததை உணர்ந்தான்.

அதே கணிதப் புத்தகத்தைக் கண்ணனும் பார்த்துக் கொண்டிருந்தான். அருள், கண்ணன் தன்னிடம் ஏதாவது கணக்கைச் சொல்லித்தரும்படி கேட்டுவிடுவானோ என்று பயந்து அங்கிருந்து சென்றுவிட்டான். இதிலிருந்து தாம் எவ்வளவு கற்றாலும் தமது கல்வி எப்போதும் முழுமையாகாது என்பதை உணர்ந்தான்.

**நீதி:**

உலக அறிவு ஒரு கடல் போல நாம் அதன் கரையில் இருக்கும் ஒரு சிறு துகள் போல.

2. **இளங்கன்று பயமறியாது**

**பழமொழி விளக்கம்:**

பொதுவாக இளமையில் பயம் இருக்காது.

**வாழ்க்கை நிகழ்வு:**

நர்மதா தன்னுடைய குழந்தையின்மீது அதிக கவனம் செலுத்துவாள். அவள் ஒருநாள் மாடிக்குச் சென்று குழந்தையோடு விளையாடத் தொடங்கினாள்.

அவளது வீட்டுப் பால்கனியின் கைப்பிடிச் சுவர் உயரம் குறைவாக இருந்தது. அவளது மகன் திடீரென்று பால்கனிக்குச் சென்று விளையாட ஆரம்பித்தான். அவள் அதைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். சிறுது நேரத்தில் அவன் சுவர் மீது ஏறி நின்று விட்டான். அதைக் கண்ட நர்மதா ஓடிப்போய் அவனை இழுத்து ஒரு அசம்பாவிதத்தைத் தவிர்த்தாள். இளங்கன்று பயமறியாது என்பதற்கேற்ப அந்தக் குழந்தை பயமின்றி தனது தாயைப் பார்த்து சிரித்தது.

**நீதி:**

சிறிய வயதில் பயம் இருக்காது. ஒரு அசட்டு தைரியம் இருக்கும்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**3. வாய்மையே வெல்லும்**

**பழமொழி விளக்கம்:**

எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நாம் உண்மையே பேச வேண்டும். அதுவே நமக்கு வெற்றியைத் தரும் என்பதே இந்தப் பழமொழியின் பொருளாகும்.

**வாழ்க்கை நிகழ்வு:**

ரூபன் அன்று பள்ளிக்கு வீட்டுப்பாடம் செய்யாமல் வந்திருந்தான். அவனது நண்பன் கிறிஸ்டோபரும் வீட்டுப் பாடம் செய்யவில்லை.

ரூபன் கிறிஸ்டோபரிடம், ''வீட்டுப்பாடம் செய்யாததை ஆசிரியரிடம் சொல்ல வேண்டாம். அவர் நமது நோட்டுகளை எடுத்து பார்க்கப் போவதில்லை'' என்று கூறினான். ஆசிரியர் கேட்கும்போது, கிறிஸ்டோபர் தான் செய்யவில்லை என்று கூறினான். ஆனால் ரூபன் ஒன்றும் கூறவில்லை.

அன்று ஆசிரியர் அனைவரது நோட்டுக்களையும் சரிபார்த்தார். பொய் சொன்ன ரூபன் உண்மையைச் சொன்ன கிறிஸ்டோபரை விட அதிகமாக அடி வாங்கினான்.

**நீதி:**

உண்மையைச் சொல்வதும் உண்மையாக நடப்பதும் எப்போதுமே வெற்றியைத் தரும்.

**4. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது.**

**பழமொழி விளக்கம்:**

எவ்வளவுதான் உயரமாகப் பறந்தாலும், ஊர்க்குருவி பருந்தாகி விடாது. அதுபோல நாம் என்ன மாதிரியான வேடமணிந்தாலும், நமது அடிப்படைத் தன்மை மாறாது.

**வாழ்க்கை நிகழ்வு:**

காளி இனிப்புக் கடை நடத்தி வந்தார். அவரது கடைக்கு வழக்கமாக வரும் ஒரு வாடிக்கையாளர் மணி. மணி அணிந்திருந்த படோடபமான உடைகளைப் பார்த்து ஆசை கொண்ட காளி தாமும் அதுபோல அணிந்து கொள்ள விரும்பினார்.

எனவே விலை உயர்ந்த ஆடைகளை வாங்கி அணிந்து கொண்டார். எப்போதும் அவற்றையே அணிந்து அழகு பார்ப்பார். ஆனால், அவரது கடையில் பலகாரங்களின் எண்ணெய் பட்டு விரைவில் அந்தத் துணிகள் பாழாகி விட்டன.

மற்றவர் அவரைப் பார்த்து எள்ளி நகைக்கவே, அவர் மனம் வருந்தினார்.

**நீதி:**

மதிப்பு என்பது நாம் அணிந்து கொள்ளும் உடையில் இல்லை. நமது சூழ்நிலைக்கு ஏற்றவாறு நாம் நடந்து கொண்டால் பிறரால் மதிக்கப்படுவோம்.

**5. உள்ளங்கை நெல்லிக்கனி போல**

**பழமொழி விளக்கம்:**

கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் ''உள்ளங்கை நெல்லிக்கனி போல'' என்ற பழமொழி விளக்குகிறது.

**வாழ்க்கை நிகழ்வு:**

எங்கள் ஆசிரியர் பொது அறிவை வளர்க்கும் வகையில் பல்வேறு செய்திகளைக் கூறுவார்.

ஒருமுறை ஒருவர் ஓர் அறிவியல் சார்ந்த வார்த்தையைக் கூறி அதை விளக்கிக் கொண்டிருந்தார். அவ்வார்த்தை எங்களுக்குச் சரியாகப் புரியவில்லை. உடனே, எங்கள் ஆசிரியர் அதற்கு ஓர் எடுத்துக்காட்டுக் கூறி, எதை எவ்வாறு ஞாபகத்தில் வைக்க முடியும் என்றும் கூறினார்.

சிறிது நேரத்தில் அந்தக் கடினமான வார்த்தை கூட மிக எளிதாக இருந்தது. இந்த வார்த்தை மற்றும் அதன் விளக்கம் என்றுமே எங்கள் வாழ்வில் மறக்காத ஒன்றாய் இருக்கும்.

**நீதி:**

எக்கருத்துகளையும் தெளிவாகக் கற்பிக்கும் என் ஆசிரியரின் விளக்கம் ''உள்ளங்கை நெல்லிக்கனி போல'' எங்கள் மனதில் தெளிவாய் பதிந்தது.

**6. இலவு காத்த கிளி போல**

**பழமொழி விளக்கம்:**

நடக்காத ஒன்றிற்காக நாட்கணக்கில் காத்திருப்பதை இலவு காத்த கிளி போல என்று குறிப்பிடுவார்கள். இலவங்காய் பழுத்தவுடன் அதை உண்ணலாம் என்று காத்திருக்குமாம் கிளி. ஆனால் அது வெடித்து பஞ்சாக வெளிப்படவே, கிளி ஏமாந்து விடுமாம்.

**வாழ்க்கை நிகழ்வு:**

முருகன் தனது வாடகை வீட்டின் அருகில் இருந்த காலிமனையை வாங்க விரும்பினார். ஆனால் அந்த மனையில் உரிமையாளர் அதை தனது தங்கைக்குக் கொடுப்பதில் உறுதியாய் இருந்தார்.

அவர் அவருடைய தங்கையிடம் கொடுத்தாலும், முருகன் அவளிடமிருந்து வாங்கி விடலாம் என்று ஆசைப்பட்டான்.

ஆனால், உரிமையாளர் அந்த வீட்டை தன் தங்கைக்குக் கொடுத்துவிட்டார். அவள் இப்போது தன் குடும்பத்தோடு சந்தோசமாக வாழ்ந்து வருகிறாள். இலவு காத்த கிளி போலக் காத்திருந்த முருகன் ஏமாந்து போனார்.

**நீதி:**

நடக்க வாய்ப்பில்லாத செயல் என்று தெரிந்தும், மாற்று வழிகளை முயற்சி செய்யாமல், வீணாக காத்திருப்பது ஏமாற்றத்தில் முடியும்.

**7. குறைகுடம் கூத்தாடும்**

**பழமொழி விளக்கம்:**

அரைகுறையாக இருப்பது எப்போதும் நிலையற்றது என்பதை விளக்குகிறது.

**வாழ்க்கை நிகழ்வு:**

பத்தாம் வகுப்பில் சாயிஷா மற்றும் அனிதா நெருங்கியத் தோழிகள். சாயிஷா எப்போதும் வகுப்பிலும், பள்ளியிலும் முதல் இடம் பெற்று வந்தாள்.

ஆனால் அனிதா நான்கு அல்லது ஐந்தாவது இடத்தில் இருப்பாள்.

ஒருமுறைக் காலாண்டுத் தேர்வில் சாயிஷா உடல் நலக்குறைவால் ஒழுங்காக எழுத முடியவில்லை. எனவே, அனிதா முதல் இடத்தைப் பிடித்து பெருமையாகப் பேசிக் கொண்டு இருந்தாள். பொதுத் தேர்விலும் தான் முதல் இடம் வகிப்பேன் என்று கூறினாள்.

ஆனால் அரசுப் பொதுத்தேர்வில் சாயிஷா அதிக மதிப்பெண்கள் பெற்றுப் பள்ளிக்குப் பெருமை சேர்த்தாள். அதற்காக அவள் பெருமிதம் கொள்ளவில்லை. எப்போதும் போல அடக்கத்துடன் செயல்பட்டாள். அனைவரும், ‘குறைகுடம் கூத்தாடும் நிறைகுடம் எப்போதும் தளும்பாது’ என்ற பழமொழியைக் கூறி சாயிஷாவைப் பாராட்டினர்.

**நீதி:**

‘அணைகின்ற விளக்கு சுடர் விட்டு எரிவது போல’ முழுமையான அறிவைப் பெறாதவனுடைய கல்வியும் நிறைவான பலன் தராது என்பதை இப்பழமொழி உணர்த்துகிறது.

---

**8. தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்**

**பழமொழி விளக்கம்:**

எவ்வளவுதான் பகை இருந்தாலும் குடும்ப உறுப்பினர்களுக்கு ஏதாவது பிரச்சனை என்றால் பதட்டம் வரத்தான் செய்யும் என்பதற்கு ஏற்ப பகையை மறந்து உதவி செய்து ‘‘தான் ஆடாவிட்டாலும் தன்தசை ஆடும்’’ என்பதை அறியலாம்.

**வாழ்க்கை நிகழ்வு:**

என்னுடைய அப்பாவிற்கும் பெரியப்பவிற்கும் நீண்ட நாள் பகை உண்டு. ஒருவருக்கொருவர் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டிருப்பர். இதனால் இது குடும்பப் பகையாய் மாறியது.

ஒருமுறை என் பெரியப்பாவிற்கு விபத்து ஏற்பட்டது. தலையிலும் தோளிலும் பலத்த காயம் ஏற்பட்டது. என்னுடைய பெரியப்பாவிற்கு அதிக அளவில் இரத்தம் தேவைப்பட்டது. ஆனால் அவரது இரத்தப்பிரிவு யாரிடமும் இல்லை.

இறுதியில் என்னுடைய அப்பாவிற்கு அதே இரத்தப்பிரிவு என்பதால், இரத்தம் கொடுத்து அவரைக் காப்பாற்றினோம். குடும்பப் பகையை மறந்து ஒற்றுமையானோம்.

**நீதி:**

இந்த அன்பை தான் ‘தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்’ என்பார்கள் என்பது தெளிவாகின்றது.

---

**9. பதறிய காரியம் சிதறும் / ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு**

**பழமொழி விளக்கம்:**

ஒரு செயலைச் செய்யும் போது, மன பதற்றம் இருந்தால், செய்யும் செயலில் கவனம் குறையும் என்பதை விளக்கும் பழமொழி, ‘‘பதறிய காரியம் சிதறும்’’.

**வாழ்க்கை நிகழ்வு:**

நான் 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் சமூக அறிவியல் பாடம் எழுதும்போது இரவு நீண்ட நேரம் கண் விழித்து படித்தேன். மீண்டும் அதிகாலையில் 4-மணிக்கு எழுந்தும் படித்தேன். நன்றாகத் தயார் செய்து இருந்தேன்.

தேர்வு தொடங்கியது. திடீர் என்று எனக்கு வாந்தி மயக்கம் ஏற்பட்டது. சிறிது நேரத்தில் குணமாகி விட்டது. இருப்பினும் மனப்பதற்றம் ஏற்பட்டதால், பல விடைகளைச் சரியாக எழுதமுடியவில்லை.

தேர்வு முடிவில் எனக்கு 80 மதிப்பெண் மட்டுமே கிடைத்தது. சமூக அறிவியல் பாடம் விரும்பிப் படிக்கும் எனக்குப் பதற்றத்தால் முழு மதிப்பெண்கள் எடுக்க முடியவில்லை என்ற வருத்தம் இன்றும் உள்ளது.

**நீதி:**

திட்டம் இட்டுச் செய்தால் எந்தச் செயலும் வெற்றியைத் தரும். பதற்றத்தோடு செய்தால் தேர்வினை நன்றாகச் செய்ய முடியவில்லை, ‘‘பதறிய காரியம் சிதறும்’’ என்பதை உணர்ந்தேன்.

---

**10. பழகப் பழகப் பாலும் புளிக்கும்**

**பழமொழி விளக்கம்:**

எந்தப் பொருளும் புதிதாக இருக்கும் வரைதான் கவர்ச்சியை ஏற்படுத்தும். அந்தப் பொருளே நாளாக நாளாக பழையதாகிவிட்டால் அதுவும் வெறுத்துப் போய்விடும்.

**வாழ்க்கை நிகழ்வு:**

கவிதா நன்றாகப் படிக்கக்கூடியவள். அவளுடைய ஊர் பள்ளியிலிருந்து சிறிது தொலைவில் இருந்தது. எனவே, அவள் பேருந்தில் பயணிப்பாள்.

ஒருமுறை எங்கள் பள்ளியில் நடந்த அறிவியல் சார்ந்த தேர்வில் வெற்றிப் பெற்றதால் அவளுக்கு மிதிவண்டி பரிசாகக் கிடைத்தது. எனினும் அவளுக்கு மிதிவண்டி ஓட்டத் தெரியாததால் பேருந்திலேயே பயணித்து வந்தாள். அவளுக்குப் போக போக பேருந்தில் பயணிக்க வெறுத்துவிட்டது.

பிறகு எப்படியோ மிதிவண்டிப் பழக ஆரம்பித்து, தினந்தோறும் மிதிவண்டியில் பள்ளிக்கு வர ஆரம்பித்துவிட்டாள். அவள் பேருந்தை முழுவதும் தவிர்த்துவிட்டாள்.

**நீதி:**

எந்தவொரு செயலைத் தொடர்ந்து செய்தாலும், கேட்டாலும், பார்த்தாலும் கசந்து போய்விடும் என்பதை இந்நிகழ்வு உணர்த்துகின்றது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# அரசு முழு ஆண்டு தேர்வு வினாத்தாள் மார்ச் - 2020

## பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14x1=14**

1. **சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' பாடல் இடம் பெற்ற நூல்:**
   அ) மஸ்னவி ஆ) நிலவுப் பூ
   இ) காவ்யதர்சன் ஈ) துறைமுகம்
2. **''காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை'' - இந்தத் தொடரில் 'கலன்' என்ற சொல்லின் பொருள்.**
   அ) வேளாண் கருவி ஆ) போர்க் கருவி
   இ) தச்சுக் கருவி ஈ) இசைக்கருவி
3. **மாதவி பெற்ற பட்டம்:**
   அ) நாட்டியப் பேரொளி ஆ) நர்த்தகி
   இ) தலைக்கோலி ஈ) நாட்டியமயூரி
4. **புயலுக்குப் பெயர் வைக்கும் கூட்டமைப்பு நாடுகள்:**
   அ) பத்து நாடுகள் ஆ) எட்டு நாடுகள்
   இ) ஐந்து நாடுகள் ஈ) பதினெட்டு நாடுகள்
5. **ச.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்:**
   அ) கிறித்தவமும் தமிழும்
   ஆ) பௌத்தமும் தமிழும்
   இ) இசுலாமும் தமிழும்
   ஈ) சமணமும் தமிழும்
6. **இராமலிங்க அடிகள் இயற்றிய நூல்:**
   அ) திருவருட்பா ஆ) திருவாசகம்
   இ) திருக்குறள் ஈ) திருமந்திரம்
7. **'காய்நெல்' - இச்சொல்லுக்கான இலக்கணக் குறிப்பு:**
   அ) உம்மைத்தொகை
   ஆ) பண்புத்தொகை
   இ) வினைத்தொகை
   ஈ) உவமைத்தொகை
8. **முதல் கல் - என்னும் சிறுகதையின் ஆசிரியர்:**
   அ) குலோத்துங்கச் சோழன்
   ஆ) உத்தம சோழன்
   இ) இராசராச சோழன்
   ஈ) இராசேந்திர சோழன்
9. **பிழையற்ற தொடரைக் கண்டறிக.**
   அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான்
   ஆ) கோவலன் மதுரைக்குச் சென்றது
   இ) பறவைகள் நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றது
   ஈ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது
10. **சுரதா நடத்திய கவிதை இதழ்:**
    அ) விண்மீன் ஆ) இலக்கியம்
    இ) காவியம் ஈ) ஊர்வலம்
11. **'பொய்யா வானம்' - இலக்கணக் குறிப்பு தருக.**
    அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
    ஆ) வினைத்தொகை
    இ) உரிச்சொல் தொடர்
    ஈ) பெயரெச்சத் தொடர்
12. **அருங்கானம் - புணர்ச்சி விதி தருக.**
    அ) ஈறுபோதல், தன் ஒற்று இரட்டல்
    ஆ) ஈறுபோதல்
    இ) ஈறுபோதல், இனமிகல்
    ஈ) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல்
13. **மறைத்துச் சொல்லவும், மிகுத்துச் சொல்லவும், அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?**
    அ) தொன்மம் ஆ) குறியீடு
    இ) படிமம் ஈ) அங்கதம்
14. **காப்பியம் எத்தனை வகைப்படும்?**
    அ) மூன்று ஆ) இரண்டு
    இ) நான்கு ஈ) ஐந்து

## பகுதி - II

### பிரிவு - 1 3x2=6

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16. விலங்குகளும் பறவைகளும் எவ்வாறு நடுங்கியதாக நக்கீரர் கூறுகிறார்?
17. வசனம், கவிதை - வேறுபாடு தருக.
18. வயலுக்குள் யானையைத் தனித்து விடுவதால் ஏற்படும் விளைவு யாது?

### பிரிவு - 2 2x2=4

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

19. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு வரைக.
20. சென்னையை அலங்கரித்த ஆறுகளை எழுதுக.
21. பின்னணி இசை, படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

### பிரிவு - 3 7x2=14

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

22. **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**
    அ) இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு, நீயும் புரிஞ்சிக்கோ.
    ஆ) வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு?



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



23. **கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும், சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.**

அ) முன் ஆ) தானே

24. **பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க.**

தின்மை - திண்மை

25. **தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) பனைமட்டையில் கூரை வைத்திருந்தனர்.

ஆ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக் குட்டியும் கண்டேன்.

26. **உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்திடுக.**

அ) அச்சாணி இல்லாத தேர் போல

ஆ) நகமும் சதையும் போல

27. **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

அ) நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது.

ஆ) புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.

28. **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) அமர்ந்தனன் ஆ) செய்த

29. **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) எத்திசை ஆ) செந்தமிழே

30. ஈரசைச் சீர்கள் எத்தனை? அவை யாவை?

## பகுதி - III

### பிரிவு - 1 2x4=8

**எவையேனும் இரண்டனுக்கு விடையளி.**

31. ''ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்''
- இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

32. அதிசயமலரில் பூச்செடி எவ்வாறு முளைத்துள்ளதாக தமிழ்நதி கூறுகிறார்?

33. அதிசயமானின் ஈகைப் பண்பை சிறுபாணாற்றுப்படை வழிநின்று விளக்குக.

34. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து எழுதுக.

### பிரிவு - 2 2x4=8

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.**

35. கலைமுழுமை என்றால் என்ன?

36. பேரிடர் மேலாண்மை வாரியம் - விளக்குக

37. சென்னை நகரின் போக்குவரத்து வளர்ச்சி குறித்து எழுதுக.

38. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

### பிரிவு - 3 3x4=12

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

39. ஏகதேச உருவக அணி (அல்லது) தொழில் உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

40. பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

41. அம்மூவனார், தலைமகன் பாங்கனுக்கு உரைத்ததாகக் கூறுவன யாவை?

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) ஊழி பெயரினும் தாம் பெயரார்

**(அல்லது)**

ஆ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

43. கருத்துப் படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.

**சங்க இலக்கியங்கள்**

| எட்டுத்தொகை | | |
|---|---|---|
| **அகம்** | **புறம்** | **அகமும் புறமும்** |
| நற்றிணை<br>குறுந்தொகை<br>ஐங்குறுநூறு<br>அகநானூறு<br>கலித்தொகை | புறநானூறு<br>பதிற்றுப்பத்து | பரிபாடல் |

| பத்துப்பாட்டு | |
|---|---|
| **அகம்** | **புறம்** |
| குறிஞ்சிப்பாட்டு<br>முல்லைப்பாட்டு<br>நெடுநல்வாடை<br>பட்டினப்பாலை | மதுரைக்காஞ்சி<br>திருமுருகாற்றுப்படை<br>பொருநராற்றுப்படை<br>பெரும்பாணாற்றுப்படை<br>சிறுபாணாற்றுப்படை<br>கூத்தராற்றுப்படை |

## பகுதி - IV 3x6=18

44. அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக. **அல்லது**

ஆ) எச். ஏ. கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பர்' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. **அல்லது**



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



ஆ) சங்ககால கல்வெட்டை அறிந்துகொள்ள புகளூர் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? விளக்குக.

46. அ) 'சாலை விபத்தில்லா தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை? **அல்லது**

ஆ) 'நடிகர் திலகம்' என்ற பட்டம் சிவாஜிக்குப் பொருத்தமானதே என்பதை நிறுவுக.

## பகுதி - V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக. 4+2=6**

அ) ''துன்பு உளது.......'' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) ''செயல்'' என முடியும் குறள்.

---

# அரசு மாதிரி வினாத்தாள்

## பகுதி - I

**I. பலவுள் தெரிக. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14x1=14**

1. **'புணரின் புணராது பொருளே; பொருள்வயின் பிரியின் புணராது புணர்வே!' என்னும் அடிகள் இடம் பெற்ற நூல்**
அ) புறநானூறு ஆ) நற்றிணை
இ) அகநானூறு ஈ) கலித்தொகை

2. **'உவா உற வந்து கூடும் உடுபதி, இரவி ஒத்தார்' - உவா என்பதற் பொருள்**
அ) சந்திரன் ஆ) சூரியன்
இ) பௌர்ணமி ஈ) அமாவாசை

3. **சென்னையில் நந்திவர்மன் கல்வெட்டு கிடைக்கப்பெற்றுள்ள இடம்**
அ) பல்லாவரம் ஆ) மாதவரம்
இ) திருவல்லிக்கேணி ஈ) வடபழனி

4. **தன்னுடைய வட்டார எழுத்திற்கு 'கரிசல் இலக்கியம்' என்று பெயரிட்டவர்**
அ) புதுமைப்பித்தன் ஆ) சண்முக சுந்தரம்
இ) கி.ராஜநாராயணன் ஈ) ஜெயகாந்தன்

5. **'சொற்கேட்டார்க்குப் பொருள் கண் கூடாதல்' என்று கூறியவர்**
அ) தொல்காப்பியர் ஆ) பேராசிரியர்
இ) உரையாசிரியர் ஈ) பவனந்தியார்

6. **'முகம்' என்ற கவிதையை எழுதியவர்**
அ) அய்யப்ப மாதவன் ஆ) சி.மணி
இ) சுகந்தி சுப்பிரமணியன் ஈ) நகுலன்

7. **'கண்டான்' என்னும் சொல்லின் சரியான பகுபத உறுப்பிலக்கண பிரிப்பு முறை**
அ) காண்டு + ஆன்
ஆ) காண் + ட் + ட் + ஆன்
இ) காண் (கண்) + ட் + ஆன்
ஈ) கண் + ட் + ஆன்

8. **'கோடை மழை' சிறுகதையின் ஆசிரியர்**
அ) பாலசந்திரன் சுள்ளிக்காடு
ஆ) சாந்தா தத்
இ) உத்தம சோழன் ஈ) பூமணி

9. **கூற்று** : உவமை உருவகம் போல படிமும் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.
**காரணம்** : எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்திணை விளக்குவதில்லை.
அ) கூற்று தவறு, காரணம் சரி
ஆ) கூற்று தவறு, காரணம் தவறு
இ) கூற்று சரி, காரணம் தவறு
ஈ) கூற்று சரி, காரணம் சரி

10. **'Deviation' என்பதன் தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்கவும்**
அ) காரணி ஆ) விலக்கம்
இ) குறியீடு ஈ) சராசரி

11. **பொருத்தித் தேர்க.**

| | |
|---|---|
| அ) மருதன் | - 1. தலைக்குளம் |
| ஆ) வெள்ளைச்சாமி | - 2. முதல்கல் |
| இ) ரிட்டையர்டு ஜட்ஜ் | - 3. நடிகர் திலகம் |
| ஈ) ராஜீவ்நாத் | - 4. உரிமைத்தாகம் |

அ) 4 2 1 3 ஆ) 4 1 2 3
இ) 4 3 2 1 ஈ) 4 1 3 2

12. **'பஞ்ச காப்பியம்' என்னும் சொற்றொடர் பயன்படுத்தப்பட்ட நூல்**
அ) நன்னூல் ஆ) தண்டியலங்காரம்
இ) தமிழ்விடு தூது ஈ) மாறனலங்காரம்

13. **'கிரியை' - என்ற சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்**
அ) விழா ஆ) சொற்பொழிவு
இ) காட்சி ஈ) மரபு

14. **சரியான நிறுத்தற்குறியுடைய சொற்றொடரைக் கண்டுபிடிக்கவும்**
அ) ''பெரியார் வி.சி.கணேசனுக்கு சிவாஜி கணேசன் என்று பெயரிட்டார்''.
ஆ) பெரியார், வி.சி.கணேசனுக்கு 'சிவாஜி கணேசன்' என்று பெயரிட்டார்.
இ) 'பெரியார்', வி.சி.கணேசனுக்கு 'சிவாஜி கணேசன்' என்று பெயரிட்டார்!
ஈ) பெரியார் வி.சி.கணேசனுக்கு, சிவாஜி கணேசன் என்று பெயரிட்டார்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



## பகுதி - II

**பிரிவு - 1 3x2=6**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

15. புண்வேறு - விழுப்புண் வேறு விளக்குக.
16. நாட்டுப்புற இலக்கியங்கள் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
17. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.
18. ஒருமுக எழினி, பொருமுக எழினி குறிப்பு எழுதுக.

**பிரிவு - 2 2x2=4**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

19. சென்னை நகரின் பழமையான கோயில்களைக் குறிப்பிடுக.
20. பருவத்தே பயிர் செய் - நேரமேலாண்மையோடு பொருத்தி எழுதுக.
21. எவற்றையெல்லாம் பசுமைக்குடில் வாயுக்கள் என்கிறோம்?

**பிரிவு - 3 7x2=14**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

22. **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
    அ) தந்தனன் ஆ) தாங்கிய
23. **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**
    அ) பூம்பாவாய் ஆ) வானமெல்லாம்
24. **மரபுப் பிழையை நீக்கி எழுதுக.**
    யானைத் தொழுவத்தில் அனில்குட்டி விளையாடினது.
25. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?
26. **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**
    அ) தொலைவில் தெரிவது அரசனின் மாளிகை
    ஆ) அங்கே ஓடுவது நாய்கள் அன்று.
27. **விடைக்கேற்ற வினா அமைக்கவும்.**
    அ) யாவரும் கேளிர் என்பது தமிழர் நற்பண்பின் வளர்ச்சி.
    ஆ) உப்பு விளையும் களத்திற்கு 'அளம்' என்று பெயர்.
28. **தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.**
    அ) உபாத்தியாயர் நெடுங்கணக்கை சொல்லி கொடுக்க, மாணக்கன் அதனை பின்பற்றி சொல்லுவான்.
    ஆ) இரட்டை கிளவிச் சொற்களை சேர்த்து எழுத வேண்டும்.
29. **மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து ஒரே சொற்றொடரில் அமைக்கவும்.**
    கலி, களி, கழி
30. **கலைச்சொல்லாக்கம் தருக.**
    அ) Log in, ஆ) Patrol

## பகுதி - III

**பிரிவு - I 2x4=8**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

31. 'எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
32. 'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' - இத்தொடரின் வழி பண்டமாற்று வாணிகத்தை விளக்குக.
33. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.
34. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.

**பிரிவு - 2 2x4=8**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

35. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்கம் தருக.
36. அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள் கருதுவன யாவை?
37. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
38. வேளாண் மேலாண்மைக் குறித்து நீவீர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

**பிரிவு - 3 3x4=12**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

39. சொற்பொருள் பின்வருநிலையணி அல்லது ஏகதேச உருவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
40. **தமிழாக்கம் தருக.**

    Periyar was not only a great soial revolutionary; he was something more than that. He is known as a great champion of the unerpiviledged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep - tooted and appeared to be permanent features of our society until periyar come on the scene.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

41. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் எழுதிப் பொருளை அறிந்து தொடரமைக்க.
அ) வெங்காயம் ஆ) வேங்கை

42. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி ஏற்புடைய நயங்கள் மூன்றினை எழுதுக.

பூமிச்சருகாம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே - கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை - செலுத்தி
இரவலரோடு பேசுவேன்
இரவெரிக்கும் பரிதியை - ஏழை
விறகெரிக்க வீசுவேன் - நா. காமராசன்

43. பின்வரும் பழமொழிகளை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) சிறுதுளி பெருவெள்ளம் (அ)
காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. 3x6=18**

44. கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க. **(அல்லது)**
எச்.ஏ.கிருட்டிணனார் 'கிறித்துவக் கம்பர்' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது எவ்வாறு? விளக்குக.
**(அல்லது)**
நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. 'ஊர் கூடித்தேர் இழுக்கும் போதும்' தேர் வடத்தைப் பிடிக்கும் முதல் கரமாக இருந்த மருதனின் பண்பு நலத்தை விவரி. **(அல்லது)**

**1x6=6**

சங்ககால வரலாற்றை அறிந்து கொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது விளக்குக.

## பகுதி - V

47. **அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4+2=6
அ) 'அறவும் புகழும்' - எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்
ஆ) 'தொடர்பு' என முடியும் குறள்.

## பெற்றோர் ஆசிரியர் கழகம் -1

## பகுதி - I

**அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 14x1=14**

**ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக:**

1. **பொருத்தி விடை தேர்க**

| | |
|---|---|
| அ) உரிமைத்தாகம் | 1. பாரசீகக் கவிஞர் |
| ஆ) அஞ்ஞாடி | 2. பூமணி |
| இ) ஜலாலுதீன் ரூமி | 3. பக்தவச்சல பாரதி |
| ஈ) தமிழர் குடும்பமுறை | 4. சாகித்திய அகாதெமி |

அ) 2,4,3,1 ஆ) 3,4,1,2
இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1

2. **"மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேர் இலாத தமிழ்"**
**இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்**
அ) சீர்மோனை அடி எதுகை
ஆ) சீர்மோனை சீர் எதுகை
இ) அடி எதுகை சீர் மோனை
ஈ) சீர்எதுகை அடி மோனை

3. **பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது - என்று கடிதம் எழுதியவர்**
அ) நெல்லையப்பர் ஆ) பாரதியார்
இ) வாணிதாசன் ஈ) பாரதிதாசன்

4. **எழுத்தாணிகள் எத்தனை வகைப்படும்?**
அ)2 ஆ)3
இ)4 ஈ)5

5. **குழிமாற்று எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?**
அ) இலக்கியம் ஆ) கணிதம்
இ) புவியியல் ஈ) வேளாண்மை

6. **வேறுபட்டதைக் குறிப்பிடுக**
அ) அண்மைக் காட்சித் துணிப்பு
ஆ)சேய்மைக் காட்சித் துணிப்பு
இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு

7. **ச.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற 'மயிலை சீனி. வேங்கடசாமி' எழுதிய நூல் .**
அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் ஈ) கிறிஸ்தவமும் தமிழும்

8. **திட்டம் என்னும் தலைப்பில் வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கு தவங்கள் எதற்காக? வரம் எதற்குக் குறியீடாகிறது?**
அ) அமுத சுரபி ஆ) ஆதிரைப்பருக்கை
இ)திட்டம் ஈ) பயனற்ற விளைவு



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**9. தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் என்னும் விதிப்படி அமைந்த சொல்**
அ) மண்ணில் ஆ) திரைப்படம்
இ) இல்லை ஈ) பின்னிரவில்

**10. தொல்காப்பியர் குறிப்பிடும் 'மெய்ப்பாடு'**
அ)ஆறு ஆ) ஏழு இ) எட்டு ஈ) ஒன்பது

**11. ஐராவதம் மகாதேவன் கல்வெட்டு ஆய்வில் எடுக்கப்பட்ட ஆண்டுகள்**
அ)20 ஆ)30 இ)40 ஈ)20

**12. தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல்**
அ)தொல்காப்பியம்
ஆ)புறப்பொருள் வெண்பாமாலை
இ) தொன்னூல் விளக்கம் ஈ) நன்னூல்

**13. கண்டான் என்னும் சொல்லைப் பிரிக்கும் முறை**
அ) காண் + ட்+ஆன் ஆ) காண்(கண்)+ட்+ஆன்
இ)காண் +ட+ட+ஆன் ஈ) காண்டு +ஆன்

**14. உவமேயத்தைக் கேட்போர் ஊகித்துக் கொள்ளுமாறு உவமையை மட்டும் கூறுவது ----------**
அ) உவமை ஆ)உவமேயம்
இ) உத்தி ஈ)உள்ளுறை உவமம்

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்**

### பிரிவு - 1 3x2=6

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக**

15. சிற்பி பாலசுப்பிரமணியம் - குறிப்பு வரைக.
16. 'வாகைத்திணை' பற்றி விளக்குக.
17. எவற்றை நாம் வரவேற்று விருந்தோம்ப வேண்டும் என்று 'ஜலாலுதீன் ரூமி' கூறுகிறார்?
18. உமணப் பெண்ணின் தோற்றம் பற்றிக் கூறுக.

### பிரிவு - 2 2x2=4

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

19. வித்தியாரம்பம் என்பது யாது?
20. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?
21. திரைப்படத்துறை ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழில் என்பது பற்றி எழுதுக.

### பிரிவு -3 7x2=14

**எவையேனும் ஏழுனுக்கு விடை தருக**

22. **பொருளுணர்ந்து சொற்றொடரில் அமைத்து எழுதுக.**
தளை, தலை,தழை
23. **சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?**
திருவளர்ச்செல்வன் , திருவளர்செல்வன்
24. பேசுவார் - உறுப்பிலக்கணம் தருக.
25. பூம்பாவாய் - பிரித்துப் புணர்ச்சி விதி தருக.
26. தொடர்நிலை என்பது யாது?
27. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. - வெங்காயம்.
28. எழுதும் போது ஏற்படும் பிழைகள் யாவை?
29. **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**
ஷூட்டாண்ட விளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.
30. **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**
மானம் பார்த்த பூமியால் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

## பகுதி - III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

### பிரிவு - 1 2x4=8

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

31. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.
32. குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டுக.
33. நெல்லின் நேரே வெண்கல் உப்பு - பண்டமாற்று வணிகத்தை இத்தொடரின் வழி விளக்குக.
34. நாட்டிய அரங்கின் அமைப்பையும் இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

### பிரிவு - 2 2x4=8

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

35. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் நோக்கில் அழகியல் கூறுகளில் சொற்புலம் பற்றி எழுதுக.
36. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.
37. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.
38. அறிவின் நகரம் சென்னை என்பதற்கான சான்றுகள் நான்கு தருக.

### பிரிவு - 3 3x4=12

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக**

**குறிப்பு:** செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு மட்டும் வினா எண் 42க்குப் பதிலாக மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது.

39. 'ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்' இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



**40. இலக்கிய நயம் பாராட்டுக (மையக் கருத்துடன் மூன்று நயங்கள் சுட்டுக).**

அந்தியிருளவர் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன் திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீ தான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவெண் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்க்கைச் சித்தரித்த வண்ணந் தானோ?

- பாரதிதாசன்.

**41. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்குக் கவிதை புனைக.**

இயற்கை ( அல்லது) நாடு

**42. தமிழாக்கம் தருக.**

அ) A white woman, about 50 years old, was seated next to a black man. Obviously disturbed by this, she called the airhostess, "Madam, what is the matter? The hostess asked " you placed me next to a black man give me an alternative seat" The hostess replied went away and came back a few minutes later, madam, Just as I thought, there are no other available seats in the economy class.

**ஆ) செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மாற்று வினா**

**பத்தியைப் படித்துப்புரிந்து வினாக்களுக்கு விடையளி:**

சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ உடற்கல்வியியல் கல்லூரியில் 42 ஆவது சென்னை புத்தகக் காட்சி நடைபெறுகிறது. தென்னிந்திய புத்தக விற்பனையாளர் பதிப்பாளர் சங்கம் (ப பாசி) சார்பில் ஆண்டுதோறும் புத்தகக் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இப்போது 42 ஆவது புத்தகக் கண்காட்சி நந்தனம் ஒய்.எம்.சி ஏவில் ஜனவரி 4 ஆம் தேதி தொடங்கி 20 ஆம் தேதி வரை தொடர்ந்து 17 நாட்கள் கோலாகலமாக நடைபெறுகிறது. 800 அரங்குகளும், 12 இலட்சம் தலைப்புகளில் 1.5 கோடி புத்தகங்களும் இடம் பெறுகின்றன. 10% தள்ளுபடியும் வழங்கப்பட்டுள்ளது. நுழைவுக்கட்டணம் ரூ10/- வாருங்கள் புத்தகங்களை வாசிப்போம். வாழ்க்கையை நேசிப்போம்.

**வினாக்கள்:**

1. சென்னையில் எங்கு புத்தகக்கண்காட்சி நடைபெறுகிறது?
2. புத்தகக் கண்காட்சி எப்போது தொடங்கி நடைபெறுகிறது? எத்தனை நாட்களாக நடைபெறுகிறது?
3. எத்தனை அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன?
4. எத்தனை சதவீதம் தள்ளுபடி வழங்கப்பட்டு உள்ளது?
5. நுழைவுக் கட்டணம் எவ்வளவு?

(அல்லது)

43. உங்கள் 'கனவு ஆசிரியர்' குறித்து கட்டுரை எழுதுக.

## பகுதி - IV

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. 3x6=18**

44. அ. சினத்தைக் காத்தால் வாழ்க்கை மேம்படும். இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.

**(அல்லது)**

ஆ. கவிதை எழுத அறிய வேண்டியவனவாக கவிஞர் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

45. அ. மதராசப்பட்டினம் பற்றி விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் விளக்கம் தருக.

46. அ. கோடைமழை கதை வாயிலாக மனிதப்பண்பு பற்றி விளக்குக.

**(அல்லது)**

ஆ. 'முதல் கல்' என்ற உத்தமசோழன் அவர்கள் எழுதிய கதை பற்றி விளக்கி எழுதுக.

## பகுதி - V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.**

**4+2=6**

அ. துன்புளது ... என்று தொடங்கும் கம்பராமாயணச் செய்யுள்

ஆ. 'அறிவு' என முடியும் குறட்பா.

# பெற்றோர் ஆசிரியர் கழகம் -2

## பகுதி - I

**அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:**

**14x1=14**

**ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக:**

1. **பொருந்தி விடை தேர்க:**

| | |
|---|---|
| அ) தமிழ் அழகியல் | 1. பரலி சு.நெல்லையப்பர் |
| ஆ) நிலவுப்பூ | 2. தி.சு. நடராசன் |
| இ) கிடை | 3. சிற்பி.பாலசுப்ரமணியம் |
| ஈ) உய்யும் வழி | 4. கி.ராஜநாராயணண் |

அ) 4,3,2,1 ஆ)1,4,2,3
இ)2,4,1,3 ஈ)2,3,4,1



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

2. **மனித சமூகத்தின் அடிப்படை அலகு**
அ) குலம் ஆ)கூட்டம்
இ) குடும்பம் ஈ)பெருங்குழு
3. **பழந்தமிழர் ஓர் ஆண்டை ------------ பருவங்களாக வகைப்படுத்தினர்.**
அ) நான்கு ஆ) ஆறு இ)எட்டு ஈ)பத்து
4. **கவிஞர் சுரதா நடத்திய கவிதை இதழ் ------------.**
அ) இலக்கியம் ஆ) காவியம்
இ)ஊர்வலம் ஈ)விண்மீன்
5. **நெடுநல்வாடை ----------- அடிகளைக் கொண்டது.**
அ)144 ஆ)150 இ)188 ஈ)196
6. **'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்**
அ) இலக்கியம் ஆ)கணிதம்
இ)புவியியல் ஈ) வேளாண்மை
7. **மதராசப்பட்டினம் என்று அழைக்கப்பட்ட பகுதிகள் -----**
அ) வடசென்னைப் பகுதிகள்
ஆ) தென் சென்னைப் பகுதிகள்
இ) மத்திய சென்னைப் பகுதிகள்
ஈ) இவை மூன்றும்
8. **பிழையான தொடரைக் கண்டறிக**
அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்
ஆ) மலை மீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
இ) காளையில் பூத்த மல்லிகை மணம் வீசியது.
ஈ) நெற்பயிர்கள் நீரில் முழ்கின
9. **பொருந்தாத சொல்லை அறிக**
அ)உறுப்பினர் ஆ) குழுவினர்
இ)இயக்குனர் ஈ)ஊரினர்
10. **வெண்பாவிற்குரிய ஓசை**
அ) செப்பலோசை ஆ) அகவலோசை
இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை
11. **படிமம் என்பதன் பொருள்**
அ) சொல் ஆ)செயல்இ)காட்சி ஈ)ஒலி
12. **மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி**
அ) குறியீடு ஆ) படிமம்
இ) அங்கதம் ஈ) தொன்மம்
13. **உயிரெழுத்துக்கள் ---------- வகைப்படும்**
அ) மூன்று ஆ) ஆறு இ) எட்டு ஈ) இரண்டு
14. **'முதல்கல்' என்னும் சிறுகதையின் ஆசிரியர்**
அ) பூமணி ஆ) உத்தமசோழன்
இ) பிரபஞ்சன் ஈ) நா.காமராசன்

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்**

### பிரிவு - 1 3x2=6

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக**

15. எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் - யாருக்கு?
16. புதுக்கவிதை என்றால் என்ன?
17. சிலப்பதிகாரத்தின் வேறு பெயர்கள் யாவை?
18. உப்பளம் என்றால் என்ன?

### பிரிவு - 2 2x2=4

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக**

19. அக்காலத்துக் கல்வி முறையில் - மனனப்பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?
20. வித்தியாரம்பம் என்பது யாது?
21. சென்னையின் நீர்நிலைகளையும், வடிகால்களையும் குறித்து எழுதுக.

### பிரிவு -3 7x2=14

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக**

22. **பொருளுணர்ந்து சொற்றொடரில் அமைத்து எழுதுக.**
களம் , கலம்
23. **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக**
நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.
24. 'வெண்பாவின்' இலக்கணம் கூறுக.
25. **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**
ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.
26. பூம்பாவாய் - பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.
27. **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**
அ. நான் சுடுதண்ணீரில் குளித்தேன்.
28. **தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**
முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்
29. ''செவியறிவுறூஉ'' துறையை விளக்குக.
30. **புணர்ச்சி விதி தருக.**
நன்மொழி

## பகுதி - III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்**

### பிரிவு -1 2x4=8

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

31. 'பங்குனி உத்திரத் திருவிழா' பற்றி திருஞான சம்பந்தர் கூறுவன யாவை?
32. 'அறிவின் மேன்மை' பற்றி திருவள்ளுவர் கூறுவன யாவை?



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



33. 'கடையெழு வள்ளல்களையும்' அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.
34. 'எண்வகை மெய்ப்பாடுகள்' எவை? மெய்ப்பாட்டில் முறைப்படி விளங்கும் நூல் எது?

**பிரிவு - 2 2x4=8**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் விளக்கி எழுதுக.
36. பின்னணி இசை, படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டம் தருகிறது? சான்று தருக
37. இந்தோ - சராசனிக் கட்டடக்கலை குறித்து எழுதுக
38. அறிவின் நகரம் சென்னை என்பதற்கான சான்றுகள் நான்கு தருக

**பிரிவு - 3 3x4=12**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

**குறிப்பு** : செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு மட்டும் வினா எண் 42க்குப் பதிலாக மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

39. 'தொழில் உவமை அணியை' எடுத்துக்காட்டுடன் விளக்குக. **(அல்லது)**
'எடுத்துக்காட்டு உவமை அணியை' எடுத்துக்காட்டுடன் விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக: (ஏற்புடை நயங்கள் மூன்றினை சுட்டி எழுதுக)

வெட்டியடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணையிடிக்குது
கொட்டியிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத் திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பிவீரா

- பாரதியார்

**41. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்குக் கவிதை புனைக.**
'கடல்' அல்லது ' மழை'

**42. அ. தமிழாக்கம் தருக.**

1. Learning is a treasure that will follow its owner every were.
2. A New language is a new life.
3. If you want people to understand you speak their language.
4. Knowledge of language is the doorway to wisdom.

**ஆ) செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மாற்று வினா:**

**பின்வரும் பத்தியை கவனமாகப் படித்துத் தொடரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

நம் சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல அது நம்பிக்கை மையம். சென்னையை மையமிட்டு உருவான தொழிற்சாலைகளும், நிறுவனங்களும் ஏற்படுத்திய நேரடி, மறைமுக வேலை வாய்ப்புகள் நகரின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகின்றன. இந்திய அளவில் மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை வகிக்கும் சென்னை, மின்னணுப் பொருள்களை உருவாக்கும் மையமாகவும் திகழ்கிறது.

**வினாக்கள்**

1. சென்னை எத்தகையது?
2. சென்னை நகர வளர்ச்சியின் சிறப்பு யாது?
3. சென்னை எதில் முன்னிலை வகிக்கிறது?
4. சென்னை எப்படி முன்னிலை வகிக்கிறது?
5. சென்னையில் அமைந்துள்ளவை எவை?

43. 'சிறு துரும்பும் பல்குத்த உதவும்'
**(அல்லது)**
'முயற்சி திருவினை யாக்கும்'
என்ற பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்திக் காட்டுக.

**பகுதி - IV**

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடையளி. 3x6=18**

44. செய்நன்றி அறிதல் அறம் என்பதை வாயுறைவாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.
**(அல்லது)**
நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையை விளக்குக.
45. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பவற்றை எழுதுக.
**(அல்லது)**
சென்னை மாநகரின் வரலாறும் வடிவழகும் குறித்து கட்டுரை எழுதுக.
46. மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.
**(அல்லது)**
கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகள் யாவை?

**பகுதி -V**

**47. பின்வரும் மனப்பாடப் பகுதிகளை அடிமாறாமல் எழுதுக. 4+2=6**

அ. ஒருமையுடன் ------ என்று தொடங்கும் 'தெய்வமணிமாலை' செய்யுட் பகுதியை எழுதுக
**(அல்லது)**
ஆ. நன்று என்று முடியும் குறட்பாவை எழுதுக.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# டால்பின் பப்ளிகேசன்ஸ் புத்தகங்கள் கிடைக்குமிடங்கள்

| கடையின் பெயர் | தொலைபேசி எண் |
|---|---|
| **சென்னை** | |
| M.K. ஸ்டோர்ஸ் | 044-25386143 |
| F.A. ஸ்டோர்ஸ் | 97105 68240 |
| அராபா புக் டிரேடர் | 044-25987868 |
| கிங்ஸ் புக் ஹவுஸ் | 044-25367660 |
| பிஸ்மி புக் சென்டர் | 044-25380666 |
| லிம்ரா புக் சென்டர் | 99400 39953 |
| பிரின்ஸ் புக் ஹவுஸ் | 044-42053926 |
| பழனிராஜ் | 98414 94023 |
| M.R. புக் ஸ்டோர்ஸ் | 91766-64596 |
| நூர் புக் சென்டர் | 81487-23350 |
| **தாம்பரம்** | |
| ஸ்ரீராம் அன் கோ | 044-22266431 |
| **ரெட்ஹில்ஸ்** | |
| திருமலை புக் சென்டர் | 98411 53261 |
| **மதுரை** | |
| மனோ புக் சென்டர் | 0452-2621577 |
| ஜெயம் புக் சென்டர் | 0452-2623636 |
| U. சந்திரமோகன் | 99426-39194 |
| M.V. சதீஸ்குமார் | 98433-49892 |
| சன்மதி டிரேடர்ஸ் | 97872 61333 |
| M.P.S.S. புக் ஷாப் | 8098151515 |
| வெற்றி புக் சென்டர் | 9843461624 |
| **கோவை** | |
| மெஜெஸ்டிக் புக் ஹவுஸ் | 99943 43334 |
| ராதாமணி ஸ்டோர்ஸ் | 0422-2392122 |
| கண்ணன் புத்தக நிலையம் | 95858 88890 |
| ராஜகணபதி புத்தக நிலையம் | 94430 06703 |
| சேரன் புக் ஷாப் | 0422-2396623 |
| **பொள்ளாச்சி** | |
| கலைமகள் ஸ்டோர்ஸ் | 04259-228738 |
| அமிர்தம் பேப்பர் மார்ட் | 98651 03333 |
| **அன்னூர்** | |
| ஸ்ரீ கார்த்திகேயன் ஸ்டோர்ஸ் | 94436 52226 |
| **திருச்சி** | |
| ராசி பப்ளிகேசன்ஸ் | 0431-2703692 |
| சுமதி பப்ளிகேசன்ஸ் | 0431-2703230 |
| ஸ்ரீ முருகன் புக்சென்டர் | 0431-2703076 |
| காயத்ரி புக் ஹவுஸ் | 97517 87873 |
| **துறையூர்** | |
| கே.கே.ஆர் ஸ்டோர்ஸ் | 98656 58650 |
| **விழுப்புரம்** | |
| சபரிநாதன் பிரதர்ஸ் | 04146-222581 |
| **கள்ளக்குறிச்சி** | |
| கிருபா ஸ்டேசனரி | 04151-223114 |
| **சேலம்** | |
| விக்னேஷ் புக் சென்டர் | 042-74020409 |
| ஜி.ஆர் பப்ளிகேசன்ஸ் | 93446 39631 |
| **கடலூர்** | |
| பெல் புத்தக நிலையம் | 04142-652252 |

| கடையின் பெயர் | தொலைபேசி எண் |
|---|---|
| **சிதம்பரம்** | |
| வெற்றி புக் சென்டர் | 94432 22648 |
| ஜெயம் புக் சென்டர் | 93630 60516 |
| **தஞ்சாவூர்** | |
| ஸ்ரீனிவாசா புக் சென்டர் | 94865 25806 |
| செந்தில்குமார் | 9095902187 |
| **கும்பகோணம்** | |
| ஸ்ரீ மார்கண்டேயா புக் டிப்போ | 0435-2420750 |
| **திருவண்ணாமலை** | |
| பிச்சாண்டி முதலியார் | 94432 14725 |
| **வேலூர்** | |
| பூமிநாதன் | 93451 72090 |
| வேலூர் புக் சென்டர் | 04162-213250 |
| **திருப்பத்தூர் (வேலூர்)** | |
| ரவிக்குமார் | 97863 15453 |
| **ஈரோடு** | |
| செந்தில் புக் பேலஸ் | 04242-214886 |
| தனா புக் கம்பெனி | 0424-2221230 |
| **பள்ளிப்பாளையம்** | |
| அம்மன் சஞ்சீவி புக் சென்டர் | 9786040230 |
| **பவானி** | |
| தனா புக் சென்டர் | 9486230921 |
| **கோபிசெட்டிப்பாளையம்** | |
| கிராவிட்டி புக் வேர்ல்டு | 9385728528 |
| **திருவாரூர்** | |
| வி. ராமச்சந்திரன் | 94866 86627 |
| **ராமநாதபுரம்** | |
| ராமநாதசுவாமி புக் ஷாப் | 94434 91772 |
| அருணா நோட் புக் சென்டர் | 9842537005 |
| **சிவகங்கை** | |
| நியூ அய்யனார் புக் ஷாப் | 9994079013 |
| **கிருஷ்ணகிரி** | |
| ஸ்ரீ ரமணா புக் ஹவுஸ் | 90253 13661 |
| **திருநெல்வேலி** | |
| ஆறுமுகம் பிள்ளை புக் சென்டர் | 98949-17088 |
| **திண்டுக்கல்** | |
| அய்யனார் புக் சென்டர் | 95008-62024 |
| **பழனி** | |
| தர்சன் புக் எம்போரியம் | 8667218504 |
| **கோவில்பட்டி** | |
| இந்திரா பேப்பர் ஸ்டோர் | 96777-38071 |
| **திருப்பூர்** | |
| மகேஸ்வரி புக் ஸ்டால் | 94420-04254 |
| **தேனி** | |
| K. சுப்புராஜ் | 88703-16922 |
| மாயா புக்ஸ் & கிப்ட்ஸ் | 04554-270809 |
| **நாமக்கல்** | |
| ஸ்ரீ கணபதி புக் சென்டர் | 70948-07585 |
| **விருதுநகர்** | |
| சேது புக் சென்டர், | 94864-61400 |

salai.Net www.Trb


OUR PUBLICATIONS

English Guide & Exercise Book - Std: IX,X,XI,XII

தமிழ் உன்னால் முடியும் - வகுப்பு : IX,X,XI,XII

அறிவியல் பயிற்சி ஏடு - வகுப்பு : X

சமூக அறிவியல் பயிற்சி ஏடு - வகுப்பு : IX & X

For Orders Contact

98653 06197 / 89256 77710 / 99435 67646

Orders through WhatsApp : 93453 14146

Orders through SMS : 93453 30937

E-mail ID : dolphin.pub2005@gmail.com

டால்பின் பப்ளிகேசன்ஸ்®

239, கீழப்பட்டி தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம், த.நா.

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.in


ur Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@g